உ.

[illegible]சிதம்பரம் [illegible]

# திருநெல்வாயிலரத்துறை

என்று வழங்கும்

# திருவரத்துறைப்புராணம்.

இஃது

ஸ்ரீ திருவரத்துறைவாசியாகிய

சோதிடம்

காண்டீப

[illegible]சாரி யென்பவரது

ரெங்கசாமி அய்யங்காரவர்களால்

இயற்றப்பட்டு

மேற்படி ஸ்தலாபிமானியாகிய

ஸ்ரீ சுப்பராயதேசிகரவர்கள்

[illegible]

மேற்படி ரெங்கசாமிஅய்யங்காரவர்களால்

சிதம்பரம்

டி. S. சதாசிவம்பிள்ளையினுடைய

சண்முகசுந்தரவிலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[illegible]

1911ஆம் மேமீ 7உ.

திருச்சிற்றம்பலம்.

## திருநெல்வாயிலரத்துறை

### திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்

பண் பியந்தைக் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால்சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௧)

ஆருவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சித்தர்கடொழச்செல்வதன்றால்
வாரிமாமலருந்திவருபுனனிவாமல்குகரைமே
லாருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௨)

பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாதபாவிகடொழச்செல்வதன்றான்
மணிகலந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமே
லணிகலந்தநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௩)

துன்னவாடையொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
யுன்னிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றாற்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனனிவாமல்குகரைமே
லன்னமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௪)

வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
யுருகிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றான்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிநிவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௫)

உரவுநீர்ச்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவிநைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்றாற்
குரவநீடியசோலைக்குளிர்புனனிவாமல்குகரைமே
லரவமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௬)

நீலமாமணிமிடற்றானீறணிசிவனெனப்பேணுஞ்
சீலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்றாற்
கோலமாமலருந்திக்குளிர்புனனிவாமல்குகரைமே
லாலுஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (எ)

செழுந்தண்மால்வரையெடுத்தசெருவலியிராவணனலற
வழுந்தவூன்றியவிரலான்போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனனிவாமல்குகரைமே
லழுந்துஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (அ)

நுணங்குநூலயன்மாலுமிருவருநோக்கரியானை
வணங்கிநைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்றான்
மணங்கமழ்ந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமே
லணங்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௯)

சாக்கியப்படுவாருஞ்சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப்பாவிகடொழச்செல்வதன்றாற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனனிவாமல்குகரைமே
லார்க்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே (௧௦)

கறையினார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுசுவாமிகள்

### திருவரத்துறை திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கடவுளைக்கடலுள்ளெழுநஞ்சுண்ட
வுடலுளானையொப்பாரிலாதவெம்
மடலுளானையரத்துறைமேவிய
சுடருளானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௧)

கரும்பொப்பானைக்கரும்பினிற்கட்டியை
விரும்பொப்பானைவிண்ணோருமறிகிலா

வரும்பொப்பானையரத்துறைமேவிய
சுரும்பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௨)

ஏறொப்பானையெல்லாவுயிர்க்குமிறை
வேறொப்பானைவிண்ணோருமறிகிலா
வாறொப்பானையரத்துறைமேவிய
நூறொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௩)

பரப்பொப்பானைப்பகலிருணன்னிலா
விரப்பொப்பானையிளமதிசூடிய
வரப்பொப்பானையரத்துறைமேவிய
சுரப்பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௪)

நெய்யொப்பானைநெய்யிற்சுடர்போல்வதோர்
மெய்யொப்பானைவிண்ணோருமறிகிலா
ஐயொப்பானையரத்துறைமேவிய
கையொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௫)

நிதியொப்பானைநிதியிற்கிழவனை
விதியொப்பானைவிண்ணோருமறிகிலா
ரதியொப்பானையரத்துறைமேவிய
கதியொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௬)

புனலொப்பானைப்பொருந்தலர்தம்மையே
மினலொப்பானைவிண்ணோருமறிகிலா
ரனலொப்பானையரத்துறைமேவிய
கனலொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௭)

பொன்னொப்பானைப்பொன்னிற்சுடர்போல்வதோர்
மின்னொப்பானைவிண்ணோருமறிகிலா
ரன்றொப்பானையரத்துறைமேவிய
நன்றொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௮)

காழியானைக்கனவிடையூருமெய்
வாழியானைவல்லோருமென்றின்னவ
ராழியான்பிரமற்குமரத்துறை
ஊழியானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௯)

கலையொப்பானைக்கற்றார்க்கோரமுதினை
மலையொப்பானைமணிமுடியூன்றிய
வலையொப்பானையரத்துறைமேவிய
நிலையொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௪௦)

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்

பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கல்வாயகிலுங்கதிர்மாமணியுங் கலந்துந்திவருநிவவின்கரைமே, னெல்வாயிலரத்துறைநீடுறையுந்நிலவெண்மதிசூடியநின்மலனே, நல்வாயில்செய்தார்நடந்தாருடுத்தார்நரைத்தாரிறந்தாரென்றுநானிலத்திற், சொல்லாய்க்கழிகின்றதறிந்தடியேன் றொடர்ந்தேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே. (௧)

கழிமாமிளகும் மிகுவன்மரமு மிகவுந்திவருந்நிவவின்கரைமே, னெறிவார்குழலாரவர்காணநடஞ்செய்நெல்வாயிலரத்துறைநின்மலனே, வறிதேநிலையாதவிம்மண்ணுலகின்னரனாகவுகந்தனைநானிலையேன், பொறிவாயிலிவ்வைந்தினையும்மவியப்பொருதுன்னடியேபுகுஞ்சூழல்சொல்லே. (௨)

புற்றாடரவமரையார்த்துகந்தாய்புனிதாபொருவெள்விடையூர்தியினா, யெற்றேயொருகண்ணிலனின்னையல்லாநெல்வாயிலரத்துறைநின்மலனே, மற்றேலொருபற்றிலனெம்பெருமான்வண்டார்குழலாண்மங்கைபங்கினனே, யற்றார்பிறவிக்கடனீந்தியேறியடியேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே. (௩)

கோடியர்கோங்கலர்வேங்கையலர்மிகவுந்திவருந்நிவவின்கரைமே, னீடியர்சோலைநெல்வாயிலரத்துறைநின்மலனேநினைவார்மனத்தாய், யோடுபுனற்கரையாமிளமையுறங்கிவிழிந்தாலொக்குமிப்பிறவி, வாடியிருந்துவருந்தல்செய்யாதடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௪)

உலவுமுலகிற்றலைகற்பொழியவுயர்வேரடிழியுநிவவின்கரைமே
னிலவுமயிலாரவர்தாம்பயிலுநெல்வாயிலரத்துறைநின்மலனே

புலனைந்துமயங்கியகங்குழையப்பொருவேலோர்நமன்றமர்தாநலி
யவலமந்துமயங்கியயர்வதன்முன்னடியே னுய்யப்போவதோர்
சூழல்சொல்லே. (௬)

ஏலம்மிலவங்கமெழிற்கனகம்மிகவுந்திவருந்நிவவின்கரைமே
ஞாலமமலர்பொய்கையிலன்னமலிநெல்வாயிலரத்துறையாயொ
ருநெல், வாலூன்றவருந்தும்முடம்பிதனைமகிழாதழகாவலந்தே
னினியான், ஆலினிழலிலமர்ந்தாயமராவடியேனுய்யப்போவதோர்
சூழல்சொல்லே,

சிகரம்முகத்திற்றிரளாரகிலும்மிகவுந்திவருந்நிவவின்கரைமே
னிகரின்மயிலாரவர்தாம்பயிலுநெல்வாயிலரத்துறைநின்மலனே
மகரக்குழைபாய்மணக்கோலமதேபிணக்கோலமதாம்பிறவியிது
தா, னகரமுதலினெழுத்தாகிநின்றாயடியே னுய்யப்போவ தோ
ர்சூழல்சொல்லே. (௭)

திண்டேர்நெடுவீதியிலங்கையர்கோன்றிரடோளிருபஃதுநெ
ரித்தருளி, ஒண்டாடுநெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறை
நின்மலனே, பண்டேமிகநான்செய்தபாக்கியத்தாற் பரஞ்சோதி
நின்னாமம்பயிலப்பெற்றே, னண்டாவமரர்க்கமரர்பெருமானடி
யேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௮)

மாணாவுருவாகியொர்மண்ணளந்தான்மலர்மேலயன்றேடியுங்
காண்டரியாய், நீணீண்முடிவானவர்வந்திறைஞ்சுநெல்வாயிலரத்
துறைநின்மலனே, வாணார்நுதலார்வலைப்பட்டடியேன்பலவின்
கனியீந்ததுபோலவதன்முன், ஆணொடுபெண்ணுமுருவாகிநின்றா
யடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. (௯)

நீருருநெடுவயல்சூழ்புறவினெல்வாயிலரத்துறைநின்மலனைத்
தேரூர்நெடுவீதிநன்மாடமலிதென்னாவலர்கோனடித்தொண்டன
ணி, யாரூரனுரைத்தனநற்றமிழின்மிகுமாலையொர்பத்திவைக
ற்றுவல்லார், காரூர்களிவண்டறையானைமன்னரவராகியொர்விண்
முழுதாள்பவரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

௧

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ அருணகிரிநாதர்

திருவாய்மலர்ந்தருளிய

# திருப்புகழ்.

## திருவரத்துறை.

---

கறுவிமைக்கணிட்டினிதழைத்தியற்
கவிசொலிச்சிரித்—துறவாடி
களவுவித்தையிட்டுளமுருக்கிமுற்
கருதிவைத்தவைப்-பவைசேரத்
தறுகணிற்பறித்திருகழுத்தறத்
தழுவிநெக்குநெக்—குயிர்சோர
சயனமெத்தையிற்செயலழிக்குமித்
தருணிகட்சகப்-படலாமோ
பிறவியைத்தணித்தருளுநிட்களப்
பிரமசிற்சுகக்-கடல்மூழ்கும்
பெருமுனிக்கிராட்பரவுசெப்பதிப்
ப்ரபலகொச்சையிற்-சதுர்வேதச்
சிறுவநிற்கருட்கவிதைநித்திலச்
சிவிகையைக்கொடுத்-தருளீசன்
செகதலத்தினிற்புகழ்படைத்தமெய்த்
திருவரத்துறைப்பெருமானே.

௨

## திருமாந்துறை

ஆங்குடல்வளைந்துநீங்குபல்நெகிழ்ந்து
ஆய்ஞ்சுதளர்சிந்தை-தடுமாறி
ஆர்ந்துளகடன்கள்வாங்கவுமறிந்து
ஆண்டுபலசென்று-கிடையோடே
ஊங்கிருமல்வந்துவீங்குகுடல்நொந்து
வோய்ந்துணர்வழிந்து-வுயிர்போமுன்
ஓங்குமயில்வந்துசேண்பெறஇசைந்து
வூன்றியபதங்கள்-தருவாயே
வேங்கையுமுயர்ந்ததீம்புனமிருந்த

வேந்திழையினின்ப மணவாளா
வேண்டுமவர் தங்கள் பூண்டபதமிஞ்ச
வேண்டியபதங்கள்-புரிவோனே
மாங்கனியுடைந்து தேங்கவயல்வந்து
மாண்புநெல்விளைந்த வளநாடா
மாநதர்தவருட்பர்கோன்பரவிநின்ற
மாந்துறையமர்ந்த-பெருமானே

---

வாலிகண்டபுரத்தைத் துதித்து இத்தலத்தைத் துதித்தலால் இப்புராணத்திற்கூறிய திருமான்றுறையையேயாம்.

இத்தலத்தை சிவக்ஷேத்திரவிளக்கமுதலியவற்றில் திருமாந்துறையென்றும் வழங்குகின்றது.

---

## ஆதிசேடன்றுதி.

ஐந்துளா னைந்துளா னைந்துளா னெனவைந்து வாயினு மறைந்தனன், வந்துமுளன் வந்துமுளன் வந்துளே னெனவைந் துருவமாய்வந்தான், முந்தியேபூசனைக்குரியதே வனைமுனுங்கா ண்பதெவ்வாறெனச், சிந்தையே யுற்றன னொருவராயவர்வரச் சேடனுமண்மிசைப் படிந்தான். (க)

திபாகமன்னனு மருணைதன்றைதனுஞ் சம்புத்
தாகமுற்றதோரீசனும்வாயுவின் றலத்துளோன்றனு
மேகமுற்றவராகபத்தவருடன் கூடியேயெழிலா
யாகமுற்றொருவராயினாரத்துறை லிங்கமூர்த்தியுமே.

## வால்மீகன்றுதி.

வெள்ளைகொண்டிடும் கைலையும் வெண்மதியவனு
வெள்ளைகொண்டிடும் ரிஷபமும் வெள்ளுருழைதானும்
வெள்ளைகொண்டதில் வேட்டநீ விடுத்திலனாகி
வெள்ளையாகிய வாற்றையும் விரும்பினையரனே.

## குருநமசிவாயரருளிய பரமரகசியமாலை.

---

திருவாத்துறையின் முத்தினாற்சமைத்த சிவிகையும் பந்த ருமெதிரே, வரவருள்கொடுத்துப்புகலி காவலர்க்கு வழங்கிய

வண்மையான்மறவே, னருமறைப்பெரியோர் மாதவமுனிவ ரடைந்திடுந் தில்லையம்பதிவாழ், மருவரைக் கயிலைக்கிறைவனே பொன்னம்பலவனே பரமராசியனே.

## ஆதிசங்கராசாரிய சுவாமிகள் ஶ்லோகம்

ஸ்ரீமத வ்யாக்ரமிஸி பாஷவத பாஷெ
ஶ்ருத நதி தீரகவஸிஷ்ட வாரா நாதம்।
ஶிவவத ஶக்ரமத மராவஸிவாவாயம்
தீவ்யவாஸிநாயஹரஹரஷாஸிதஜாவம்॥

உ

# முகவுரை.

அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்த சொரூபராகிய சிவபெருமான் ஆன்மாக்கள் வழிபட்டுய்யும்பொருட்டுத் திருவுருக்கொண்டு வீற்றிருக்கும் சிவஸ்தலங்களுள் நடுநாட்டின்கண் மிகமேன்மையுற்று விளங்குந்தலமாம். இது நிவாநதிக்கரையிலுள்ளது. திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் முதலிய மூவராலும் திருப்பதிகம் பாடப்பெற்றது. நெல்வாயில் அரத்துறையென்றும், பிரமகைவர்த்தபுராணத்தில் தேவர்களுக்குச் சொன்ன சிவஸ்தோத்திரமகிமையில் பஞ்சபூதஸம்மிச்ர சிவஸ்தலமென்றும், வடவாலக்ஷேத்திரமென்றும், ஊழிகாசியென்றும், திருவள்ளுவநாயனார் முதலியோர்களை பெற்ற கலைமகளவதாரமாகிய ஆதியென்பவரது நீசத்துவத்தையொழித்து முத்தியளித்தகாரணத்தால் முத்தி க்ஷேத்திரமென்றும் கூறுந் திருநாமங்கள் வாய்க்கப்பெற்றது. திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் அடியார்கள் திருக்கூட்டத்தோடு இவ்வரத்துறையை நோக்கித் தெரிசிக்கவருங்கால் வழிநடந்துவந்த சிரமத்தோடு மாறன்பாடியில் வந்தமர அதனைப்பொருத திருவரத்துறையப்பர் நெல்வாயிலிலிருக்கின்ற பிராமணர்களுக்கு "ஞானசம்பந்தனம்பாலணைகின்றான்மான முத்தின் சிவிகை மணிக்குடையான சின்னநம்பார் கொண் டருங் கலைக்கோனவன்பாலணைந்து கொடும்மென அருளிச்செய்து அவ்வாறே ஞானசம்பந்தருக்கும்

நாம் மகிழ்ந்தளிக்கும்மவைகொள்ளலாகுங் கொண்டேய்த்தல்செய்வாயென அநுக்கிரகித்துமுத்துப்பல்லக்கும் முத்துக்குடையும் முத்துச்சின்னமும் கொடுக்கப்பெற்றது. ஆதித்துறை திருவாலந்துறை திருமான்றுறை திருஆடுதுறை திருவதிட்டத்துறை திருக்கரத்துறை என்னும் ஆறுதுறைகளுந் தொடர்ந்திருத்தலால் சப்த துறைகளென வழங்கப்பெற்றது. ஆதிசேடன் வால்மீகர் ஆதிசங்கராசாரியர் அருணகிரிநாதர் முதலியோர் வணங்கித்துதித்து அபீஷ்டசித்திகளை யடைந்தது. சேரசோழ பாண்டியர்களால் சிவக்குறிதாபித்துப் பூசிக்கப்பெற்றது. விஸ்வாமித்திரரும் வதிட்டரும் தீர்த்தபுரீசர் முன்பாக வாதஞ்செய்து அனேக அற்புதங்காட்டியது. ஆதிசேடன்பூசித்த காரணத்தால்அரவத்துறை யெனவும் பெயர் வழங்குகின்றது.

சப்தரிஷிகளும், விஷ்ணுவும், சனிபகவானும், அங்காரகனும் பூசித்துமேன்மை யடைந்தது. இத்தகைய அனேக ஐதீகங்களோடு விளங்கிய இந்தஸ்தலத்திற்கு சுமார் 400 பாடல்களுள்ள புராணத்தை திருத்தி அச்சிடவேண்டுமென்ற நோக்கத்தோடு சிலர் வற்புறுத்தியபடியால் ஸ்ரீ ஆனந்தநாயகி சமேத ஸ்ரீவரத்துறைநாதர் திருவருட்டுணைகொண்டு ஒருவாறு பரிசோதித்து வி. அ. சுப்பராயதேசிகர் அவர்கள் பொருளுதவியால் அச்சிடப்பட்டது. சிவபத்திமான்கள் இப்புராணத்தையன்போடும் படித்தும் திருவரத்துறையைத் தெரிசித்து அபிமானித்தும் போகமோக்ஷங்களை யெய்துமாறு திருவருளை வழுத்துகின்றோம். சுபம்.

## புராணிகர் கருத்து.

பெரிதுள தாகும் பெருகிய சூதர் பேசநூற் றலங்களாம
திலும், பெரிதுள தாகும் பேருளார்மூவர் பேர்சொலிப் பாடிய
தலங்கள், பெரிதுள தாகு நந்தியெம்பெருமான் பேசிடும் பெ
ரிய நற்றலங்கள், பெரிதத னுளதோ பேசவே வேறு பெரும்புவி
யுலக மூவிடத்தும். (க)

சூரியவம்சத் தோனுந் தொன்முசு குந்தனென்பான்
பாரியவாரூர் தன்னிற் றியாகரைப் பதிட்டை செய்தான்
சூரியன் புதல்வ னாகுஞ் சுக்ரீவ நாமத் தோன்றல்
பேர்பெற விளக்கு வித்த வெழிலாடு துறை மற்றீதால். (உ)

ஆதலால் தலத்தின் மேன்மை யாரானுஞ்சொல்லப்போமோ
ஓதியமிருகம் புள்ளா லுண்டான தலங்க ளெல்லாம்
தீதுகண் மிகவகற்றிப் பிறவியைத் தீர்க்குமென்றார்
ஆதவன் மகன்றலத்தா லமைபலனறிவாராரே. (௩)

பதவிக்குப் போகத்தக்க பகர்நெறி யீதென்றீசு
முதவிய துறையிவ் வேழு முகந்தநற்புரிகளேழும்
கதவுதலாகக் கொள்ள கைலையான்கருதித் தந்தா
னிதுவென வெண்ணிக் கொண்டேயீசர் தாளடைய நன்றே. (௪)

இன்னதிக் கிச்சை கொண்டே யிருடிகளிவடம் வந்தார்
இன்னதிக் கிச்சைகொண் டேயிசைமணம் வராகன் செய்தான்
இன்னதி தன்னிலாடி லெழிற்கங்கை பலத்திரட்டி
இன்னதிக் கீடேயில்லை யெழிற்றுறை துறையோரேழும். (௫)

௨

உடையார்பாளைய ஸமஸ்தான
வித்துவானும்கம்பராமாயணப்பிரசங்கியுமாகிய
வீரசைவக் கனகசபைக் கவிராயரவர்கள்
இயற்றியது.

---

சீரோங்கு தெய்வச் சிவக்ஷேத்திரமதனு
ளாரோங்கு நெல்வாயரத்துறைக்குப் பாரோங்க
மன்னுபுராணமதை மாணரங்காசாரியென்பா
ருன்னியுரைத்தாருணர்ந்து.

சம்பந்தர் நன்முத்துத் தண்டிகையைப்பெற்றுவப்பா
னின்பம் பெருகு தமிழ்பகி - னன்பால்
சீரரத்துறைசீர் செப்பினனல்லரங்கா
சாரியவனன்பிற்றழைந்து.

தஞ்சாவூர் கோட்டை மஹாவித்துவான்
மகா-ள-ள-ஸ்ரீ கணபதியாப்பிள்ளையவர்கள்.
இயற்றியது.

---

எங்கு நிறைந்தசிவமின்னருளாற் பேருருவாத்
தங்கு மரத்துறைசீர் தாமிசைத்தான்-பொங்குதமிழ்
நல்லரங்காசாரியெனுநாமத்தோன் சோதிடத்தும்
வல்லோனும் வாயன்பின் வாய்ந்து.

சன்னுசிநல்லூர் வித்துவசிரோமணியாகிய
மகா-ள-ள-ஸ்ரீ மே. சண்முகப்படையாச்சியவர்களால்
இயற்றப்பட்டது.

---

வலஞ்சுழிவிநாயகக்கடவுளைவாழ்த்தி
சலஞ்சூழ்புவியிற்சகலருமறிய
நிலந்தனிற்பரமனீடித்துறையு
நிலமாமதனைநேர்ந்திடவெனக்குத்
தென்புவியனைத்துந்தெளிந்தநந்தீச
முன்புளபுராணமொழிவழிகாட்டி
யின்பமாச்சொல்லெனவிறைஞ்சவான்மீக
னன்புடனந்தியகமகிழ்ந்துரைப்பா
னெல்லையிலீசனிருந்தலத்துயர்வை
நல்லதாச்சொல்வேனுணர்ந்தளவி
லம்புவியதனிலனந்தமாலயம்
பம்புறுமவற்றைப்பகருதற்கெளிதோ
சொல்லுதற்கவற்றைச்சோருவன்சேடன்
வல்லனேயானும்வாரிதிப்புவியிற்
றுல்லியமாகச்சொல்லொணாதாயினும்
வல்லுநர்வகுத்தவழிமுறைப்படியே
வேடனையென்றவேடுவமுனிவரே
சொல்லுவலொன்றுசுருதிநான்முறையின்
நல்லதென்றெவரும்நயப்புறும்பெரிய
பிரமகைவர்த்தப்பெருநூலதனுட்

சுரர்தமக்குரைத்தசொல்சிவத்தோத்திரத்
திறைவதுகேண்மதியுறைவதுகேண்மதி
யெல்லைதீர்புகழ்பெறுமிசைமுதுகுன்றஞ்
சொல்லுமவ்வூர்க்குச்சுத்ததென்மேற்கு
நல்லதிருமுட்டநகர்க்குமேற்றிசை
வல்லநல்வசிட்டர்வாழ்துறைக்கீழ்பால்
நல்லூர்வில்வநதிக்குநேர்தெற்கு
நெல்வாயிலரத்துறைநீடுறுந்தலந்தான்
சொல்வார்சிவாநதிசுயம்பார்வடக்கிற்
பல்லாண்டாகப்பாரினன்றுறுமே
தெள்ளுவெள்ளாறுதீர்த்தமதாகு
முன்னிவந்துறுநர்க்குறுகதியளிக்கு
மறுகுதோலணிந்தவரத்துறைநாதரொ
டறிவுருவாம்பிகையானந்தநாயகி
பிரியமாயங்குப்பெயர்ந்திடாதுறைவ
ருரியவத்தலந்தானுணர்வுறப்பெரிதுந்
திருநெறித்தமிழெனுந்திருப்பெயர்புனைந்த
வரியசெய்மூவருமருளுதேவாரமும்
பெற்றதாலதனைச்சொற்றிடற்கெளிதோ
வாதிசங்கரர்தானருந்துதிசெய்தார்
காதலாற்றிருப்புகழ்கவிஞரேறுரைத்தார்
செப்பினார்குருநமசிவாயகுரவரும்
ஒப்பில்வான்மிகியொளிர்தருமனந்தனுந்
திருத்தமாப்பூசைசெய்துமங்குற்றார்
பெருத்தநற்சேரசோழநற்பாண்டியர்
பேருடனாலயப்பதிட்டையுஞ்செய்தார்
சீர்பெறுந்தருமபுரமடத்தோருஞ்
செய்தனர்மடங்கள்சேராவடுதுறைச்
செய்தவத்தோருஞ்செய்தனர்மடங்க
ளிருக்குமேயிதற்குத்திருக்கில்பேர்பத்தே
இத்துறைகிழக்கினேன்றலைவம்முக்காற்
சித்தியையளிக்குந்திருக்கரந்துறையில்
வித்தகவகத்தியர்விதிப்படிபூசை

மெத்தவேசெய்துமேன்மைபெற்றோர்
சித்திராங்கதையிறைஞ்சினைகறைநாலை
சத்தியாய்வளர்ந்தவாசாரங்கற்றே
யிங்கதின்மேற்கேயிசையுமைமுக்காம்
றங்குவதாக்துறைக்கலந்தாறுகு
மரியநெல்வாயிலரத்துறையென்றே
பிரியமாய்முன்னர்ப்பேசியதிதுவே
இத்தலமதனி லிறந்தோர் பிறந்தோர்
பத்தியின் வாசஞ் செய்தோர் பார்த்தோர்
சத்தியம் பட்சி சதிவிலங்கி யாவும்
மெத்தவுஞ் சாமுன் மேன்மையிற் கேட்டோர்
சித்திய மோக்க நிலையுறப் பெறுவார்
சித்திலச் சிவிகை நிறைந்த பொற்சின்னம்
தத்தமாய்ப் பெற்றார் ஞானசம்பந்த
ரெழுவர் தாய்தலைமக ளிசைந்த இமையைப்
பழுதெனத் தொலைத்தான் பகர்கவியுதத்தே
யன்னமலர்ப் பொய்கை யவட்காயதுவே
பின்னமுநீல மலரெனும் பொய்கையில்
வன்னமா மாயன் மகிழ்தவஞ்செய்தான்
சொன்னநற்சேடனும் சொற்றவம்புரிந்தான்
நன்னயமாக நற்சனிசேயும்
நந்நோய்த்திரத்தவஞ்செய்திட்டார்
இறந்தோர்முத்தி யெய்தப்பிதிர்க்குப்
பிறந்துளதொன்று பெருவடவாலே
பற்றிதன்மேற்கே மலருமைமுக்காற்
சொற்றனர்வசிட்டத் துறையெனமுன்னோர்
திகழுதென்மேற்கிற்றிரண்டவைமுக்கால்
நிகழுநற்றலந்தானே ராடுதுறையாம்
செப்பினவதன்மேற் சேருமைமுக்காற்
றப்பிலாமான்றுறை தானதுவாகும்
இத்தலவடமே லிசையுமைமுக்கால்
அத்தலமிராகு விஞலந்துறையே
இங்கிதன்வடக்கே யிசைந்தவைமுக்கால்

## அகவல்.

தங்குமநாதி சத்திதன்றுறையே
நிரைநிறையேயறிஞ ரெழிலெழுதனிவர்
சிறப்பாயிப்புரைசெய் துளாரதனுள்
பொருந்தப்பெருமை யிகுத்துளவென்றுச்
சித்தநற்பூரணத் தக்ககவிரித்தே
யமிர்தினையொத்த தமிழ்மொழியதனி
லிந்தவாகவியம்பினனெனி
னித்தியவாசநெல்வாயரத்துறை
தாவறுவைணவ சமயத்தவனைப்
பரவுறுபாரத்துவாச கோத்திர
வரங்காசாரியபிரானைப்
பெருந்தகையென்னும் பெருந்தவத்தோனே.

அகவல்முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# திருவரத்துறைப்புராணம்.

## காப்பு.

திங்களங் குழவி நேருஞ் செவ்விய தந்தச் சோதி
தங்கிடுங் கரத்தான் முன்னாட் சந்தன வச்சி றுத்தோன்
புங்கவர்க் கபய மீந்த புனிதவெண் ணீற்று மேனித்
துங்கமா முகத்தோன் பாதத் துணையடி தலைமேற் கொள்வாம்.

## பாயிரம்.

### விநாயக வணக்கம்.

பூமேவு திசைமுகனு நெடுமாலு மயபதியும் போற்று கின்ற, ஏமேவு முதல்வனெனப் புகழ்பெறுவான் யாதுமெழு துறுமுன் யாரும், பாமேவு கருணைபொழி தருகவென வேண்டவருட் பான்மைநல்கு, மாமேவு மாமுகத்து வலஞ்சுழிப்போர் விநாயகனை வாழ்த்தி வாழ்வாம். (க)

### சுப்பிரமணியவணக்கம்.

புயலேறும் புரந்தரன்றன் மருமகனென் றிடுங்காதல் பொங்கிநிற்பக், குயிலேறு மொழிமகளை மணமேற்றிக் களிசிறந்த குகப்பே ரெம்மான், வெயிலேறு மெயிலேறு மரத்துறையில் மெய்யடியார் மிகவே வாழ்த்த, மயிலேறும் பெருமானை யயிலேந்துங் கோமானை வணங்கி வாழ்வாம். (உ)

## பரசிவவணக்கம்

சீர்த்திமிகு மரத்துறையிற்றிருஞான சம்பந்தருசிவிகையோடு, மார்த்தவிய திருச்சின்னங் கொடுத்தருளு மண்ணலடி யவர்தமக்குப், பூர்த்திமிகு மின்பளித்துப் பின்னூரப்பொன் னடிநிழலைப் புரிந்த ளிச்சுந், தீர்த்தபுரி யீசர்திரு வடிமலரை முடிமலாமேற் சேர்த்து வாழ்வாம். ௩

## பராசத்திவணக்கம்.

வரத்துறைவேண் டியபேர்க்கு வண்டமிழுஞ் செந்திருவும் வாய்ப்ப வென்றுங், கரத்துறைநெல் லிக்கனிபோற் கைகடக்கணித்தே வெண்மைபெலாங் களிப்பி னிய, வரத்துறையின் சிரதுறையுங் கருணைநாயகியோளா மொப்பி லாத, வரத்துறைவா ழானந்த நாயகிதாண் மலர்முடிமே லணிந்துவாழ்வாம். (௪)

## சண்டேசுர வணக்கம்.

சண்டியீ சுரத்தலைவ ரிணைக்கண்டா லெனைக்கண்ட தகைமையா மன்றி, புண்டிகா மலர்யாவு முன்னையன்றி யார்க்குரிய வுரைப்பாயென்று, சண்டிகாப்புடனேயூந் தொடையன்முதற் றரப்பெறுதே சவினுமென்று, சண்டிகேசுவரர்திருத் தாண்மலரைச் சென்னிமிசை தரித்து வாழ்வாம். (௫)

## சமயாசாரியவணக்கம்.

சாசினியி லுள்ளபல சிவாலயமனைத்துஞ் சென்று பணிந்து, பூசனைசெய் தவரவரைப் புகழ்ந்தேத்தி யுத்தமத்திறம் புகழ்மேழ் தந்த, வீசனெனுஞ் சம்பந்தர் திருநாவுக் கரசர்பிரா னெழிலாரூரர், யோசனைகொள் மாணிக்க வாசகரே டிவர்தாளை யுளத்தில் வைப்பாம், (௬)

பாயிர முற்றிற்று.

உ

சிவமயம்.

# புராணவரலாறு.

சொல்லு நற்கவி சுகுணமாச் சோர்வின்றித் தூய்தா
மெல்லை யிற்புகழெய்திடப் பாவல ரேத்த
வல்ல பைக்கருள் மாமுகத் தவனடி வாழ்த்தித்
தொல்லை நாளுள வடமொழி தமிழினிற் சொல்வேன். (க)

திருமடந்தைதன் காதலன் றிகழ்மல ருந்தி
மருவு நான்முகன் வாயுறை வாணியை வாழ்த்தித்
தருவு நேரிலா வீகையா னரத்துறை தனில்மே
விருவி சும்பிடை யவனியிற் புராணமிசைப்பேன். (உ)

செப்பு நற்றல மிருப்பிடந் தேர்ந்துற வெண்ணி
லொப்ப றுந்திரு முதுகுன்ற நிருதியென் றுரைப்ப
மெய்ப்பு றுந்திரு முட்டமாம் பதிக்கது மேற்குத்
துய்ப்பு றுந்திரு வதிட்டர்தந் துறைக்கெதிர் கிழக்கு. (௩)

வேறு.

எல்லையாம் வில்வநதியெனு நல்லூரிதற்குத்தென் மேற்
கெனவிசைப்பர், சொல்லிவா ழும்மை யழைத்திட வந்த சுவேத
திற் குத்தாரந் துலங்கு, நல்லவான் மீகர் சேடனுஞ் சனிய
னொடொரு மிழைத்திடு பெருமை, நெல்லுவாய்ந் துற்ற வரத்து
றை மகிமை யாவரே நிகழ்த்திடற் பாற்றே. (௪)

வேறு.

முன்னஞ் சொன்னது பிரமகை வர்த்தமென் றுரை
தரு முதுநூலி, னன்னர் தேவருக் குரைத்ததோ ரிச்சிவதோத்
திர நயந்தன்னிற், பன்னு நூலினிற் பகர்ந்திடு சரிதத்தைப்
பலரறி தரும்வண்ண, மன்ன நற்கதை யாமென நந்திவான் மீக
ருக் கறைந்தாரால். (௫)

வேறு.

வேண்டி னோர்க்கதை வடமொழி வகையினால் விரித்தார்
மீண்டு மிக்கதைத் தமிழினாற் குலோத்துங்க வேந்தன்

றாண்டு கோலினற் பாடினன்வைணவச் சுகுணன்
காண்டு நாடொறு மரங்கவா சாரியாங் கவிஞன். (௬)

தழையும் வெண்ணிலாத் தரளவெண் குடைநிழற் றரணி
வழியி னுலாலக் காண்டவன் குலோத்துங்க வள்ளல்
விழைவு கொண்டபின் னித்தல மகிமையை விரித்தான்
பழியி லாததோ ரரத்துறைப் பதியின்சீர் பரவ. (௭)

முன்ன னாகியு முதலவ னாகியு முனிவோர்
பன்னு நாவினுக் கானவ னாகியும் பருந்தீ
வன்னன் மேவிடு கயிலைவாழ் நந்தியெம் வரதன்
சொன்ன வாறுதென் மொழியினற் சொல்லெனச் சொற்றேனே (௮)

வேறு.

## அவையடக்கம்.

மழைபொழி யமுத மியாவர் மாந்திர மருவுற் றாலும்
விழைவொடு சேர்ப்ப தல்லால் விலக்குவ துண்டோ மேன்மை
கழைகனைக் கைக்கச் சற்றோர் கண்டுரை நூலி னுக்கிய
கிழிவுள சொலினு மிந்நூ லியல்வல்லோ ரேற்ப ரன்றே. (௯)

விண்டுயர் சருடனேக விழித்ததைக் காண்ட சேவல
திண்டிற மாகச் சேருஞ் செயலிலாச் செயலைப் போலப்
பண்வடயோர் பகர்ந்த நூலைப் பகுத்தறி யாத யானு
மிண்டுசீர் புராணஞ் சொலவிழைந்தன னறிவி லேனே. (௰)

ஆர்மறை சேறுந் றனு மடுகினுர் பூவுற றாலும்
பார்பய நீரூற் றனும் பரிந்ததைக் கொள்வார் போலத்
தேரிலா தடியேன் சொல்லுந் தெளிவிலா தெனினு மிந்நூல்
சீர்மிகச் சிறந்தோர் யாருஞ் சிறப்பெனக் கொள்வ ரன்றே. (௧௧)

வேறு.

சொல்லு மிக்கதை சுகுணம தலவெனத் துணைக்கா
தொல்லை நீக்கினுஞ் சொற்குறை மேவினு மிச்சொ
லல்ல னீக்குறு மரதத்துறைச் சரிதமென் றுய்ந்தே
யெல்லை யோர்களு மிக்கதை யேற்பரே யினிதின். (௧௨)

வேறு.

சுத்தவெண் ணிலவைப் பெற்ற சுகுணப்பா லாழி தன்னை
மத்தினு லுழக்கி வானோர்க் கமுதருட் டிருமான் மான

வித்தல மிசைத்து நந்தி யெவ்வகை வருணத் தோருஞ்
சத்தியம் விட ளித்தார் சகலமு முய்ய வென்றே. (கரு)

## நூற்பயன்.

வேறு.

கண்ணுதலி னருளமைந்தோன் காசினியி லரத்துறையூர்
கலந்து வாழ்வோ, னெண்ணுபாரத்வாச கோத்திரத்தான்காண் ஸ்ரீ
ரா னிரங்கா சாரி, பண்ணுதமிழ்ப் புராணமிதைப் பரிவுடனே
பகர்ந்துரைத்தோர் படித்தோர் கேட்டோர், வண்ணமுடனெழு
திவைத்தோர் வாங்கினோர் நீடூழி வாழ்க மாதோ. (கசு)

புராணவரலாறுமுற்றிற்று.

ஆகச்செய்யுள் உசு.

---

## தலவிசேடம்.

ஐந்நிலத்தினு மதிகமா மழகிய மருத
மைந்நிலத் தலத் ததிகமா மரத்துறைத் தலந்தா
னைந்நிலத் தெய்வத் ததிகமா மரத்துறை நாத
னைந்நிலத் தலை யனந்தன்செய் தவநிலை யங்கண். (க)

வேறு.

இத்தலப் பெருமை பெரிதுமே யுரைத்தா ரெழிலுளா
நாவலூர் நம்பி, சித்தமாய்ச் செய்தார் சிறப்புட னடைந்தா ருடுத்
தவர் சிவனை விடுத்தோர், சத்திய நிரைத்தார் சகலரும் பதவி
சாயுச்சியஞ் சார்வன மென்றார், மெத்தமே லானதோ வேறுள
தலங்கள் மேவவுங் காணவு மிலையே (உ)

சாதியிற் பிரமன் மணியினில் வயிரஞ் சாத்துறு புஷ்பமேற்
சாதி, நீதியி லரச னீரினிற் கங்கை நீள்புவி நாவலு மொப்பாங்,
காதுகொள் புனித சங்கரன் கதைபாங் கடற்புவி யதனிலே
யுள்ள, மேதகு தலங்க ளனைத்தினு மதிகம் விளம்புவார் திரு
வரத் துறையே. (ங)

பிறப்பினால் மரணமாவதாற் சிந்தை பெறுதலாற் பார்ப்பதி
னாலும், பிறப்பிலா ஞானப் பதவியை யடைவா ரெய்திடார் பிற
வியிற் பாரிற், சிறப்பினா லுடைய புலவர்கள் சொல்லுஞ் சேர்
தலமைந்துமொன்றாகி, யெறிப்புறு கற்பின் மங்கையர் போல
வெழினிறை வெய்துமித் தலமே. (ச)

பூத மைந்தினுக் கைம்பதி புகன்றது மறிந்தாய்
பேத மன்றிவன் தவைந்துயிப் பெரும்பதி யடையும்
ஏது வென்னென வத்தலக் கடையின்முன் னெழுத்தை
யோதி யுற்றிடின் றிருவரத் துறையென வுணர்வாய். (ரு)

காளவத்திரி யருணையுந் திருவாணைக் காவற்
றுள்பெ யர்த்திடுஞ் சிதம்பர தலமது தரவரி
மீள வீகலான் மேவிய மருதுவத் துறையே
கோளி னீற்றினூர் மூன்றெழுத்தீற்றினிற் கொளுவாய் (சா)

(இ-ள்) காளவத்திரி-என்பதில்-தி-அருணை என்பதில-ரு திருவாணைக்காவல்--என்பதில்-வ சிதம்பரம்-என்பதில் ர-திருவாரூருக்குச்சிறந்த பெயராகிய-மருத்துவத்துறை-என்பதில-த்-துறை-ஆகத்திருவரத்துறைஎனவருதல் காண்க.(எ-ம)

நாற்றலத்தினில் நாலெழுத்தேயெடுத்
தீற்று நற்றல வீற்றினில் மூன்றெழுத்
தாற்ற வேயெடுத தாளுத லேனெனிமா
சாற்று மேழ்துறை தமமினமுன்றுனைதால (எ)

வேறு

பிறக்கி னுந்தல மிறக்கி னும்விழி சிறக்கி னுமபெயா கினைக்கினும், பிறக்க வும்புவி யிலலை காண்பரம னடியில வாழ்வுபொறு புனிதரென், றறப்பெ ருமபலவு நாறுரைககுமுயிா போரு முளைறெருவனஞ்செவி, திறத்த ரதுறையெ னபடு கனறிடில மெனை மிலலையிது காணுமே (அ)

வேறு.

காது ரைதிடுங் கன்னனன் மந்திரகதியால
தித சுற்றிபே சிவனுரு சேர்ந்திடு யோககம
யாது மநதிரத் ததிகமா பரத்துறை பரனபோ
சாது ரைதிடின் கயிலையை யடைவதற் புதமோ (௯)

வந்து தோற்றுவான் மீகியு மாலயம் வதிந்தான்
சிநதை நன்குடைச் சேடனும செய்தனன் தவஞ்சம
பந்த நாதனபெசற் சின்னமுஞ் சிவிகையும் [illegible]டைந்தான
எந்த மூவருஞ் சொல்லிய பாடலு மினிதே. (கO)

வேறு.

இதற்குரிய பெயர்சப்த சங்கையென்பா ரிவைதாமு மெமனை யென்னின், மதித்திடுமூ ரைநதொடக்கங் காணுமுரி காசி

தலம் கடலால் க்ஷேத்ரம், நாதித்திநேர் தீர்த்தபுரந் திருநெல்வா யரத்துறைதான் றாயோர் சொன்ன, விதித்துரைத்த வான்மீகர் வியந்தவிந்நா மங்கலேயே விரித்துச் சொல்வாம். (கக)

பேரொணிவா நதிபுரமே பேசுமர வத்துறையே பெரியோர் சொன்ன, சீருளயே ரிவைமயன்ப திசழ்ந்திடுபே ரிவைநம்மைச் சேப்பு பன்பாற், காருவைம் புகைமெல்லாங் கண்டறிய நாறுரைத்தேன் கருதும் வேத, நீருலாந் தீர்த்தபுர நிருமலன்சீர் யாரெடுத்தே நிகழ்த்து வாரே. (கஉ)

வேறு.

பால காசியி னுயிரத் ததிகம்பார் விருத்தை
சால மற்றதி னுயிர மதிகமித் தலந்தான்
காஸ வுழியின் காசியா மரத்துறை காண்பா
யானு டன்வலஞ் சுழிக்கண பதியிங்கு மறிவாய். (கங)

தலவிசேடமுற்றிற்று.

ஆகச்செய்யுள் ௩௪.

---

## தீர்த்தவிசேடம்.

ஆறு டத்தி னுறும்காடி யவனிமீதில் தீர்த்தமாம்
பாறி லொன்று சேர்வதான கங்கையாதி நதிகளாம்
வீறுமாலின் மெய்யின் வேர்வை யேவுதீர்த்த நித்யமாம்
கூறுமாலின் றேசசுத்தி கொடுத்ததிந்த தீர்த்தமே. (க)

வேறு.

ஆய்ந்ததோ ரேனக் கடவுளிந் நதியிலனேகநா ளருந்தவம் புரிந்தே, தோய்ந்தினி திருந்த தன்மையா லவர்மெய் தூய்மைமை யுறாதா மென்பர், தீர்ந்திடப் பாவத் தொடர்ச்சியைச் செய்யுந் திருவுளத திச்சையே டளிக்கும், வாய்ந்தவிந் நதிநேர் வையகத் திலைகாண் வானதிக் கண்ணுமவ் வாறே. (உ)

வேறு.

அன்னமல ரெனும்பொய்கை யமைந்துளதங் கதின்பெருமை டற்யோ ணுதால், சொன்னதுகேள் நீமலர்ப் பொய்கையென வுளதொன்று சொல்லத் தோன்று, பின்னுளான் னிவாநதியா மிதன்பெருமை யாரேனும் பேசற் பாற்றோ, நன்னதியோ கவேசமுறும் பன்னதியுஞ் சுறப்படைதல் நலமேயன்றோ. (௩)

ஒவ்வொரு தலத்தி லொவ்வொரு வருகமே பொலவொரு வரமுறிலியல்பா, மிவ்வரத் துறையி லினியயா றனக்குமெழி லுள வாதிசே டனுக்கு, மெவவகை யருளு மிசைசலை யேகடரு மேத்துவான் மீகாள் முனிக்குங், கவ்வையை யொழித்துக கரு த்தெலா மளிக்குங் காதையைக் கழறுவ தரிதே. (௪)

ஆதலா லிங்குப் பிறந்துளோ ரிறநதோ ரபுகுடன் வாசமே செய்தோர், தீதெலா மொழியத் தானமே செய்தோர் சீர்க்க மாய் மனதிலே நினைத்தோர், சாதியா லிழிவை யுற்றவ ரெனினுஞ் சார்வகைப் பிறவியேழ் தனிலு, மாதியாம பரம னருளினுன் மோக்க மடைவது திண்ணமென் றறிநீ. (௫)

எத்தலத் தேனு மிசைமறை யோருக் கெழிற்பசு பரிகய மீந்தோர், மெத்தநல் லாடை மேவிடப் பூண்கள் மேன்மையா யீந்திடு பலன்கள், சுத்ததண் டுலமுஞ் சுவர்ணபாத் திரமுஞ் சொற்பமா யாயினு மீண்டு, பத்தியாப் பிதிருக் களித்திடி னவை கட் காயிரத் திரட்டியாம் பலனே. (௬)

அன்னசத் திரங்க ளாலய மமைத்தோ ரமைவுறச் சிகரியும் புரிந்தோர், பின்னமில் லாம லேரியுங் கண்வாய் பிறழ்விலாக் கூபஞ்சா வடியு, நன்னய வேத பாடசா லையுமே நாறுநீர்ப பந்தனற் பலன்கள், பன்னவே புரிந்தோ ருலகினி லடையும பயன் களைப் பகருவ தெவரே. (௭)

தீர்த்தவிசேட முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௪௪

---

## மூர்த்திவிசேடம்.

முடியார்மா ரெழுங்கடவுள முன்குடி னைச சென்னிவைத் தோன் முதல்வ னுரேனன், ரெடியரவங கையுடையான் ரெண் டனுக்குப் பணிவுடையான் றாயோர் யாரக்குஞ, செடிதுடைத் துச் சிரளிப்பான் பல்லுயிரைப் புரந்தளிக்குஞ் சிவனே யானுனை, ரெடியணியு முனைமகேள்வ னரத்துறையெம் பெருமான்சீர் சொ ல்வார் யாரே. (௧)

காலனைமுன் னுதைத்தொழித்தான்காமனையுஞ் சுட்டழித்தான் கருதுந் தக்கன், சீலநெடு மகமொழித்தான் றகர்முகத்தையுங்கொடுத்தான் சிறந்தவாழிச், சாலவரு மாலமுண்டான் சலசமுதற் பல்லுயிர்க்குந் தந்தை யானான், பாலரெனும் பன்றிதமைக் காத்தளித்தான் சிவனையல்லாற் பரமன் யாரே. (உ)

வேறு.

அளவிலா தவனு யாதியாய்நாதி யாகியே யகிலமுமவனாய், விளைவதற் குரிய வினைப்பய னெல்லாங் கெடுத்தலும் விடுத்தலுமவனாய், களைகளை பயிர்போ லுயிர்களைக் காக்குங் கருணையங் கடலென நிறைந்த, வுளபுவனங்க ளனைத்தையுங் கடந்த வொருவனை யுரைக்குமா றெவனே. (௩)

வேறு.

யாக மன்னனு மருணைதன் னுதனுஞ் சம்புப்
பாக முற்றதோ ரீசனும் வாயுவின் பதியு
மேக முற்றவா காயத் தினிறையு மொன்றாகி
யோக முற்றிடு னரத்துறைப் பெருமையா ருரைப்பார். ()

வேறு.

ஐந்துமைந்து மைந்து நான்கு மதிகமான வீசனீ
யைந்துநீக்கு மைம்முகத்தானைந்துமூர்த்தி யாகையா
னைந்துசென்னி யானழைக்க வைந்துகாட்டி யொன்றதா
யைந்தமர்ந்த மூர்த்தியா னரத்துறையி னாதனே. (௫)

மூர்த்திவிசேட முற்றிற்று.

ஆக செய்யுள் ௬௬.

---

## நாட்டுப்படலம்.

செய்தவ மனமுஞ் சிவன்றனைப் பேணுஞ் சிந்தையுஞ்செல்வமுஞ் சிறப்பா, மெய்யுள வுரையு மிடியுளார் தமக்கு மேம்படவளித்தலு மல்லால், நெய்தலுங் கமல மலருமே நிறைந்து ஞெமுங்கிடு வயலெலா மள்ளர், கொய்திடுஞ் சாலி யோங்குறுஞ் சோழநாட்டின்சீர் கூறவும் படுமோ. (க)

---

* இயாகம் என்பது தலைக்குறையாய் நிற்கின்றது.

வேறு.

கலைமக ளுருவெனக் கலந்த விண்ணிடை
நிலைமைகொண் மாமுகில் படர்ந்து நீள்கட
லலைகளை மேய்ந்துய ரரியி னுகமாய்
மலையினிற் சூல்கொடு மருவி யுற்றதே. (௨)

வேறு.

அரத்துறைப் பதியரன் மழுவென மின்னி யன்னான்
திரத்தி னுடுறும் போதணி சிலம்பெனச் சிலம்பிப்
பெருத்த வன்றரு கொடையெனப் பேருல கிடையே
வருத்த நீங்கிடப் பெய்திடும் வளம்பெற மழையே. (௩)

வேறு.

ஆறுநன் னதிகு ளங்க ளழகிய வோடை யெங்கும்
பேறுபள் ளங்கண் மூடப் பெருவெள்ளங் கொள்ளா தாகிச்
சேறுள கழனி சேர்ந்து செழும்புன லாற்றி னூடே
காறிகழ்க் கடலைக் காணக் கங்கைபோ லேகு மன்றே. (௪)

கானக மயில்க ளாடுங் காவியில் கமலம் பூக்குந்
தேனுள வல்லி பூக்குந் தெரிந்ததி னன்ப ரன்றி
மேனறு நறவ மாந்தி மிகுசுரம் ஞிமிறு பாடுங்
கானக மலர்க ளாலே கமழ்தலைக் கவிக்கு மன்றே. (௫)

தருகனி முதிர்ந்து பாயுந் தக்கநற் றேனும் பூவின்
பெருமணங் கமழுந் தேனும் பேருள கொம்பின் றேனுஞ்
சுரமதிற் படர்ந்தே யாறுய்ச் சொன்மடை களையு டைத்து
நிரவியே பாயு நன்செய் நீள்பைங்கூழ் தனைவ ளர்க்கும். (௬)

பேடையோ டோதி மங்கள் பேர்ந்திடாக் கழனி தன்னில்
மேடெலாஞ் சங்கி னங்கள் மிளிரொளி தரள மீனும்
வாடிலா வாளை தாவி வளர்தருந் தெங்கிற் பாய்ந்திங்
கீடிலா தடித்த லாலே யிண்டிள நீரு திர்க்கும். (௭)

தெங்கொடு கமுகு வாழை தேற்றமா பலவே கொய்யா
வோங்கிடுங் கழைந ரத்த முயர்ந்திடு பொழில்க ளெல்லாம்
பாங்குள விண்ணு டெய்திப் பண்ணவர் யாரு முண்ண
வாங்கவை கொடுப்பக் கண்ட வைந்தரு நாணு மன்றே. (௮)

செப்பிய செய்யிற் பையப் பயிர்நடுஞ் சேடி மாரின்
தப்பிலாக் கமலக் கண்கள் சலத்தினிற் றோன்றலாலே
யொப்பிலாக் கஞ்ச மென்றே யுளர்தரும் வண்டி னங்கள்
அப்புள கழனி தோறு மலைந்தலைந் தயரு மம்மா. (௯)

ஏறுகட் டேரு ழற்கே யெழிலுள நீர்க்கால் பாய்ச்சிச்
சேறுசெய் குநருந் தெய்வந் தொழுதுநற் செந்நெல் வீசி
நாறுசெய் குநரு நாற்றை நடவுசெய் குநரும் பின்பு
மாறுசெய் களைகட் டோம்பி வளம்படுப் பார்க ளானோர். (௧0)

களைகடிந் தொதுங்கு கின்ற கடைசியர் முகத்தைக் கண்டு
வளைதரு மரைக ளெல்லா மதியென நாணி வாடு
நளிர்தருங் குவளை யெல்லா நல்விழி கண்டு நாணும்
வளையெலாங் களத்தைக் கண்டு வயலினிற் புகுந்து மல்கும். (௧௧)

பழியுள கள்ளை மாந்திப் பணிசெயுங் கடைசி மாதர்
மொழிதடு மாறி வேர்வை முகத்தொடு முறுவ ரென்ற
விழிசிவப் பேறக் கூந்தல் மென்றுகில் விளஞ் சோர
வொழிதவத் தோர்கள் போல வுடலையு மறந்து ளாரே. (௧௨)

அரும்பவி ழுநங்கள் வாளி யாற்றில ராகித் தத்தந்
திரம்புகழ் கொழுந ரோடுஞ் செவ்விதிற் புணர்ச்சி யுற்று
விரும்பினர் கருப்பம் போல வெளியுளா ராருங் காண
நிரம்பின மணிச்சூல் முற்றி நிலத்துறை சாலி யெல்லாம். (௧௩)

ஒத்தநற் சாலி தானு முயர்கதிர்க் காடு சாய
பித்தனர் போலே தாமும் பெரும்படி யளக்க வுன்னி
வித்தெலா முதிரக் கண்டோர் விரயிமுன் னதனைப் பற்றிச்
சத்துவம் விடாத றுத்துச் சாலநற் போர்வைப் பாரால். (௧௪)

கற்றைவை களைந்தெ டுத்துக் காற்றினுற் றூற்றி நெல்லைக்
கொற்றவர்க் காறி லொன்று கொடுத்துப்பின் கொள்ள வந்தோர்
மற்றைய பேருக் கீந்தும் வரன்முறை யாகப் பின்னர்
வெற்றியாய்ச் சகடத் தேற்றி வீடெய்த்து விருந்தோ டுண்பார். ()

கார்பய றெள்ளு சாமை கடலைகோ தும்பை மல்லி
சீருறு துவரை யோடு சிறந்ததோர் மொச்சை பச்சை
நேருநற் பலவே டின்ன புன்செயி னோர்கீத வெல்லாஞ்
சேருபல் பண்டி யேற்றிச் செழுநிலங் கிழியச் சேர்ப்பார். (௧௬)

துறவினர் தாசர் நேசர் தொண்டினோர் புசிக்க நல்லூண்
டிறவினி தளித்தே யேற்குந் தீனர்க டமக்கு மீந்து
முறைவிடம் பிறிது நல்கி யுயர்தவஞ் செய்தே யோயாப்
பிறவியை யொடுக்க நீக்கிப் பெருங்கதி யுய்ப்பார் யாரும். (௧௭)

நிச்சலு மீச னன்பர் நெறியுளார் வரவைக் கண்டால்
குச்சமில் குருபூ பாலர் குடித்தெய்வங் காணல் போல
வச்சமுங் கொண்டு கூசி யடிபணிந் தினிதா யேத்தி
யிச்சையா யொழுகி யுள்ள குறிப்பறிந் தேவல் செய்வார். (கஅ)

நிறைதரு கனிதேன் பாலும் விழைவொடு நெய்யின் வெள்ள
முறையுள வெள்ளி பொன்போ லூற்றிடு மடிசி றன்னைக்
குறையிலா தளித்துப் பின்பு கோருத லெல்லாந் தந்து
மறையுளார் தவத்தோர் யோகி மலரடி பணிவர் கண்டாய் (கக)

பின்னுமந் நாட்டிற் சாலை பெருள மடமுஞ் சத்ரம்
வன்னமாங் கோவிற் கூவல் வளரறச் சாலை மற்றுஞ்
சொன்னநீர்ப் பந்த லன்றிச் சோர்விலாப் பயிற்சி வித்தை
நன்னய மாகச் செய்வார் நாடொறு நாட்டா ரெல்லாம். (உ0)

நாட்டுப்படல முற்றிற்று.

ஆகூ செய்யுள் கூசா.

---

## நகரப்படலம்.

நீலம்புகழு மரத்துறையி னிவாநதியின் வடபாலி னிலவு கொன்றைச், சலம்பரவுஞ் சடைமுடியான் றீர்த்தபுரீ சருக்கரு காய்த் தனித்து வாழு, நலம்புரியுந் திரிபுரசுந் தரியாகு நாயகி யின் றிருளு நால்வாய், வலம்புரிப்பேர் விநாயகன்றன் மலரப பத்தைத் துதிசெய்து வணங்கு வோமே. (க)

வேறு.

சீரியர் கூறுஞ் சிறந்ததீஞ் சொல்லின் றெளிவெலாந் திரண் டசே விடையா, ஞரிய கவியா னகரமு துரைத்தாங் கருந்தவ ரதி சய மடைந்தார், தேரிலா தடியேன் றெரிநதமட் டுரைத்தேன் றிருவரத் துறைநக ரெழிலாக், கூரிய தணைத்துங் குடியுளார் வகை யுங் கூறுவேன் குவலயத் தவர்க்கே. (உ)

பூமகள் முகமோ திலதமோ நிறைந்து புகழுறுங் கமலமாம் விழியோ, மாமுலை யணியு மாரமோ மணிகொண் மாலையோ வள் ளையின் குழையோ, வாமுறச் சென்னி யணிகொலோ வுயிரினுகப மோவென வெம்மால், சேமமிக் குயர்ந்த நகரினுக குவமை செப புறப் பாலதோ வம்மா. (ங)

மஞ்சுறு மாட மாளிகை நகரின் முடியதோ வானவர் நகரோ விஞ்சையர் நகரோ வதற்குமேற் படியோ விண்ணவர்க் கேறவே ணியதோ, கஞ்சமா மலரா னங்கரனைத்துங் கைபுனைந் தியற்றிக்கண் டதுவே, வெஞ்சொலான் முடியப் பாலதோ நாவீ ராயிர னிசைப்பவுஞ் சுவனேல், (ச)

வேறு.

பாந்தள் யாகத்திற் பரிஸ்ரமம் பதத்திடு வாஸ்தோ
தேர்ந்த சிப்பிய ரைவராற் றெரிந்துரை வாஸ்தோ
வார்ந்த பானுவின் வாஸ்துவோ வளர்மதி வாஸ்தோ
வேந்து குண்டல வாஸ்துவோ விந்நகர் வாஸ்தே. (ரு)

கோண லானதுங் குறைவிலாக் கரும்பன்றி யிலையாம்
பாண மானதிற் கொலையிலை பாவைக ணல்லால்
மாணு ருமது வுண்பவர் வண்டலா துளதோ
காணத் தாழ்வுக தலியலாற் கழறவும் படுமோ, (சா)

வேறு.

பூமகள் வீதி யுகந்தவள் பேரான் புரந்தரன் றருவெண வீவார், நாமகள் குடிக ளுவுவிட் டொழியா னன்மக விலாவக மறியார், மாமக ளொங்கு மாடிவிட் டிழியாள் மனுமுறை பிறழ்ந் திடார் மாந்தர், பூமக ளனையா மின்னனு ருருவம் வேறுபா டிலா துமே வினவால். (எ)

வேறு.

வாழைகமு கொடுதேங்கு வளருமரு கிற்பலரை வாவெனக் கொடிய மைக்கும், தாழைமல ரணிகணிகை தாளமொடு நிர்த்த னீங் தாம்புரிவர் பரத மென்றே, ஏழுசுர முங்கொண்டு குயில்கி ளிளை நாணியிட வெவ்விடையர் பாடு மதனை, வேழமுக னும்வந்து வேடிக்கை பார்க்கவே வீதியிடை மேவி னனரோ. (அ)

வேறு

உதிக்குமுன் றுனஞ் செய்வா ருயர்சந்தி யோமத் தோடு
விதிப்படி கருமஞ் செய்வார் விட்டிடார் விரத நோன்பு
கதிக்குள பிதிர்மகங்கள் காண்டெய்வ மதிதி பூசை
நிதப்படி செய்வார் சொன்னே னீக்கிடா ரீகை தன்னை. (கூ)
இலக்கணங் கணித நூற்க ளெழுத்துள விலக்க ணந்தான்
துலக்குறுஞ் சோதி டந்தான் றொல்பல நூல்கள் விஞ்சை

விலக்குறு தருக்கம் சாஸ்திரம் விதிப்படி மதனூ லெல்லாந்
துலக்குறப் பார்ப்பார் கற்பார் தோற்றமா ரறிவின் மிக்கார்

வேறு.

மந்திரி பவுரோன் சேனை மகிபதி மனுநூ லுள்ளான்
தந்திரி வணிகஞ் செய்வான் றரல்கொளல் தனத்தின் மிக்கான்
சுந்தர வுழவோ ரெல்லாம் தூப்பயிர் சுகமாய்ச் செய்வார்
விந்தைசேர் குடிகள் செய்கை விளம்பிடப் பால தன்றே. (கக)

வேறு.

மற்றுள வருணர் யாரு மரபுள மனுநூல் கொள்வார்
கற்றறி வுடையார் திங்க டருமமை கதிக்க வுள்ளா
ருற்றதின் பெருமை சொல்ல வுயர்குண மெவர்க்கு முண்டோ
வுற்றறியுங்கால்வாய்மைபொறையெண்ண முண்மையுள்ளார். (கஉ)

நகரப்படலமுற்றிற்று.

ஆ செய்யுள் எஅ.

---

## நிவாநதிப்படலம்.

நாடுநன் னகர நன்புக ழுரைத்தாய் நதியினற் புகழையு நவில்வாய், நீடுவா ணந்தீ நீயரு ளென்ன நிறைந்தவான் மீகனை நோக்கி, வீடுதான் வேண்டி வெகுதவ மிழைப்போர் விரும்பியிந் நதியிலோர் தரந்தான், ஆடுவா ருகி ஞன்குளா ரெவரு மவலமாம் பிறவிநோய் நாடார். (க)

தீதிலா மொழியான் றிருவருள் புரிவான் றேவனு யவனிவா ழ்ந் திருப்ப, னேததற் குவமை யெய்திய வாறு மிந்நதிப் பெரு மையு மெழிலும், கோதிலா தெனக்குக் கூறுநீ யென்றுன் குறை விலா விடைகனிந் துரைத்தான், றீதெலாம் விட்டுத் திரிகுண மொன்றுய்த் தெளிந்தவ ருரைத்தன ரீதே. (உ)

காண்டிமுன் சதுர்யு கத்தினிற் கற்றோ னருந்தவன் மதங்க ஞங் கனவான், வேண்டுநன் புதல்வி யிருவரு மலர்மேல் விளங்கி ழைக் கொத்தவ ரவரும், பூண்டநற் பதத்தைப் புகழுடன் றுதி த்துப் போற்றினர் வராகனைப் புவிமேல், வேண்டினுன் கணவ னீயெனக் கென்றார் விண்டுவும் விழைவுற விதித்தான். (ங)

அண்டொணு யோனி யதிலுறை யாம லழகிய நதியதாய் வருவாய், நன்றுநன் னதியா யிருவரும் வருவோர் நன்மண மடைதலைச் செய்வாய், விண்டுநன் னதியின் வெகுபலன் றருவாய் வேட்டமுற் றவரவர் தமக்குத், தண்டுழாய் மார்பா தாவெனக் கேட்டார் தந்தனன் றரணியை யளந்தோன். (ச)

அந்தமாந் தேகமக்கினி விடுத்தா னக்கணஞ் சேரநா டடைந்தார், முந்தவே யிருக்குங் கவுதமன் சிகரி முதுளவயோத்தியின் னகரஞ், சிந்தையா மதிலே சேர்ந்துள தவத்தோ ரெவரினுஞ் சீரழ கமைந்தான், கந்றுகஸ் தனத்தாள் கௌதமன் கையில் கமண்டல சலத்தினி லெழுந்தாள். (ரு)

மந்திரத் தவன்கைக் கமண்டலஞ் சேர்ந்த மங்கையும் வராகனை யெண்ணி, யந்தரத் தோரு மதிசய மடைய வழகிய நதிவடி வமைந்தாள், சிந்தையின் படியே வளர்ந்தயல் பரவி செழுமலை யிடமெலா நிறைந்து, வுந்திவந் தன்னை யுலகினோர்க் கமைய வோர்நொடிப் பொழுதில்வந் துற்றாள். (சா)

வேறு.

அலைதொடு கரமணி யழகிய மணிநகை யமலையொ டழகுடையாள், வலையிலை துகிலுரை கடிகொடி நுணுகிடை விழியிருபுடைகவர்வாள், வலையெனவழி தடவிரை வளைகுழ லினள்வரி விழிகயல் வருநகையாள், கலைகரி தனமுளள கடது வடவிலை கடலினு ளுறைபவளே. (எ)

விரைபடு மகில்முதல் சந்தனம் விரிமர முதலிய மிக்கிடவே யரைபட வலையொடு முதுசினை யரைபட வொடிபட கடிதகழாக், குரைபட விரைவினில் துயில்சிறு குடியரை குறைவிடா தடியோடே, கரைபட வெறிவதும் வருவதுங் கழறிடில் கடுவிசை யொடுவருமே. (அ)

வேறு.

ஆடுமாந்தரீ னணியினை யலைத்துக்கொ ட்வர்த
நாடுசேலையை யீர்த்துமே நதியது வேகத்
தோடு வந்திடுஞ் சிறப்பினை யுலகுளோ ரெவரு
மீடி தர்கிலை யென்றிசைத் தேத்தலற் புதமோ. (கூ)

வேறு.

ஆன வேந்த ரமர்ந்த மனுநெறி
தானி றைந்த தரும்புகழென்னவே

ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தழைந்தது தீர்த்தமே. (கo)

கொலையு லாவுங் கரிகள் கொடுவிலங்
கலையு மான்முத லனைத்தையு மீர்த்துமே
மலையின் மேலுள மற்றவு மண்டலால்
விலையின் மாதரை யொக்குமவ் வெள்ளமே. (கக)

வேறு.

நன்செயைப் புன்செ யாக்கி நற்றிட ரான மேட்டைத்
தன்செய லகழி யாக்கித் தனித்ததைத் தோட்ட மாக்கி
விஞ்சையால் வித்தை கற்றோர் வேடிக்கை விதமாக் காட்டி
யஞ்சன வண்ண னென்ன வவனியோர்க் கமைந்த தன்றே (கஉ)

இப்படி யறைந்த தீர்த்த மினிதுடன் பெருகக்கண்ட
தப்பிலா முனிவ ரெல்லாந் தாஞ்சிரஸ் நானஞ்செய்தா
ரொப்பிலாத் தேவர் சூழ்ந்தா ருமையர னங்கு வந்தா
மைப்படி நதியி னூ மனத்திறற் றிபானஞ் செய்தான். (கரு)

கர்த்தன்று னவட்குச் சொல்வான் கனக்குழ லிவைமாதே
நித்திய பதமும் பெற்றாய் நீடியர் வராகன்றன்னை
யுற்றனை புருஷனாக வுனக்கொரு குறைவுண் டாமோ
முத்தியா முனது தோய மூழ்கினோர்க் கென்பால்வீடே. (கச)

அன்னையே யழகாச்சென்றே யலைகடல் புக்குநீயுந்
துன்னுதி வராகன் றன்பாற் றோகைமா மயிலேயென்று
சொன்னதோர் வரத்தாற் கங்கை சூழ்ந்தவர் சுருண மாக
மன்னிய புனறோய் வார்தா மாற்றுவார் பிறவியூசல். (கரு)

வேறு.

இன்னதி யோர நின்றே யெவர்தவ முனூற்றி னூ
முன்னிய பலன்க ளெல்லா முற்றுகை சரத மென்றார்
நண்ணின ரன்று தொட்டு நன்முனி நதியின் பக்க
மின்னிடை பாகத் தோனை மேன்மையாய்ப் பூசை செய்தார். ()

வேறு.

காண்டியிங் நதிபால் கையிலையி னுறையூர் கண்டவர்க்கெளிதி
னின்முத்தி, பூண்டநற் றிருவைப் புனைந்துளான் றலமோ புகழுள
வேழதாம் புவியில், வேண்டினோர் தவத்தை விரும்பினோர்க் கெ
ல்லாம் வினைத்தொட ரறுமெனவுரைத்தே, யாண்டவின் னதி
யிற் கமைந்ததை யுரைப்பே னூர்வசிக் குற்றுநீ யறியே. (கஎ)

இத்தலத் தருகி லிந்நதி யுற்றா ளிவடுணை கிர்ஷ்ணையென் பவளாங், கர்த்தன்ற னுரையால் வரநதி யாகிக் கடுகியந் திவளு டன் கலந்தாள், கொந்துளாள் பெரியாள் கோதையின் சின் னுள கூறுநற் பெயரொவை யென்னில், நித்திய சுவேதை நிவா நதி வெள்ளா றெனு மபி தானமா கிகழும். (கஅ)

விட்டுடன் போன விழைவுள துணைவி கிட்டிவந் திவளுடன் மேவப், பட்டிமை கிறிப்ப் பெருத்தநல் லுயரம் பாரினில் சிகரி போ லாக்கந், தொட்டதாற் றுணைவி தானுமவ் வாறுப்த் துரி தமா யேகினுர் தொடர்ந்து, கட்டதா யிங்கு காமனை யெரித்த கடவுளைக் கௌரியைத் தொழுதான். (கசு)

மலைமகள் மகிழ்ந்து மகிணன்முன் வந்து மாநதி மங்கையைப் பார்த்தா, ளலையுவந் தடிமேல் சரணமுஞ் செய்தா ளவளுநீ வாநதி யென்றுள், கலைஞரு மதுவே பேரெனக் கொண்டார் கனங்குழை நதியடி விழுந்தாள், தலைமக ளேடு தையலைத் துதி த்தா டன்மையைத் தரணிபாற் கேளே. (உ0)

சோதியு நீயே சொற்குண நீயே சுயம்புநீ சொரூபியு நீயே
நீதியு நீயே நீதிஞா னமுநீ நேர்பர ஞானமு நீயே
யாதியு நீயே யநாதியு நீயே யகண்டபூ ரணமதா யமைந்தா
யாதினை யிசைப்பே னறிவிலாத் தமியே னடிமலர்ப் பெருமை
யா னறியேன்) (உக)

வேறு.

சுந்தரியே துரந்தரியே சுகமளிக்குங் கருணைமிகு சோதி நீயே, யந்தரியே யெனைக்காக்கு மழகுதிரு வடிபணிய வறியேன் றாயே, யுந்நாமா யெனையமைந்தா யுத்தமியே யுனக்காரொப் பார்கண் டாயே, வந்தனையே யெனைக்காக வாமளிப்பார் வே றெவரே வழங்கற் பாலார். (உஉ)

வேறு.

நித்தியா நந்தநிர்மல சொரூபீ நீடுல கிரக்ஷகி நீயே
மெத்தறிவோர் சித்தமிசை மேன்மேலு முற்றவளும் விமலைநீயே
சித்தர்தொழு மடிதம்மைச் சிறப்பாக யான்பணிந்தே சென்மம் விட்டேன், கற்றவர்கள் மிக்கபுக ழானந்த நாயகியே காத்தி டாயே. (உ௩)

வேறு.

அந்தமாய் துதித்தே யம்பா ளடிமலர் வணங்கும் போது
சுந்தரன் றாதனுள சுயம்புவை நதியுங் கண்டா
டந்தனன் சென்னி தாட்குத் தவப்பலன் கண்டே னென்று
பந்தமாய்ப் பரமன் றன்னைப் பார்த்திவை துதிக்க லுற்றாள். ()

சங்கரா சிவனே சம்பு சதாசிவப் பொருளே சத்தாய்ப்
பொங்கரா வணிந்தோய் பூமான் கங்கொய்த புநக மூர்த்தி
திங்களை யணிந்த சோதி திரிபுர மெரித்த தேவே
பங்கமில் லாமல் காப்பாய் பரமனே சரண மென்றாள் (உ௫)

பத்திரக் கைலை விட்டுப் பாருமோ ருய்ய வெண்ணி
மித்திர மாக க்ஷேத்ர மிகமனம் விரும்பி வந்தாள
அத்திர முறையுந் தேவர்க் கரசனு மாதி சேடன்
சத்திய புனைய டைந்து சார்ந்துயர் துயரொழித்தார். (உ௬)

வித்தகா காலகாலா விறைவுட ஞடி னோர்கு
நித்திய பகிழ்வோ னாகி நீள்புவிக் கரசாய வைப்பாய
பித்தகா பேதைப் பெண்மேல் பெருகிய கருணைசெய்வா
யத்தனு னுனைய டைந்தேனடைக்கல மடிமை யாமே. (உ௭)

என்றவ ளிறைஞ்ச வீச னிவடவ மெனை நோக்கி
முன்றிகழ் நினைவின் போலே மொழியுமபூ வராகனை றன்னைக்
குன்றலிற் புமானு வெண்ணக் குறையதைத நீப்பான் மாலு
நன்றாநின் றதிபா தீர்த்த புரீசனு நாமமு மொற்றும் (உ௮)

வேறு

அந்நதி யிடத்தி லம்பிகை பானு மராஜனுடன் சிவகணரு குழ்ந்தார், வன்னபா முனிவர் தேவரும் வந்தரா வரமது வேண்டினள் கங்கை, புண்ணிய நகைப் புனலிடை யிருந்து பொற்கொடி சமேதனு யாக்கு, மெண்ணிய பொருள் களிபாவுநீ யீந்தே யருளென வீந்தன னன்றே (உ௯)

அணியராய்த் தேவர் யாரும்வர் துற்று ரருவரை முனிவரும வந்தார், கணிதரன் வழியா மகமுதற் பருவங் கலந்திடுந் திதிகுடமதியிற், புனறிர ளுந்தி பொலியுநாட் போந் பூவராகப்பெருமாடான், குணமுடன் சென்றேறீள்கடற் படியிற் குறுகியே மணந்திடு வானே. (௩0)

காணினு நதியை யாடினு நீரைக் கையினு லெடுத்ததை யுணி
னு, மாணுறும பிறவி தொடர்ச்சியிட் டொழிந்து வருகுறை
மனைக்கையுந் தீப்பார், வேணியோ னருளும் விசயமும் பெறு
வார் வீக்குள்ளார் தங்களி னென்னைப், பேணியிந் நதியி னுய்த்
திடு னன்றிப் பிணமெரி தரினுமே முத்தி. (௫௧)

என்றுதான் சொல்ல விமையவர் சென்று ரிறைமுந் லாரு
மேகினரால், நன்றிது வென்றே நன்மலர் பொழிந்தார் நதியெலா
மிந்நதிக் கொவ்வா, வன்றுதொட் டின்று வரையினு மந்த விழா
வினை யன்புடன் புரிவார், கன்றுறு மகத்திற் கருதிய திருநாள்
கவினுமந் நதிமுதற் கடையே. (௫௨)

பின்னுமிந் நதியிற் பெருங்கதிர் மைந்தன் பிரமனு மனைவி
யோ டுற்றுத், தன்னுடன் சாபந் தவிர்ந்தினி திருந்தார் தலத்தி
னின் பெருமையைப் பேச, வென்னுரை யாமோ வியன்றமட்
டுரைத்தே னீற்குமுன் னினைமே குறித்தச், சொன்னவிந்
நதியிற் குழாரன் கோயிற்சோடச தலத்தினு மிதுவே. (௫௩)

நிவாநதிப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் ககக.

---

## திருவரத்துறைப் படலம்.

---

முன்ன நாடணி நகரணி நதியணி மொழிந்தேம்
பின்னு மாமுனி வரவையும் பினைந்தலம் பெற்ற
சென்னி மாதுளான் செய்கையுஞ் செப்பமாச் செய்ய
பொன்னி றத்ததா ணந்தியைப் போற்றியே புகல்வாம். (க)

வேறு.

தண்டகா வனத்தினின்று தவஞ்செயுமுனிவான் மீகி
கொண்டகார் வண்ணன் றன்பாற் கூடிட் நதியாய் வந்த
கெண்டையாள் மகிமை கேட்டுக் கிளர்வியுப் படைந்து வந்து
பண்டுள வாற்றி னூடேகவேதையைப் பரிவாய்க் கண்டான். ( )

கொண்டநற் றவவான் மீகி குலவிய விடையைக் கண்டு
உண்டைய வறிவா னின்னைப் பார்க்கவு மரிதாக் காதல்

கொண்டதந் நதியின் காதை கொடியனுக் குரைப்பா யென்ன
விண்டுவை யடைந்த வந்த நதியின்சீர் விளம்பக் கேட்டான். ()

வேறு.

எத்தலத்தினு மித்தலம் பெரிதிதன் றன்மை
பத்தியுற்றிடப் போதரா பலன்வகைக் கெட்டா
சித்தரானவர் சிறந்தடைந் திதிற்றவஞ் செய்தார்
அத்தனற் புகழளவிட லார்கொலோ வறிவார். (௪)

என்னசொல்லுவே னித்தல மெல்லையி லுகந்தான்
முன்னமாகிய முதலவ னுறைந்திவண் பேரான்
பின்னனுயகன் பேசிடு மூர்த்தியாச் சிவந்த
வன்னமாகியோன் வழங்கிடும் வரம்பல வம்மா. (௫)

பண்டைநாளையிற் பவனனு மனந்தனும் பகைத்துச்
சண்டைசெய்திடத் தரங்களைச் சகலருங் காண
வண்டர்நாயகன் வாழ்ந்திடு மேருமா மலையின்
கண்டவுச்சியை மூடினன் கடுவுளோன் கனன்று. (௬)

மூடிக்கொண்டபின் மேருவின் முடிகளி லொன்றை
ஈடிமாருதி யசைத்திடின் வீரனீ யென்றான்
கூடலாவதோ வச்செய னமக்கெனக் குறித்து
நாடலாயின னாரத மாமுனி தனையே. (௭)

வேறு.

நாரத னோடி வந்து நல்லிசைக் கூட்டிப் பாடச்
சீரிய வனந்தன் கேட்டுச் சிரமசைத் தாடநின்ற
வீரிய னுசாற்று விசைகொடு மோத லாலே
பாரிய சிகர மூன்று பாரினில் வீழ்ந்த தம்மா. (௮)

இவ்விதத் தன்மை கண்ட வேந்தலா மனந்தன் சீறித்
திவ்விய விசையிற் காது திரும்பிடுஞ் சமயந் தன்னில
கௌவையில் வலியால் வென்ற களனை வெல்லத் தானுஞ்
செவ்விதா மித்தலத்திற் றிகழ்தவ நெடுநாட் செய்தான் ()

வேறு.

ஆறுமாறு மாறுமாறு மாறுமெட்டு ‡ மேதவிர்த்
தாறுமாறு மாறினோடு மாறுமைந்து † மன்றியே

---

‡ குரோதம்
† மன்மதன்

யாறுமாறு மாறுபத்து மாறு * மொன்பதாகவே
யாறுசென்னி யைந்துளானை யகத்திருக்கச் செய்தனன். (கo)

வேறு.

எந்தவிட யமுங்கவரு மிதயமதை வசப்படுத்தி
முந்தியநல் லறிவடக்கி மூர்க்கவழி முயலாமற்
புந்தியினை யரன்பதத்திற் புகவிட்டே பொலிவுபெற
நந்தலிலா வருந்தவத்தை நாகவிறை புரிகின்றான். (கக)

வேறு.

பொறிபுலன் வழிசெலா தடக்கிப் புந்தியை
நிறைபெரும் பொருளிடை நிறுத்தி நேயமாய்க்
கறைமிடற் றண்ணலைக் கருதி யூண்டுயி
லறுதிபெற் றிருந்தன னருந்த வத்தினே. (கஉ)

வேறு.

கொண்டநற் றவத்தோன மறைதெளி பாரான் கோடையை மனதிலே யெண்ணி, னண்டிய தவத்தீப் புகையழற் கூடி யமரு மென்றிசைகொளா தப்பால், மண்ட வமரர் பயமடைந்தோடி வழுங்கின ரரனிடை யிதனைப், பண்டிரா னறிவே னவனெனைக் குறித்துப் பன்னெடு நாட்டவம் பயிலல். (கங)

வேறு.

என்றமரர் தமக்குரைத்தே யீசனவ னனந்தனிட மேகக் கண்டே, யொன்றியநன் மனத்தோடே துதிசெய்து நமஸ்கரித் தே யுன்னைக் காணப், பொன்றலிலா விந்தலத்திற் றவம்புரிந்தேன் புண்ணியனே பூதநாதா, வின்றெனக்கைந் தொன்றுரு மெழிலு ருவைக் காட்டெனக்கென் றிசைத்தான் சேடன். (கச)

அண்டர்பிரா னவ்வுருவத் தொடுவரவே யனந்தனுந்தா னன் போடேத்தி, மண்டுபுகழ்ப் பணியிறைபே வேண்டுவர மென் னெனவே மருவுநாமங், கொண்டிடவென் பெயராலே யிப்பதி தானருள்வையெனக் கொடுத்திட் டையன், உண்டுகொலோ வரமினியென் றுரைத்திடவே யனந்தனுந்தா னுரைக்கலானான்.

வேறு.

முன்னம் வாயுவோ டென்வலி காட்டிட மேருத்
தன்னமாமுடி படத்திறுற் றடுத்துறும் போது

---

* சௌமியம்

பன்னுநாரத மாமுனி வந்துபண் பாடக்
கன்ன மீந்துநற் றலையசைத் திடவது காலம். (கசு)

வாயு மீறியே மும்முடி கொண்டுபோய் மறைத்தான்
ஆய காரியந் தீதுசெய் யவனையா னுண்ண
நீய ருளவே வேண்டுமென் றிரந்திட நிமலன்
பாய வாயுவாய் நானுமுற் றிருத்தலாற் பலிபா. (கஎ)

வேறு.

ஆயினு முனக்குண் டளவுநீ யுண்ண வளித்தன னெனவுரைத் தையன், மாயமாய் மறைய வாயுவை யுண்ணும் வகையினை மன்னுல கத்தோர்க், கேயுமா றரவத் துறையெனும் பேருளியைந்திடும் வகரவுச் செருவ, சேயரத் துறையென் றுரைத்திடல் சான்றுந் தேர்ந்துநீ கொள்கையென் றிசைத்தான். (கஅ)

வேறு.

இந்த நற்றலப் பெருமையை யியம்புறக் கேட்டே
முந்து மிந்நதி யேழ்துறைத் தலத்தினுண் முதன்மை
யெந்தை யாதென விசைத்திடக் கேட்டுமற் றவற்றின்
விந்தை கூறுவல் வேண்டிக்கே ளென்றனன் விடையும். (கசு)

திருத்த மானதோ ராதிநற் றுறையதன் குணக்கிற்
பெருத்த தோர்திரு மாலயன் றுறையதிற் பெரிதே
வருத்தந் தீர்திரு மான்றுறை யதனிற்கீழ் மன்னு
கிரித்து றுந்திரு வாடுநற் றுறையதின் கிழக்கே. (௨0)

பண்டு ளான்றிரு வதிட்டநற் றுறையதன் பாங்கே
திண்டி றற்றிரு வரத்துறை தெய்வமாப் பதிக்கீழ்
கொண்ட நற்றிரு முடவன்றன் றுறைப்பதிக் குலவு
மண்ட லுற்றபெண் ணாகட மெனுந்தல மருங்கே. (௨க)

திருக்க ரந்துறை யகத்தியன் றிருவரத் துறையிற்
செருக்கு வான்மீகி வதிட்டன்றன் றுறைவயிற் சேர்ந்தா
னருக்கன் மைந்தனு மாடுநற் றுறையினி லமர்ந்தான்
றருக்குமாற்றுறை சேர்ந்தனன் மிருகண்டு தவனே. (௨௨)

பின்னு மாலயன் றுறையினிற் பெருமைசால் ராகு
மின்னு மாதிநற் றுறையிலிந் திரன்மாண்ட வியனுங்

கன்னி பின்னுா தொகையதாய்ச் சிவதலங் கலந்தார்
பன்னு சோடச் தலமதாம் பாரின்மாற் கைக்தே. (உ௩)

பூத மைந்தினுக் கைம்பதி புகன்றது மறிந்தாய்
பேத மன்றிவர் தவைந்துமே பெரும்பதி யடையும்
யாது காரணந் தானெனி லேந்தலப் பெயராதி னீற்றுக்
கோத யல்லெழுந் தாமவை திருவரத் துறையாம். * (உ௪)

வேறு.

பிறக்கி னுந்தல மிறக்கி னும்விழி சிறக்கி னும்பெயர் நினைக்கினும், பிறக்க வும்புவி யில்லை காண்பரம னடியில் வாழ்வுபெறு புனிதரென், றறபெரும்பலவு நாலு ரைக்குமுயிர் போகுமுன்னொருவ னஞ்செவி, திறத்த றத்துறைபெ னப்பு கன்றவிடில் சென்ன மிலையிது காணுமே. (உ௫)

வேறு.

காது ரைத்திடுங் கருணை தன் மந்திரக் கவினாற்
றீத கற்றிபெச் சிவனுந திருநதிடு மோக்க
மாது மந்திரத் ததிகமா மரன்பெய ரறையிற்
காது பெற்றபேற் றினையெவர் முடியுறக் கரைவார். (உ௬)

பாலகாசியி னுயிரத் ததிகம்பார் விருத்தைச்
சாலமற்றதி னுயிர மதிகமித் தலந்தான்
காலெழுமியின் காசியா மரத்துறை காண்பா
யாலுடன்வலஞ் சுழிக்கண பதியையு மறிவாய். (உ௭)

கங்கைநற்றல முளபல குறிகளுங் காண்பா
யிங்குவநதிச் சந்திர னிருநதகே சான்றுங்
கங்குல் நீணிறக் கவுசிகன் புரமுமே கண்டாய்
பொங்குசானவி யினும்வெள்ளா றதுபெரும் புகழே. (உ௮)

வேறு.

மாதை நோக்கியே வராகனு மேல்முக மமைந்தான்
நீதியம்பிகை யழைத்தனள் நிவாநதி யென்று
மோந்தநீக்கியே புனிதமே கொடுக்கும்வெள் ளாறு
மோதியானுமே தீர்த்தபு ரீசனென் றறைந்தான். (உ௯)

---

* இதன் விரிவுரையை ௬-ம் பக்கம் ௬-ம் செய்யுளுரையிற் காண்க.

நன்று நன்றுநீர் நவின்றது நாடொறு மறிவோ
மின்று கூறிப்பின் னிங்குநின் றிறைவனைப் பணியச்
சென்று புண்ணியப் பேறெலா மடியனேன் சேர
துன்று றம்புனல் படிந்துயர் சிவன்றனைத் தொழுது. (௩௦)

சென்று வந்துமே யணுகினன் சேரவே வேண்டி
நின்று சொல்லிய பலவகைப் பொருளையு நினைவாய்
நன்று கேட்பனு னீவிடை யருளென நவின்றான்
குன்று றாக்குண நந்தியு முத்தரங் கொடுத்தான் (௩௧)

தேடி மாமுனி தீவினை தீர்ந்ததென் றிசைத்தே
யாடி மாநதிப் புனலபடிந் தவனையே யன்பாய்ச்
சூடி மாமுடிச் சுருதியா லச்சொல்வ னந்தா
நாடி வந்தன னுனிலத் தாலய மதனை. (௩௨)

கண்ட நன்மனு வியற்றியே கட்டட மதிலுங்
கொண்டல் வந்தடை குறிகளுங் குவிமலைக் தொப்பாய்
விண்ட மாமதிள் சிகரியா வரணமு மென்மேற்
குண்ட வாறகழ் விப்பையு நோக்கினன் குறிந்தான். (௩௩)

தொண்டு செய்பவன் மூவலம் வந்துமே தொழுதான்
வண்டு றுங்குழல் வல்லியும் வந்துமுன் வணங்கிக்
கண்ட மாதவ னம்பிகை திருவடிபலகால்
தண்ட மென்றடி பணிந்தனன் றரணியில் வீழ்ந்தே. (௩௪).

வேறு.

ஆதிசுந் தரியுநீ யனுதர சூக்ஷியுநீ யண்டபகி ரண்டுநீயே
நீதிகுரு வன்னைநீ நித்தியகல் யாணிநீ நிமலவா னந்திநீயே
கோதிலா புராணிநீ நாரணன் சோதரி குலவுபூ ரணியுநீயே
யேதிலார்க் குதவுநீ யெவரையுங் காப்பைநீ யேழைபங் காளிநீயே

வேதியர்கள் பூசிக்க வீற்றிருக் கின்றநீ மெய்யடிய ருளமாகுநீ, மேதினியி லுன்னைவிட வேறொருவ ருண்டோவி ளம்புவார் ஜெகதீஸ்வரீ, நீதிலா சத்திநீ திவ்வியகுண பூஷணீ திருவடியிற் சேர்ப்பவளுநீ, சோதியாய் நின்றிடு மரத்துறையில் வாழ்கின்ற சுத்த வா னந்தவுமையே. (௩௫)

அந்தரி பராம்பரி நிரந்தரி துரந்தரி யமலிபிர ணவரூபியே
தந்திரி கிருபாகரி சுமங்கலி மதங்கிநீ தத்வமசியானவளுநீ

சுந்தரி புராந்தரி தயாபரி திவாகரி சுராசுரர் வணங்கு நிமலி
விந்தைமிகு சூலிமிகு நீலிவிழி சேலியே வேண்டினே னருள்பா
லியே. (௩௭)

வேறு.

விண்டு பின்னவ னேகலும் விமலனைக் கண்டு
கொண்டவைந் தெழுந் துள்ளுறக் கைசிரங்கூப்பி
பண்டை நான்மறை பாடிய பரமனைப் பகர்ந்து
தொண்டி னைத்தவ னேதினன் பலதரஞ் சூழ்ந்து. (௩௮)

வேறு.

நாகம தடுத்தனை நாகம தெடுத்தனை நாகமது வேபூணினைப்,
நாகம்நீ ருற்றனை யாகமுமை வைத்தனை நன்றாக மத்தினுற்றாய்
நாகநா டரியவனை நாய்க்கடைய னறிவனோ நாகமலரணிபாதனே
நாகனால் வழிபட்ட நன்னாக னுக்கருள்செய் நாதனே யருள் புரி
வையே. (௩௯)

வேறு.

செய்ய வேண்டிய யாவையுஞ் செய்துபின் சேர்ந்தோ
னுய்ய வேண்டிய் துறுதிகொண் டோகையா னுடனே
துய்ய தான்யுகத் தொகையுளான் விடையனைத் தொழுதுக்
கையு வாயுமெய்க் கரணமு முரிமையாய்க் கலந்தான் (௪௰)

திருவாரத்துறைப் படலமுற்றிற்று.

ஆக செய்யுள் கருக.

## நீலமலர்ப் பொய்கைப் படலம்.

பண்டை நாடிகழ் பௌண்டரிக வாசுதே வன்றான்
அண்டொ றாதவன் யாருக்கும் வலியனு மரசன்
கொண்டல் வண்ணனுங் கண்ணனைக் குறைசெய நினைத்துச்
சண்டை செய்தனன் சராசந்த னோடவன் சார்ந்து. (க)

எட்டி ரண்டொ டெட்டுமே முறைமுறை யெதிர்ந்து
விட்டி டாதமர் விளைத்திடமேவுமா விளைத்துக்
கெட்ட லைந்துபின் கிளர்வட மதுரையை விட்டுக்
கட்டம் நீங்கியே துவாரகை யணுகினன் கண்ணன். (உ)

விட்டி டாமற்போய் வெகுவிதம் போரினை விளைத்தான்
துட்ட னல்மனக் கிலேசத்தாற் சோர்ந்துமே யவன்றன்
கொட்டம் நீக்கிடக் குறித்துவந் தித்தலங் குறுகி
நிட்டை யார்தவம் புரிந்தன னீண்டமா றுனும். (௩)

அந்த ரத்தினும் வானினு மம்புவி யதிலுங்
கந்த ரம்மெனக் கதுவிய தவப்புகை கடுகி
நொந்து மால்கொள வானவர் நோன்புறு முனிவர்
வந்த ரத்துறை நாதனைச் சூழ்ந்தனர் வணங்க. (௪)

பெத்த நொந்தன மேலினிச் சகிக்கிலோ மேலோய்
நித்த வின்னலை நீக்குவாய் நெடியமா றவத்தைக்
கர்த்த னேயென கையிலையன் கருணையோ டெழுந்தே
அத்த வத்தினை யொழித்திட மாயன்முன் னணைநதான். (௫)

ஏற்றின் மேல்வந்த விறையினைக் கண்டன னிறைஞ்சி
யாற்றி லேன்றுய ரையனே யவனைக்கொல் லெனவே
போற்றி னன்வர மீந்திடு புராரியு மகிழ்நதே
வேற்றி லானைத்தான் வென்றிடத் தந்தனன் விமலன். (௬)

வேறு.

நேர்த்தியா யென்ன நெடுங்கணு லருவி நிலத்திடை வீழ்ந்திட விறைஞ்சிக், காதலை யையா கனகனைத் தொலைக்க கடுநர சிங்கமாய் போது, பார்த்திவ மூர்த்தி சரபமாய் வந்து பழைய வென்பலதனைநீ கவர்ந்து, கீர்த்தியைக் கொண்டா யதுமுத லெனக்குங் கெழுவலி குறைந்ததை யருளே. (௭)

தோத்திரஞ் செய்த தூயமா லவனைத் துலங்குறக் கைகளாற் றாக்கி, நேத்திர சலத்தைத் தன்கையாற் றுடைத்தே நீள்வலி யருளினு னீச, சூத்திர மடக்கி யழகனை யணைத்தே யாசையா மவைகளை யளித்து, நேத்திர நீரா னிறைவிட நீலப பொழி கையின் றுலகினி னிலவும். (௮)

வேறு.

நீலமே கத்தன் கட்புன னிலத்தினில் விழலால்
நீல மாமலர்ப் பொய்கையென் றறைந்தன னிமலன்
நீல கண்டனு நேர்த்தியா நெடும்பெயர் வகுத்தான்
வலை யுற்றமால் மாதவா வென்றுபேர் விழைந்தார். (௯)

கண்ட தேவரும் புனல்படிந் தாடினார் கருதிக்
கொண்டல் வண்ணனுங் கொற்றவன் வலியினைக் கவர்ந்தோன்
பண்டு போலவே பெற்றதன் பலமதைக் காட்டி
விண்ட பேரிது நீலமா மலர்ப்பொய்கை மேவி. (௪0)

ஆடினாரதை மதித்துளோ ராசையி னயின்றோர்
தேடினோரதைத் தீண்டினோர் தேவராய் வாழ்வார்
சூடினோன்மதி சொன்னதிவ் வரமெனச் சொல்வார்
கூடிடும்பல னளவினைக் கூறுவ தெவரே. (௧௧)

வேறு

கைப்பெ றும்வளத் திகபர முழுதுறக் களிப்பார்
தர்ப்பணஞ்செய்து விதிமுறை தானங்கள் புரிந்து
முற்படும்படி பிதிர்தனக் குவப்பமுன் னீந்து
யிப்படிக்கைந்தோ டெட்டையுஞ் சொல்லினோ ரெவரு

அப்புனல் தனிலேதா னாடினா ரயன்மா லாவர்
தப்பிலா முனிவோ ரெல்லாம் வரந்தருந் தரத்த ராவ
ரொப்பிலாப் பொய்கை தீர்த்த முன்னின பேருக்கெல்லா
மொப்பருந் திருவும் பெற்றே யொருநர கெய்தி டாரே. (௧௩)

தேனலர் பொழிற லங்கள் செய்பூசை விரதமோமந்
தானமுந் தருமசந்தி தபமிவை முதலா வுள்ள
வானநற் பலன்கள் கோடி யதிகம்வந் தடைத லாகு
மேனைய பலனின் றுயா மிப்புகழ் நீலப் பொய்கை. (௧௪)

விரும்பியிப் பொய்கை மூழ்கில் வினைவளர் பிறவிநீங்குந்
தெரிந்துகொள் கும்பந்தன்னி லாதித்தன் சேரும்போது
வருந்திடும் பிதிர்பொ ருட்டே மருவிப் பிண்டந் தானம்
புரிந்திடு போர்கட்கெல்லாம் புரியினற் பலமனந்தம். (௧௫)

இத்தல நதியி னிசைவட பாலி லிருந்திடும் வடவால விருக்கம் மெத்தவவ் விடத்தில் மேவினோன் மாலுவெள்விடை யூர்தியி னருளால், சுத்தமா மயனுஞ் சேர்ந்தினி துறைந்தே நின்றிட வவ்விடந் தனிலே, செத்தவர் தமக்குஞ் சீருளார் தனக்குஞ் செய்பல னனந்தமாய்க்கூடும். (௧௬)

ஒவ்வொரு தலத்தி லோரொரு வர்க்கோர் வரமுல கெய்தி டலாலே. யிவ்வரத் துறையி லினியமா வயற்கு மெழிலுள வாதி சேடனுக்கு, மெவ்வன நதிக்கு மிசைகலைமகட்கு மிருக்குவான் மீகநன் முனிக்கும், கவ்வையை யொழித்துக் கருதியமுடித்தார் கழறவோ வித்தலப் பெருமை. (கஎ)

ஆதலா லிங்குப் பிறந்துளோ ரிறந்தோ ரமுகுடன் வாசமே செய்தோர், தீதலா லொழியத் தானமே செய்தோர் தீர்க்கமாய் மனதிலே நினைத்தோர், சாதியா லிழிவை யுற்றவ ரெனினுஞ் சார்வகைப் பிறவியேழ் தனிலு, மாதியாம் பரம னருளினால் மோக்கமடைவது திண்ணமென் றறியே. (கஅ)

நீலமலர்ப்பொய்கைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் ககசு

## வடவால விருக்ஷப்படலம்.

கெயையொடு பிரயாகை காசி கேடிலா சனுர்த்த நந்தா
னயன்றலைக் கபால க்ஷேத்திர மறையுமிவ் விடத்திற் பல்லாண்
டுயர்தரு மறமெண் ணன்கோ டுளபுண்ணி யங்கள் செய்தோர்
பயனப வர்க்க மாதிபலனெலா மெய்த றிண்ணம். (க)

ஆதலாலிங்காலின் கீழன்புட னொருகால் யாரு
மேதேனு மொன்று செய்வோர்க் கெய்திடுபலன் றான்பல்ல
ஆதியான் பங்கயத்தா னரிமுதற் றேவரெல்லா
நீதியா யங்கடைந்தே யருள்செய்வர் நியதி யோடும். (உ)

தந்தையே யம்மான் றயார்தங்கிடு மரபோரைந்தாந்
தொந்தமில் குரவராதி சொற்றிடு வோர் கட்கெல்லாம்
புந்தியில் நினைந்தே பிண்டம் புண்ணியத்தோடு செய்ய
நந்தலிற் பலன்களெல்லா நணுகிடுந் திண்ணந்தானே. (ங)

அனந்தன் செய்தவத்தைக் காண வுடைந்திடு மமரரெல்லா
லனந்தமாஞ் சிவகோடிக் கருடரும் வடவா றன்னி
லனந்தன்றன் புண்ணியத்தா லரனடி பூசைசெய்தே
லனந்தன் செய்தவம்போ லம்மாவமர்ந்தன ரென்பமாதோ. (ச)

வந்ததோர் தீர்த்த தேவர் முனிவர்கள் வானோ ரெல்லாஞ்
சிந்தனைசெய்து நின்றார் சீதர னயன் சேர்சித்தர்
விந்தையாய்ப் பலவாய்வந்த விபத்தெலாம் தீரக்கண்டே
புந்தியில் மகிழ்ந்தங்குற்றார் பூதலம் சிரேஷ்டமென்றே. (௫)

வடவாலவிருக்ஷப்படலமுற்றிற்று.

ஆ செய்யுள் ௧௭௪.

---

## அன்னமலர்ப் பொய்கைப்படலம்.

---

தூங்கானை மாடமதி லுறைவணிக மரபுளான் றாய்கலிக் கம்பனென்பான், வாங்காமல் வருபரம வடியார்க ளுக்கனம் வழங்கிவரு நாளிலேதான், தீங்குசெய் திடுமனைவிசெய்யகை த்துணித்து பின்றேர்ந்த நல்லடியாருட, னோங்குறு மாத்துறை யினுற்றதன் பெருமைகளி லோங் கன்ன மலர் பொய்கையே. (௧)

வேறு.

இந்த வோதிம மலரெனும் பொய்கையி னியற்றன்
முந்து நாளையிற் கலைமகள் சாபத்தை முற்றுந்
தொந்தத் மானதைத் தொலைத்துற தோன்றிய பொய்கை
வந்த வாறிது கேட்கவென் றுரைத்தனன் வள்ளல். (௨)

மின்னு பூவுறை பிரமன்றன் மனையிட மொருகால்
தன் னிசைப்படுந் தரணியி லுயிர்களுக் கெல்லாஞ்
சென்னி மாமுகம் வேறதாய்ச் செய்குவ னென்றான்
என்னி சைக் குரலங்ஙன மில்லையோ வென்றான். (௩)

அக்கணத்தினி லயன்சினந் தரி வையை நோக்கித்
தக்க நீசரில் நாரியாய்த் தோன்றெனச் சபித்தான்
மிக்க வையநீ பனவனைப் பிறந்தெனை மேவத்
தக்க நல்வரங் கொடுத்தரு ளென்னவே தந்தான். (௪)

சண்டங் கூறிய யிருவரும் பாரினிற் சார்ந்து
பண்டு சொற்படி பரிவுடன் கூடியே படியிற்
கண்டு மேயிடைக் காடரோ டதிகமான் கபிலர்
வீண்ட வள்ளுவ ரவ்வையோ டெழுவ ரீன் றனரே. (௫)

செப்பு மக்களைச் சேர்ந்தொவ் வோர் தினத்தினிற் செனிக்க
வொப்புஞ் சாபத்தை வொழித்திடப் பதுமனு முன்னி
கற்பு வாணியோ டெய்தியித் தலந்தனிற் கணவன்
றப்பி னிட்டையைப் பார்த்தன ளாதியாந் தையல். (௬)

இந்தச் சாபத்தை யொழித்திட வெனக்கரு ளென்ன
முந்தி யித்தட மூழ்கிநீ முதல்வனைக் கருதிச்
சிந்தை யுற்றிடச் செழுங்கறை மிடற்றவன் சேர்ந்து
வந்து னக்கருள் வழங்குவன் வல்லியென் றுரைத்தான். (௭)

கந்த மாமல ரோன் சொல்லு முன்றடங் கண்டே
யெந்த மாதவ மெத்தவத் தினுமரி தென்றே
விந்தை யிற்றவ மியற்றினன் விமலனும் வியந்தே
புந்தி கொண்டதிப் போதுநீ புகலெனப் புகன்றான். (௮)

எங்க ளுபகி நவின்றிடு மென்புலை நீக்கி
யங்க ளுவெனக் குரைத் தவச் சாபத்தைப் போக்கி
யெங்க ளுபக னுடன்மகிழ் வெய்தி வாழ்ந்திருப்பப்
புங்க வாவருள் வாயென வாணிபோற் றினளே. (௯)

மலரு ளோனுமவ் வரமெனக் கருளென வணங்கச்
சிலைவி லாளனுஞ் செப்பின விசைந்து நன் சிறப்பாய்க்
கலையி னுபக வாணிய காவலை யொழிந்தே
யலையுந் தண்புன லாடலாற் சுத்தமே யானீர். (௧௦)

செய்த பாவமுற் செனனத்திற் சேருந் தீவினை யோ
டெய்தும் பீடையு மெழில்மனக் குறையும் விட் டேகி
நொய்தில் மாநிதி சுதன்மனை விரும்பிடு நோன்மை
யெய்து மித்தட மூழ்குவோர்க் கென்றன னிறையும். (௧௧)

அன்ன வாமென வரிமுத லமரர்க ளார்த்தார்
சொன்ன மாமலர் மாரியுஞ் சொரிந்தனர் மறைய
வன்ன மாமலர்ப் பொய்கை யின் பெருமையைச் செப்பி
பின்ன ரேகினன் பிரட்டியோ டயன்றன துலகம். (௧௨)

சொன்ன தன்றியுஞ் சூழ்தட மற்றுமொன் றுளதா
லன்ன திற்பெறும் பெருமையை யறைந்திடற் பாற்றே

மன்னு தீவினை பாற்றிட மாலுக்குப் பயந்த
தென்னு நீலமா மலர்ப் பொய்கை யென்பதொன் றிலங்கும்.(௧௩

அன்னமலர்ப்போய்கைப் படலமுற்றிற்று.
ஆ செய்யுள் ௧அ௭.

## சனி சேய் சாபம் நீங்குபடலம்;

காரிதா னிங்கே யுறைந்ததைச் சொல்வேன் காசினிக் கரச னே கேளாய், பாரினு னிராசி யீராறுமே சொந்தம் பானுமாம தி தனக்கென்பார், பாரினில் குருசேய் வெள்ளி சுழன்மேதை பணிந்திவர் வீடளியென்னச், சூரியன் மதிதான் தனித்தனி யெ ாருவீடளித்தனர் துணிவுட னவர்க்கே. (௧)

வேறு

பின்பு ராகுகேது வந்து பேசிவீ டிரப்பவே
வன்பு சானு முங்க ளுக்கு மாறு நாங்க ளாகையால்
முன்பு நில்லீர் போமெ னத்தா முடவன் சேய்தன் வேண்டவே
யன்பொ டொவ்வோர் வீட் ளிப்ப வலரி தானுஞ் சீறியே. (௨)

வேறு.

ஆருமே யில்லை யென்னவவ்வரா மெமக்கு மாறுச்
சேருத லறிந்த சேயே திண்மைசேர் சனியே நீங்கள்
நேரவீ டளித்ததென்னோ நீதியென் றறிந்தீர் கொல்லோ
பாரினி லும்மைப்போலப் பார்த்திலேன் தன்மவான்றான். (௩)

வேறு.

என்று சேயை நோக்கியே யீலையாலே நொந்துநீ
நன்றுவே னூரடைகுவாய் ஞானமற்ற சனியனே
உன்றன் கைகால் விரல்கடா ய்மாழுகசீயு நொந்துமே
நின்று நீயுமலையென நினைந்து வாடினார்களே. (௪)

வேறு.

ஆகையா லிதனைத் தீர்க்க வயனிடம் வேண்டிச் சென்று
ஏகுநா ளின்னலென்றே யென்னவே சிலநாள் சென்றால்
போகுநா ளதனைக் கண்டே புராரியைப் பூசைசெய்வாய்
ஆகமும் பண்டு போலே யழகுள்ள தாகுமென்றான். (௫)

அப்படிச் சொல்லக் கேட்ட யாதித்தன் மைந்தனென்பான்
தப்பிலாத் தலங்கள் நண்ணித் தவத்திறற் றீர்தலின்றி
யிப்புவி யெங்குஞ் சுற்றி யிங்குவர் துறைவதானான்
செப்பினான் பட்ட தெல்லாஞ் சிறந்திடு மீசன்பாலே. (௬)

பரிக்ஷுசன் கரண நான்கும் பண்புறு புலனோ ரைந்துந்
தெரிந்தொரு வசப்படுத்தித் தியானிக்கச் சிவனார்வந்து
புரிந்தவர் தவமுனைப்போற் பூதலத் தெங்குமில்லை
வருந்திட வேண்டா மென்று வரமவற் கருளினானே. (௭)

தந்தை சொற் சரதந் தன்னைத் தவிர்த்தவா தவத்தினாலே
யெந்நா ளினுமி லங்கு மெழிற்பல னொளிதி னெய்திப்
பந்தமா னதும கற்றிப் பாரெலா மறியும் வண்ணஞ்
சிந்தையானது தெளிந்தே சீரெலா மடைவை யேனும். (௮)

தாதையா லடைந்த சாபந் தவிர்த்திட லாகா தப்பா
வாதலால் ஞேயுமற்ப மொருவியே யாகநீலம்
பாதமு முடவனாகப் பாரினிற் றிதிப்பா ருன்னை
மீதுட னினிமையாகு மிசைசுக மினிதுண் டாமே. (௯)

இத்தனை பலனுந் தந்தே னுன்பிதா தபன னிட்ட
சத்திய விரதம் பொய்யா சதுர்யுகந் தவஞ்செய் தாலும்
வித்தைகயாள் கௌரி யாளும் விலக்கிட மாட்டா ளென்றே
மெத்திய தாதைபானீ மேவென வரன் மறைந்தான். (௧௦)

தொல்லைநா டொட்டே யிந்தத் தலத்துறு சுன்னோன் றன்னை
பெல்லையோ ரேத்தித் தங்க ளிடரழிந் தெழிலை யுற்றார்
சொல்ல நான் வல்லேனோ சொன்ன சொற்படிப் பூசை செய்யில்
சொல்லிய பலன்கள் யாவுஞ் சோர்வறப் பெறுவா ரம்மா. (௧௧)

ஈதிவ ணிற்க முன்ன மிரவிதன் சாப முற்ற
மீதுள குருதி யோன்றன் மெய்தனிற் கயரோ யுற்றே
மேதுநான் செய்வே னென்றே யெண்ணுந வெண்ணிச்செவ்வாய்
தீதினால் மயங்கி யொன்றுந் தெளிவிலா தலைவதானான். (௧௨)

பித்தனாய் மயங்கி நெஞ்சம் பிதற்றிடும் படியாய் நின்று
னத்தினா லுலகைக் காப்பே னென்பிணி தீர்ப்பா ருண்டோ

சித்தனே சிவனே யென்றுஞ் சேயுமைக் கரனே யென்றும்
முத்தனே வரனே யென்றும் முதல்வனைப் போற்றி செய்தே.()

இப்படித் தலங்கடோறு மினிதிருந் தனேக நாட்கள்
டப்பிலா தவங்கள் செய்து தன்பிணி தணிபா தாக
விற்பிடி மேருக்கையான் விளங்காத் துறையினண்ணி
மெய்ப்படித் தவரை நோக்கி மேவினன் றவம் பண்ணுடாம்.(கச)

சிந்தை யைந்தொன்றுஞ் சேர்ந்து செழும்பொறி யீசன்பாலே
யுந்தினன் முகத்தால் நோக்கி யோர்கையை யூன்றி மண்மேல்
சிந்தையாய் மட்டியிட்டு வேண்டினன் சிவனெம் மானைக்
கந்தனைப் பயந்த கொன்றைக் கடவுளு மகந்துவந்தார். (கரு)

நொந்தனை யென்னை பேறா ஞேற்றமோன் பதனு லென்று
சிந்தனை வென்ற வையன் செகத்துறை யாவ ருக்கும்
பந்தனை நீக்கு கெங்கோன் பார்த்துச்செவ் வாயை யன்பால்
சுந்தரப் புமானேயென்று சோதியான் றுலங்கச் சொன்னான். ()

பெற்றனை சாபந் தன்னைப் பேசிர வியினு லந்தைச்
சற்றுநாள் கழிந்த பின்னர் சாருமிந் நதியி லாடி
லுற்றிநிஞ் சாபநீங்க வுனக்குள்ள குறைகடீரும்
நற்றவப் பலனுண்டாகு நண்ணுவை பழமை போலே. (கஎ)

கர்த்தனு ரருளாற் செவ்வாய் கடுகவே சுவேதை யாடிப்
பத்திர மலர்க ளாதிப்பலவுமே கரத்திற் பெற்றுச்
சித்தனு யவனுஞ் சேர்ந்து செப்பிய வழிடே காதி
முத்தனைப் பூசித் தூற்றே முதன்மையாய் விளங்கினனே. (கஅ)

சனிசேய்சாபநீங்குபடலமுற்றிற்று.

ஆ. செய்யுள். உ0௫.

## உபதேசப்படலம்.

இத்தல மமர்ந்த செய்கை யிதில்வரம் பெற்ற தெல்லாஞ்
சுத்தமாய்க் கேட்டு நின்ற சுருதிவான் மீக னென்பான்
புத்தனுய்ப் புவன மூன்றும் பாலனஞ் செய்யு நந்தி
யுத்தம பாதம் போற்றி யுரைத்திடு காதை சொல்வாம். (க)

வேறு.

ஆனன நான்கினு னரும்ப டைப்பினிற்
ருெனென முன்வருந் தக்க வேந்தனுப்
பானுவின் குலத்தினிற் பண்பு தோன்றவே
வானலர் பூவென வந்து தித்தனன். (௨)

அவன்பெயர் யாதெனி னற்பு தத்திரி
புவனவேந் தென்னவே போற்ற லாயினான்
சிவனிடத் தன்புகொ டேறு வேந்தனைப்
புவனியில் யாவரும் புகலல் மேயினர். (௩)

வேறு.

தருமமேயுரு வாகிய சாந்தனு ங்
கருமமன்னவன் காசினியாததிரை
வருமனி கத்தொடு வாழ்த்தெடுக்கவே
வருவ னாயினன் வாதைகள் மாற்றவே. (௪)

தீங்கிலா வேந்தனுந் திருவரத் துறையுற:
நீங்கிட வினையது நிமலன் பாதமே
தாங்குவான் மீகனுந் தவத்தன் றன்னையே
வீங்கிடும் புயமனன் வெளியிற் கண்டனன். (௫)

இப்படி யன்புட னிறைவன் பார்த்துழித்
தப்பிலா முனிவரன் றரணி மன்னவ
கற்புட னிவண்வருங் கருத்தென் கூறென
ஒப்பிலா முனிவவெற் குன்னரு ளீயென. (௬)

அய்யனே வரசனே வறைந்த வாசக
கொய்யல தெனினுநா னெடியிற் செய்குவேன்
பொய்யிலை யிதுநிசம் பொருந்தக் கேண்மதி
வெய்யவன் குலத்துளாய் விகற்ப மின்றியே. (௭)

என்றிட விறைவனு மெழுந்து போற்றியே
பண்டைநாள் வயதுளாய் பகரு நின்மொழிக்
கொண்டிடக் காத்தனன் கொடியற் கன்புடன்
தொண்டனு னதலின் றெழும்ப னுருவன். (௮)

நன்றுநீ யுரைத்தது நல்ல தாகையா
லின்றுனக் கருளுவே னினிய வாசகந்

சென்றுநீ ராடியே சிவனை நாரியைக்
கன்றலி லன்புடன் கண்டு வாவென. (௯)

வேறு.

அந்தமுனி யுரைத்தபடி யப்புனலிற் றோய்ந்தெழுந்தே யரனைப் போற்றிப், பந்தமகல் முனிவோர்கள் பலருடனே யுபதேசம் பகர்வான் மீக, விந்தையுரைப் படிமுறையே சமித்து நெய்தீ முதலாக வேண்டும் யாவும், வந்தனையிற் கொணர்ந்திடவே பெற்றதின்பின் னனுஞைரக்ஷை வகையிற்செய்தே. (௧௦)

செய்முறையுங் கைமுறையுஞ் சிறிதேனும் பிசகாமற் சுரமேறும, ஔபாசனையே மனுப்பகர்ந்தே யொழுக்கமுடன் குணமாதியுரைத்திடக் கொண்டே, பைபமது வாரமலகமகிழ்ந்தே யவிப்பாக மளித்தே யார்க்குந், தெய்வமுனி யரசனுக்குங் கொடுத்திட்டே யுபதேசஞ் சிறப்பச் செய்தான். (௧௧)

சித்தமதி லாங்கார மகற்றியபின் சேர்ந்தொருமை யாகும் வண்ணந், தித்திபெறு மைவிடாஞ் சேராமற் சிவனருளே சேருஞான, முத்திபந்த முனியான்று னுபதேச மொழிந்திட்டேவ முறைநாமோர்ந்து, வித்தமொடு தாசுமணி வெண்பசுவே புவிமுதல வேட்டோர்க் கீந்தே. (௧௨)

இப்புவியா வரசனவன் முனிபர்களுக் கிறையான வெழில்வான் மீகன், செப்பமல ரடியிறைஞ்சி யென்பரிசு செய்வதினி செப்புவாயென், றற்புடனே வேண்டிடவே யரசனைப்பார்த் தருமுனிவ னமலன் பாதந், தப்பிறாத் திருவினைநான் மும்மலமும் புறங்கொடுக்கத் தனிபஞைப் (௧௩)

வேறு.

தேசிக னுரையைக்கேட்ட தெளிவுள வரசன்றானு
மாசிலா தேசிகற்கு மனதுடன் குருதக்ஷிணைக்கை
யேசிலா தீபா விட்டா லெனக்கொரு பலனுண்டாமோ
வாசவன் வணங்க வாழும் வனசத்தாள் முனியே யென்றான். ()

விண்டவ னுரைக்கக் கேட்ட வான்மீக முனிபா மேலோன்
கண்டிகை யாரத்தாய்நீ கருதிய வண்ண மீகத்

தொண்டனா யாரு மன்பாற் றருகையிலா நிதியைப் போட்டுக்
கண்டவிவ் வால யத்தைக் கட்டியே முடிப்பையென்றான். (கரு)

அங்கதை யுரைக்கக் கேட்ட வரசனு மகம கிழ்ந்தே
யிங்குள வால யத்தை யெழில்பெறச் செய்யுங் கொத்தர்
பங்குள சிற்பமாரைப் பலரைக் கொண் டரிதாய்ச் செய்வித்
திங்குள விருடி தன்னைத் தெரிசித்தே யெடுத்துச் சொன்னான்.

ஆக்கினைப் படியே யந்த வாலய மதில்கடுபி
சீக்கிர முடித்துச் செய்தேன் றெரிந்திடு மண்ட பங்கள்
காக்குநல் லாகமத்தின் கருத்துள படியே சுற்றோர்
வாக்குறை வழாது நிற்க வகையுடன் வகுப்பித் தேனே. (கஎ)

இன்னுநான் புரியும் வேலை யின்னதென் றருள்வா யையா
சொன்னதோர் தலத்தின் வண்மை சொல்லவும் வேண்டுமென்ன
வன்னவர்க் காசை யோடு மரத்துறை தலத்தின் றன்மை
முன்னநா ணந்தி சொன்ன முறையெலா மொழிய லுற்றான். ()

பின்னுமே யுரைக்கக் கேட்பாய் பெரும்பதி யிதனில் வைகுந்
தன்னுள நதியுந் தாருந் தருஞான வரவத் தோனு
மென்னுளத் தினுமே தெய்வ மெவருவந் திறைஞ்ச லாகு
முன்னவ னனவீச னுறைதல மேன்மை முற்றும. (ககூ)

அத்தல மநேகத் துள்ளு மணிபெறு மாயி ரதெட்
டத்தலத் ததினு மேன்மை யறுபத்து நான்கே யாருஞ்
சுத்தமா மதனினைந்து சுருக்கிடின் முதன்மை யையா [மேலோர்
முத்தியைக் கொடுக்கு மென்று மொழிந்தனர் மறைநூல வல்

வேறு.

என்றெடுத் தியம்பியேழ் துறைத்தல மிந்நதிக்
கன்றுள வென்னலா லவற்றை யன்புட
னின்றுனக் கெடுத்துநா னிசைப்பன் கேளெனச்
சென்றதை புணர்ந்திடு நந்தி செப்புவான். (உக)

உபதேசப்படலம் முற்றிற்று.

ஆக செய்யுள் உஉசா.

## திருவதிட்டத்துறைப்படலம்.

கடையுகத்தின் கதையிதென வதிசயித்துக் காவலன்முன் கழறக் கேட்டே, யிடையிலுள சதுர்யுகங்க ளீரேழு கடந்ததென் விறைமாழாந்து, புடையிலுள தலப்பெருமை புகலுமெனப் பொன்னடியைப் போற்றிநிற்க, மடைதிறந்த வெள்ளமென மாமுனிவன் புகலலுற்றான் மன்னனுக்கே- (௧)

இப்பதியின் மேற்குளது வதிட்டகுடி யெனறிசைப்பாரெவரும் பாரில், செப்புதல மதற்குவமை செகதலத்தி னிலையென்பார் சீராய்க்கேட்டுத், தப்புடைக்கும் வேங்கைவனத் தரணிபனுப் பின்னகரந் தன்னைக்கண்டான், ஒப்பிகந்த வசிட்டமுனியுறைந்திருக்கு மதிசயத்தை யுரைக்கக்கேளாய். (௨)

வேறு.

முன்னோநா ளயன்முன் படைத்தகா லத்தி னூர்வசி யெனும்பெயர் மொழியுங், கன்னிதன் னெழிலாள் கலைவலா ளவளைக்கலந்திடக் கருதலுங் கருத்தில், உன்னிறு னுனலும் வயிற்றிடைவதிட்ட னூர்வசி சுதனென் வுதித்தான், மன்றுநான் மறைதேர் மலர்மகன் மேலா மரபினை நினைந்துநைந் தழுற்றான். (௩)

அன்னத்தைக் கண்ட வன்னவா கனனு மருஞ்சுதன் கட்புனலகல, முன்னோநாளாக வேங்கைமா வனத்தில் முதல்வனும் வைத்திய நாதன், நன்னதி சுவேத நதிக்கரை யுறைந்தா னயந்து நீயவன்றனை நாடிச், சொன்னதோர் முறையின் படிபணிந்தபர்வைத் தொலைத்தருள் பெறுகெனச் சொற்றான். (௪)

ஆங்கது கேட்ட வழகிய வசிட்ட னுங்கதே கருமமென் றடைந்தான், பூங்கணை யானை வென்றதோர் முனிவன் புகலருந் தவத்தினைப் புரிந்தே, யோங்கரன் றனை யாகமப் படியே பூசனை தோத்திர முனுற்ற, வீங்குனைப் புகழ்ந்தே னின்னைப்போ லன்பரெவருளா ரென்விறை யிசைத்தான். (௫)

சங்கரன் மொழியக் கேட்டபின் வசிட்டன் கசிந்துளங் களித்தினி திருந்தா, னங்கவன் றனக்கன் பராகிய தவத்தோரனேகர்வந் தவ்விட மமைந்தே, புங்கவன்றனைப் போற்றிநன் மறையைப் புகன்றவ னெடுதவம் புரிந்தார், இங்குநன்மாரி யின்றியே வருடம் பன்னிரண் டாகிய தெனலாம். (௬)

எங்குதான் போவோ மேதுதான் செய்வோ மிங்குள நாங்
கனென் றிசைத்தார், நொங்கிய தருண நாரதர் வந்தார் நோன்
பெலா நோற்றவா நோக்கிக், கங்கைமா நதியென் றுயிர முகத்
தாள் கடல்படுங் கங்கைநன் றுடன், தங்குமா வரசன் றனபதி
யவன்றன் றருவதில் மாபலி யொப்பான். (எ)

ஆங்கவ னிந்த வருந்துயர் நீக்க மடைவதை யறிந்ததைக்
காக்க, வோங்கிய தாள்யம் பொருள்வகை யனைத்து முதவியே
யோம்புவா னெவருந், தீங்கிலா வரசனிழிகுலந் தவனென் றிது
வரை யெண்ணியே சேரார், தாங்கொணுப் பசிநோய் தணிப்ப
தேபெரிது தடையிலா தவனை நீ யடைவாய். (அ)

மூந்தவோர் மொழியை நாரத னுரைத்து முதநூல கடைய
வே போனன், நொந்துள முனிவர் நோக்கியவ் விடந்தை நெ
டிப்பொழு திடைவிடா தேகி, தந்துள வரசன் றனக்கிதை யுரை
த்தார் தரணிபன் றனும்வந் திவரைப், புந்தியாற் பணிந்து போற்
றிசெய் திவரைப் புகலுவ தொருமொழி யானுன் (கூ)

அடியுளான் றனக்கு மகவிலா மையினு லருந்துய ரனேக
நா ளமைந்தேன், படியின்மீ தொருநாள் பலருடன் கூடிய பார்
வனம் வேட்டைமேற் சென்றேன், செடியின்கீழ் மதலைச் சிறுவி
யைபார்த்தேன் சென்றெடுத் தாண்மனை சேர்ந்தேன், முடியுளா
ய்சிசுவு முன்னகத் துறையான் முதல்வியைத் தீண்டிடா வென்
றே. (௧௦)

புடையசரீரி வாணியும் புகன்றள் புத்திபெண் றடயனு
முடனே, அடையுநன் னகரம் புறமுளவ வியதி லொருமாட மு
ண்டாக்கி, உடைமுத லுண்டி யுள்ளது மளித்தே யுவந்துகாப்
போரையும் வைத்தே, யிடையதில் பிணிக ளெய்திடா திருக்க
வெளியனு லானதுஞ் செய்தேன். (௧௧)

நாளொரு மேனி யாய்வளர்ந்தொப் பினலம்பெறு குணமிகவு
டையார், வாளொயி றனந்தன் சொலமுடி யாத வடிவை யெவ்வு
லகினுங்காணேன், நீறுறு நிதியிற் தவத்தினு மதிகம் நேரிழை
யவளும் நற்பருவம், வாணுறு கண்ணு ளவளை நீரோடு மகிழ்வோ
டு மளிக்குவே னென்றான். (௧௨)

பொருந்திநீ ரிந்தப் பூசையை யுவந்து புகழ்மணஞ் செய்
திடி லுமக்கு, வருந்திட வேண்டா தரசினில் பாதி வழங்குவேன்
மாறிலா தென்றான், திருந்திடு தவத்தோ ரேனையோ ரேனும்
யிருக்குநா ளளவினு மவர்க்கு, விருந்திட நானு மிருக்கிறே னெ
ன்று வேண்டினன் வதிட்டனை மிகவே. (௧௫)

யோசனை செய்தூங் குரைக்குது மென்றே யோர்பகல்த் த
வணைநா ளுதவித், தேசிகன் போனான் திருவுளச் செயலைத் தெரிந்தி
னெனவிறை யிருந்தான், நீசனன் மரபி னெழிவுளா னருந்தனே
யநன் மகளோ நா னனைந்து, போசனஞ் செய்து பொருந்திவாழ்
வதிலும் போவது கருமமென் றிசைத்தான். (௧௬)

யாவருங் கூடி யங்கண்விட் டிழிந்தார் ரழகிலை யென்றனள்வாணி
தீவிர மொழியத் திரள்முனி வோர்கள் திகிலடைந் தேதில ரானு
ஆவகை யாவு மறிந்தமா வசிட்ட னனைவரு மிறப்பரென் றஞ்சிச்
சாவதைத் தடுத்து சகலரு முய்யச் சம்மதி யாகியே நடந்தான்.

என்றுதன் மனதில் விவையெலாம் நினைந்தே யிடர்தனைக்
காப்பனென் றிசைத்து, சென்றன னரசன் றிருநக ரெய்தித்
தெரிந்திட விசைத்துமங் குற்றார், கன்றலை யொழிந்தே யமை
த்திடு சாலை யதில்முனிக் கணங்களை யிருத்தி, குன்றுறு முனிவ
ர்குறித்தன வெல்லாங் கொடுத்தளித் தருளினான் கொடையோன்.

செப்பிய சேவைக் கொள்கெனத் தவத்தோன் செழுங்கரத்
தளித்தனன் சிறப்பாய்த், தப்பிலா முனிவன் தானுவந் தங்கண்த
ளித்திரு வேள்விதான் முற்றி, யப்புற மழைத்துப் போவமென்
றுரைத்தே யடைந்ததோர் க்ஷாமநாள் கழித்தார், ஓப்பிலா முனி
வர் தம்மிடம் வரவே யுரியளும் உடன்வர னின்றாள். (௧௭)

அன்னவள் தன்னை யழைத்துமே போனா லாம்புக ழழிந்த
ன மென்று, நன்றுத லாளை நடுவழி நிறுத்தி நண்ணியுற் றிடவிட
மமைத்தே, அன்னெறி அவளைக் குணத்துட னிருத்தி யழைத்
திட வருவன்யா னென்றான், முன்னவர்க் கெல்லா முதல்வனும்
வதிட்ட னுரைப்படி யிருந்தனள் முனியாள். (௧௮)

மெள்ளநா மிவளை மேன்மையா விட்டோம் மேவினோம்
மெத்தவும் பெருமை, கள்ளமா மாயங் கருத்திது வென்று களித்

துமுன் னுறைதலங் கண்டார், உள்ளதோர் வயித்தி ஞதனை ப்பு கழ்ந்தார் உரைபதி செழிப்பையு முவந்தார், வெள்ளமாமாரி வி ளைவு முண்டாகி மெத்தவும் விளங்குமப்பதியே (கக)

மருவுறும் செழிப்பும் மாமறைக் கொழிப்பும் மாமுனிக் கொழாத்துட னிருப்பும், கருதிலாள் கடந்தகாதலை நினைத்து கன்னியுங் கவலைமேற்கொண்டு, இருபது வருடமளவுமே இரு தாள் ஏந்திழை அவளென வெண்ணி, ஒருவருக்கொருவர் பார் த்தினி திருந்தார் உற்றவட்குற்றதை யுரைப்பாம். (உO)

கோட்டிடை நின்ற குளிர்மதி முகத்தாள் குளிர்மழை நோ டையைப் பாராள், நாட்டமுன் றுள்ள தேவனை நாடாள் நான் மறை வதிட்டனைத் தொழுதே, நாட்டிய வடிவும் நலமிகுமொ ழியும் நான்கினும் கரணமும் பிசகாள், தீட்டிப தவத்தால் தீப தேயெழுந்து திசைதொறும் மனலதாய்த் திகழும். (உக)

வேறு.

எறிந்தோடின புகைந்தோடின எதிர்ந்தோடின திசைபோய்
விறிந்தோடின விண்ணோடின விமலன்றலம் வெருவாய்க்
கறிந்தோடின மற்றெங்கணும் கனலாயின கார்மண்
சுறிந்தோடின தென்னில்லதை யாரேசகிப் பாரே. (உஉ)

அன்றுள்தவ மழியாதெனி லமரோ மெனவமரர்
சொன்றரய னிடமேவினர் பலருந்துதி செய்தார்
என்றுமிது செய்வாமென விசைத்திட்டிட வினிமேல்
மன்றுயக னறன்மாதினை மணஞ்செய்யெனப் புகன்றார். (உங)

என்றலது வாகாதெனக் கைலைக்கிறை யவன்முன்
சொன்றாது சுருதிப்படி யுண்ணுனெனச் சொல்ல
நின்றலது நிலைசெய்திட நீவாவென நேர்ந்து
பன்றளிறும் விடையானொடு பரிவாய்ப்பதம் பணிந்தார். (உச)

வேறு.

சுந்தர வதிட்டன் றன்னைத் தோன்றலும் வரவழைத்தே
இந்தமினென்பா டானுமிழிகுலத் துதித்தாளல்ல
இந்தனை யாகாதென்று நீணிலத் தோர்கள் செய்யா
வந்தனள் யோனியன்றி அயோனியாய் வந்தா ளன்றே. (உரு)

அருந்திட முள்ளவ காம மருந்ததி பெனவகுத்தோர் [ளை
தெரிந்திட மணஞ்செய் பென்று தெளிவித்தார் வதிட்டன்றன்
விருந்திட வுண்ப வென்று வேண்டச ரீரிகேட்டுப்
புரிந்திட பரிசைக்ஷ தீபால் புகழ்மணம் புரியலுற்றான். (௨௬)

நங்கையை மணஞ் செய்த நன்மையா லின்றுதொட்டுத்
தங்குமா புவியி லுள்ள சதுரெனும் வருணத் தாரு
மெங்கொரு மணஞ்செய் தாலு மிழிவென்ற விம்மின்றாளை
வங்கண மாகப் போற்றி வாழ்ந்திட வரமளித்தார். (௨௭)

ஆனது காலை தேவர் துந்துபி யார்த்தார் பின்னும்
வானினன் மலர்கடுவி வழங்கினன் குலிசன்றானு
மானநா ளணியப் பொற்பூண் வழங்கினன் காமதேனு
தானுண வளித்த திந்தத் தரையுளோர் பலருண் ணற்கே. (௨௮)

செப்பிய மணத்தைச் செய்து செழுங்களிப் போடு முற்றார்
தபபிலா மூவர்தேவர் தவத்துள பலரும் போனா
ரொப்பிலா மறைவசிட்ட னுழைவிழி யாளுமொன்று
யிப்புவி வந்து சேர்ந்தே யிருநதிட்டா ளினிமையாக. (௨௯)

நல்லற மீதென் றெண்ணி நாயகி யோடு நண்ணச்
சொலலொரு நாளிற் பண்டுதூய்த்தவ முனிவ ரான [று.
வல்லரின் வல்லோர்க் கெல்லாம் வழங்குவேன் மணந்தா னென்
சொல்லிட வதிட்டன் சொல்லுஞ் சூக்கும முனிவர் கேட்டார்

எல்லையில் யோனி யன்றி யிசைந்திடு மாதர் தம்மைப்
புல்லுவோ மென்று சொன்னார் புனிதரு மஃதே யென்னி
னல்லது தருவோ மென்று நானூறு கூர்ச்ச ராடி
சொல்லினு லுருவமுள்ள சுந்தரத்தோகை யானார். (௩௧)

தங்கிய தவதநோர்க் கொவ்வோர் தையலைத் தானஞ் செய்தான்
பங்கதாய் நரீனா றீயப் பாவைய ரொன்று மீந்தா
ரங்துறை வைத்திய நாத னருமறை தவத்தோ னாகிச்
செங்கையை நீட்டித் தானுஞ் செய்யெனக் கவளை யென்றான். ()

ஆங்கையாற் றானஞ் செய்தா னற்புத வரனீ யென்றான்
வேங்கையா ளிவட்கு நாமம் வேறிலை யென்று சொன்னான்

வீங்கின வசிட்டன் றேளும் வியப்புற்றார் முனிவ ரெல்லாம்
பூங்கணை யானைப் போற்றிப் பொருந்திவாழ் நாளிற் பின்னும்.( )

இப்படி தவத்தோர் நிற்க வெழிற்புவி யாளும் வேந்தன்
செப்பிடு மனுகு லத்தோன் சிறந்தவை வசுத னென்பான்
றப்பிலாப் புவன மூன்றுந் தனிக்கொடைத் தானை யானான்
அப்புள கமலத் தோனை யரசன்போ யாங்குக் கண்டான். (௩௪)

எனக்குமோ தீக்ஷை யில்லை யிபலவே யுபதே சித்து
மனக்குறை யிதனைத் தீர்த்து மாபுவி யனுப்பு மென்றான்
உனக்கிதை யுரைப்போ ராரிங் கொருவரு மில்லை யோர்வாய்
இனக்குறி படையா யின்னஞ் செப்புவோந் தெளிவாய்க் கேளாய்

புவிக்குள்ளே யுறைவோர்க் கெல்லாம் புவியோர்க ளறையவேண்
குவிக்குநன் பொன்னீந் தானுங் கொள்ளுவோ ரொருவரில்லை[டும்
தவிக்கிற மனைதை விட்டுத் தரையுள்ள வதிட்டர், தானே
அவிக்கினமன்றி யன்பா யடைந்துநீ பெறுதி யென்றான். (௩௬)

அண்ணலிம் மாற்றங்கேட்டே யயனுல கதனை விட்டுப்
பண்ணுறும் வதிட்டன் றன்பால் மாமலர்ப் பதத்தைப் போற்றிக்
கண்ணன்றன் சிறுவன் சொன்ன காரியங் காப்பா யென்றான்
எண்ணந்தான் றீர்ப்பே னென்றே யிறைவனுக்கவணி சைத்தான்

அன்னது காண நாளை யறிவிப்போம் வைக்க வேண்டும்
மன்னுப கரண மெல்லாம் விரைவினில் வருவித் தாங்கு
பொன்னினூற் காப்புக் கட்டிப் புகழுறத் தீக்ஷை செய்தே
யெந்நிலத் தவருங் காண வெவர்க்குமாம் பரிசை யீந்தான் (௩௮)

அன்னது பெற்றுக் கொண்டே னழகிய மனுவே கேணீ
முன்னநா ளாகி யிவ்வூர் வைத்திய நாதன் முன்னோன்
றன்னவரா லயத்தைத் தரணியிற் புதுப்பித்திட்டே
மன்னவில் வளத்தையே நன் னகரென வகுப்பா யென்றான். (௩௯)

ஆயவ னுரைக்கு முன்னமாலயம் விரைவிற் செய்தான்
தூயமா நகரஞ் செய்தான் தோன்றல்வாழ் விருப்பஞ் செய்தான்
தோயநற் றடமியற்றித் தொடுத்திடு மாடம் வீதி
நேயமிக் குறப்புரிந்து நிகழ்மனு குலத்தோன் சென்றான். (௪௦)

வேறு.

ஆகலா லிந்தத் தலத்திலே முத்தி யடைந்தவரளவிலா ரா ளுர், நீதிலாக் கங்கைமுதற்பல நதிகள் பரவுநி வாரதிச்சிறப் பாற், கோதிலா வதிட்ட னுறைவதா லிந்தத் தலந்தின்சீர்கூறு ளுதென்றே, மாதுளா மார்பன் மகிழ்ந்தினி திருக்கின் மற்றதின் பெருமையார்வகுப்பார். (சக)

திருவதிட்டத்துறைப்படலமுற்றிற்று.

ஆகு செய்யுள் உசசு.

# திருவாடுதுறைப்படலம்.

பெருமலர்த் தவிசோன் மகிழ்பதி யுதுவாம் பின்னரே நிரு தியின் றிசைபால். தரைபுக ழாடுதுறையெனப் பெயர்கொ டலை மைசேர் துறைமிக வுயர்வாம், திருமல ராளுந் தினமும்விட் டக லா டிகழ்மறை வேதமுங் குடியாம், வருபலா தெங்கு வளர்கமு கோடு வாழையுங் கழையுமே வளரும். (க)

ஒள்ளியோன் பெயர்கொள் ளுறுதலத் திறைவ ருயர்தரு குற்றமே பொறுத்தார், கிள்ளைநன் மொழியா ளேலவார் குழலா ள் கேட்டிடு தென்மொழி நாமம், நள்ளம ரவளூர் நாடின துறை ப்பேர்நன்மனந் தெளிந்திட நாடில், அள்ளழ காடு துறையதன் சிறப்பை யானறிந் திட்டவா றறைவேன். (உ)

வெய்யவன் றேரை விரைவினிற் செலுத்து மேன்மையான் சாரதித் தொழிலான், பொய்யிலா னவன்பே ருணனென் றி சைப்பார் போகமார் புரந்தரனுலகம், பையவே நடக்கும் பா வையாய்ச் சென்றான் பார்த்தனன் குலிசனும் பண்பால், ஐயுற வாகி யழைத்தன னவனு மனங்கனம் படுதலா லிசைந்தான். (ந)

பங்கமாய் நின்ற பாகசாதனனும் பாவையோ டொருபுடை யேகி, அங்கமோ டணைய வக்கணம் வாலி யழகுடன்றோன்றவே யருணன், துங்கமோ டவனைக் கொண்டு போய் ரவிபாற் சொற்ற னனிரவியவ் வுருவம், மிங்குகாட் டெனக்கென் றிசைப்பவே யருண னெழிலுரு பார்த்துமால் கொண்டே. (ச)

சுந்தர நாரி யெழுவரு நாணச் சொல்லனப் பவையெலா
மொன்ருய், முந்தவே நின்ற வரிவையோ டிரவி மோகமாய்த்
தழுவியே யவனபாற், சந்தனப் பொதியத் தென்றனற் றேரோ
ன் றனியுரு வென்னசுக் ரீவன், விந்தையாய்த் தோற்ற வவற்கு
சாத் திரங்கள் விளம்பியே விடுத்தனன் புவியில். (௫)

அந்தர முள்ளா ரதிசயப் படவே யவனியிற் றவந்தனை யெ
ய்தி, விந்தைய தாக வுயர்புலஞ் செலுத்தி மேவியே யோகியம்
போல, மந்தர வெற்பில் மருவி நூருண்டு மாதவம் புரிந்திட
விரவி, சுந்தரம் விளங்கச் சகுணமாய்த் தோன்றிச் சுக்கிரீவனு
க்கருள் புரிந்தான். (௬)

மைந்தநீசெய்த தவமுவந் தனமால் வரம்பிலா வாகுவு மழ
கும், பந்தம தகற்றுஞ் சாத்திர வுணர்வும் பண்புட னீயடைந்
திடுவாய். சிந்தனை யுற்ற படியெலாம் வலியுஞ் செல்வமுந் திற
மையுஞ் சேரும், எந்தனை நோக்கித் தவம்புரிந் தூழலே லென்
னரும் புதல்வவென்றேக. (எ)

ஓங்குகிட் கிந்தைக் கரசனுமுள்ள வுரமுள வாலிபாற் சே
ருன், ருங்கிடா தழக்கத் தம்பியும் பயந்தே தனித்துமே யாற்
றல னுகித், தீங்கமா வாலி தொடர்ந்தனன் றம்பி தாய்மனை
யாளையுங் கவர, வீங்குமுன் னெதிர்க்கத் திறமிலா தவனு யிருந்
தொளித் தேகின னவனும். (அ)

பீடையைத் தூரத்திப் பெரும்வலி பெறவே பேசிடு முனி
வர்பா லேகி, நாடிய விடய முறைத்திடக் கேட்டா ருவப்புட
னவன்றனக் குரைப்பார், நீடுமா நதிப்பேர் சுவேதையென் று
ரைக்குநிவா நதித் தென்கரை யதனிற், கூடிடு மாடு துறையென
வுண்டாங் குவலயந் தர்மமாம் பதிதான். (௯)

தேடிநீ சென்று தெரிசனஞ் செய்து திகழ்ந்திடத் தவத்தி
னையியற்றில், வாடிய மனந்தன் விருப்பெலா மாகும் வந்திடும்
வலிமிகு நிதியும், கூடுமென்று குறைவற வறைந்தான் குணமு
டை சுக்கிரீவனுக்கு, கோடில்சுக்ரீவ னவ்விடஞ் சென்று குலவி
யகதையினிப் புகல்வாம். (௰)

போனநா ளதனிற் புகழ் மறைப் புனிதன் புரிந்திடுங் கலைவ
லானவன்பேர், ஆனநல்வேத பண்டித னென்பானமருவான்

கோகுலா புரத்தில், வானவன் றன்னை மனத்துற வழுத்தி மற்ற வன் மனைவியாய் நின்ற, மானினேர் விழியாண் மைந்தனைப்பயந் து வருமொரு திங்களின் மரித்தாள். (௧௧)

பணிசெயு மம்மா திறந்தபின் வேதன் பாரிற்செய்நித்திய யோமம், அணியுள ளொரு மைந்தனைப் போற்ற அமையு மைங்கனை யிளுன் வவம்போர், தணிகிலா தாகத தாரமே கொண்டான் றன் சுதன் றகவுற வளர்ந்தான், கணிதமோ ரெட்டின் மணம்புரிந் ததன்பின் கலையெலாம் கழறினுன் சுதற்கே. (௧௨

தந்தையின் மிக்க பண்டிதனுனன் றரணியி லரசருந் தாழ்ந் தார், வந்தவன் பெயர்வே தாந்தனென் றுரைப்பார் வரிசையா ய் மணமுத லியற்றி, அந்தமா வேறு துறைவகை யெல்லா மளந் தறி தன்மகனோடு, சொந்தமாய் வாழ்வுற் றிருக்குநா ளதனிற் சுதற்கொரு தோடம் வந்ததுவே. (௧௪)

ஏதெனக் கேணீ யிருவரும் வாழ்க்கை யெய்துறு நாளினி லிறைவன், ஞாதனை விட்டே யழைத்தனன் சுதனைத் தொடர்ந் தன னரண்மனை யவன்றன், காதலார் மனைவி பூத்தலா லில்லின் கடைப்புறத் தொதுங்கின ளிருந்தாள், தாதையா னவனு மற்ற வடுணையாய்த் தங்கினு னங்கனே ரிடத்தே. (௧௪)

அங்கைவா ளேந்தி மாநிலம் புரந்த வவனிபன் பேரவை புகுந்த, சங்கைதீர் கல்வி யறிவினிற் சிறந்த தயைனுந் தன்ன கத் தெய்தி, மங்கையாந் தனது சிறியதாய் தனித்து வளர்து யில் கூர்வதைக் கண்டந், நங்கையா டுணையா யயலுறப் படுத்தா ன் நாடிலன் விஞ்ஞமற்றையா. (௧௫)

இப்படி யிவர்க ளிருவரு முறங்கும் வேலையி லியல்பிதாக் கண்டான், செப்பிடுந் திண்ணை சேர்ந்ததி லிருந்தான் சிறுவனுந் தாயினை யறியார், மைப்படு மிரவு கழிந்தபின் னெழுந்த மகன் சிறு தாயெனத் தெரிந்து, தப்புயான் செய்தேன் றணிப்பையீ யென்று தந்தையா லிறைஞ்சியே சலித்தான். (௧௬)

எந்தைகேள் பிழைக ளேதிலா தெனினு மென்னுயிர் துறப் பனென் றுரைத்தான், றந்தையா னவனுந் தடுத்துரைத் திட வுந் தரணியி லுள்ளபே ரெளிதா, நிந்தையாச் சொல்வர் நிலையி

லாத் தேகநீக்கலே பெரிதென நினைத்தான், அந்தணன் றானு
மாய்ந்துநற் கழுவா யாமென விதனைமற் றறைந்தான். (௧௭)

புந்திநல் வாக்குக் காயமென் றிவைகள் பொருந்திடா தமை
ந்த நற்பாவந், தொந்தியா துன்னைத் தொடர்ந்திடா ததற்குத்
தொல்லைநூ லறிவழியுளதா, லெந்தவா றென்னி லிங்குநற் றசி
லியலுறு சீலமே தோய்த்து, முந்தவே யிருக்கு முனிபலர் வழு
த்து மூதுள தலங்கணீ புகுவாய். (௧௮)

எந்தநற் றலத்தி லிருங்கலை வெளுக்கு மத்தல மெவற்றினு
மேலாஞ், சிந்தையுட் கொண்டு சிறுவனே செல்வாய் செப்பிய
வாடைதான் சிராய், சுந்தரச்சோதிச் சுடரொளியிலதேற் சொற்
படி செய்க நீ யென்றான்; மந்திரம் வேறு மற்றுனக் கில்லை மா
பிதா வாக்கியங் காணே. (௧௯)

சுத்தினன் றலங்கள் சொல்லிய வனைத்துஞ் சோதனை சொ
ற்படி காணான், சித்தியாந் தலங்கள் செகத்திலையென றசிவனை
விடுவதா நினைந்தே, நத்திய சுவேத நதிக்கரை யதனை நண்ணி
யே யதன்புடை யடைந்தா, னத்தக வரைப்பி னடைவருந் துய
ரா லயர்தலை நண்ணினா னன்றே (௨௦)

ஒத்தவவ் வுழியி லுறக்கமதானா னென்றுமே யுணர்விலா
னுய்ய, வத்தனுமங்கு மேடமாய் வந்தங் கருவியி லாடையைச்
சேர்த்துக், கத்திடு மோசை காதினிற் புகுதக் கலைவலா னெழுந்
துடன் பார்க்கப், பத்தியநாகங் கங்குலு நீங்கிப் பானிற மானதுங்
கண்டான். (௨௧)

இத்தலங் கான மெவருமிங் கிலையா லீசனிங் கிருக்கவு மிலை
யாற், கத்தனே யென்னைக் காப்பை நீ யென்றான் கண்ணுத லவ
னெதிர்ப்பட்டுப், பத்தனே.குற்றம் பொறுத்தவ னென்பேர் பகர்
தகர்த் துறையிதுவென்ன, மெத்தவுங்கேட்டே யுளங்களி கொ
ண்டு விதிப்படி பூசனை புரிந்தே (௨௨)

அருளினாற் பரம னத்தல மமர்ந்தா னருளானவனினும் பெ
ரியான், மருளுளா யங்கு மருவிநீ யிருந்து மாதவ மிழைத்திடி
னுனக்குப், பொருளுள நாடும் பூங்குழன் மனையும்பொருந்திடின்
பகைவனு முடியு, மருவிமேற் சொன்ன வாறுசெய் யென்னா
மைந்தனுக் கருக்கனுமுரைத்தான். (௨௩)

கேட்டிடுஞ் சுக்ரீ வனுமிக மகிழ்ந்தே கிளத்திய தலமதை நோக்கி, வேட்டிடும் படியே சிவாநதி யதனை மேவியே விதிப்படி படிந்து, கோட்டுள மலரா தியாம்பல மலருங் கொண்டுட னத்தலத் தீசன், றாட்டுணை துணையா மனத்தினி லிருத்திச் சவுரியை தமயனுக் கொண்டோன். (உச

தைலமே முதலாச் சந்தன மீறுத் தருமபி டேகம தியற்றி யயிலுறப் பலவா மடிசிலு மியற்றி யணிகொள்சோ டசங்களும் புரிந்தங், கியலுறப் பணிந்து கண்கணீ ரரும்ப வென்புநெக்குருகி டவினைந்து, துயிலுறும் போதில் கண்ணுதற் பெருமான் றோன்றின னருட்டாற் பொருட்டே. (உரு)

கொஞ்சநாட் சென்று குறுகுவ னிராமன் கொற்றமா வாலி யைத் தொலைத்துத், தஞ்சநீ யடையத் தாரமோ டரசு தருகுவா னிராமனே யென்றான், பஞ்சில்கொண் டடைந்த ரவிசுதன் கதையை வழுத்தினே, மான்றுறை தலத்திற், செஞ்சடை யீசன் வந்ததைக் கேணீ யென்னவே செப்புறலுற்றான். (உசு)

திருவாடுதுறைப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் உஎஉ.

## திருமான்றுறைப்படலம்.

அருந்தவா விதனுக் காறரை முக்கான் மாதிரு மான்றுறை யென்னப், பொருந்திய தலத்தின் பெருமையைப் புகலப் புண்டரீ கற்குமே யொல்லா, பெருந்தல மதற்குப் பேசவேறில்லைப் பெருநதி சுவேதைமற் றடையின், வருந்துற லனைத்துங் காணு முன் போக்கும் வரமெலாம் வழுத்துமுன் வருமே. (க)

வேந்தனே யதற்குக் காரணங் கேண்மோ விளம்புவம் விரிகடற் புவியிற், சேந்தவள் விலாசச் சிறப்பெலா முடையாள் செழிப்புள கடகமா நகரான், பாந்தநால் வேதக் குலத்தினுற் பவித்தான் பகர்கலை யனைத்தையும் பார்த்தோன், காந்தையாளொடு கலந்துவாழ் வுறுவோன் கற்றவர் குச்சக னென்பர். (உ)

பூக்கமலத்துப் புனிதன்செய் புவியிற் பொருந்திய தவமெலாம்புரிந்து, தேக்கமா முனிவர் தேவன தருளால் தேவிபால் கருப்பம் வாய்ந்துற்று. மாக்கடாம் போற்று நன்மக வாகி மதலைதா னுதித்தனன் மகிழ்ந்து, நீக்கலா மனைவி நினைவிலா னுநி நெடுந்தவ நெடியனேற்ப. (௩)

நோக்குறு நுதலோ னொருதிசை முகத்தோ னுயல்திரு மாலுமே நேர்ந்து, ஊக்கமோ டுரைப்பார் பெருந்தவஞ்செய்யு முத்தமர்க்குத்தம நீசெய், நீக்கருந் தவத்தைத் திருவுளமகிழ்ந்தே நினைத்திடு வரமெலா மீவோ, மாக்கையின் மிருக சருமமேய்ந் திடலான் மிருகண்டு வென்கநின் பேரே. (௪)

தீங்கற வேட்ட வரமெலா முதவித் திருமகள் கொழுநனுந் திரும்பிப், பாங்குள வயனும் பரமனும் போனர் பாலனும் பலதரந்துதித்தே, தீங்கறப் பிரமசரியநல் விரதந் திரன்பெறச் செய்தினிதிருந்தான், நீங்கல் செய் திதனை நீமணம் புரிவானேரென நெடும்பிதா நிகழ்த்த. (௫)

புவியின்மேற் பாவந் திரண்டொரு வடிவாம் பூவையைப் பொருந்துறு வேனோ, வவையெலா மறிந்து மடியனுங் கதனை யறைந்திடன் முறையதன் றென்னக், கவியெலா முணர்ந்த கர்த்தனே யினிநங் கால்வழி பொய்த்திடு மென்றான், இவையலாதுரைப்ப வினிதுவே றிலையோ வென்பொருட் டியம்புதற்கென்றான். (௬)

சிறுவனு முரைத்த சேதிகேட் டையன் சீருள துனக்குநானுரைப்பேன், முறுவலார் முல்லை மொய்குழற் சேர்ந்து முதல்வர்முத் தேவருமுற்றார், கறுவிலா வசிட்டன் காசிபன் கும்பன் கௌதமன் கலையுளார் முதலோர், பெறுமகிழ் வதனாற் பேசினாரன்றிப் பெயர்த்துமென் செய்தனர்பேசாய். (௭)

ஆனதா னீயு மூகமகிழ்ந் தருள்வா யமைவது தென்புலத் தவர்க்கா, மீனமா மென்றே நீக்கலை கொள்வா யிதுமிகத் தக்கதே யென்றான், ஈனமா வார்த்தை செப்புதல் வேண்டாஞ் செய்ம்முறை விதிப்படி செய்ய, நானுமே யுவந்தே னுன்சொலும் படியே நண்ணிடின் விழைகுவ னென்றான். (௮)

பெற்றதாய் தந்தை தமையன்பின் றுணைவர் பெறுவழி சற்
றமுள் ளவளாய்ப், புத்தியுள் ளவளாய்ப் பொருந்திய செல்வும்
புகழ்குடிப் பிறந்தவள் புனித, மெத்தவுள் ளவளாய் மிகவுமே தூ
லமெய்யிலாண் மிருதுவுள் ளவளாய்ச், சத்தமில் லவளாய்ச் சரசு
நற் குணமாய்ச் சார்குறி னெடிலிலா தவளாய். (௰)

ஓத்ததாய் தந்தை நோயுளோர்க் குதித்தா ளுருபிய சின
மூளா ளொருக்காற், சித்தமே யிரங்காள் செவ்வனே மூறுவல்
செய்குவாள் பழுதுளாள் சிறுமை, சுத்தநன் வனப்புக்கிடிலை
யென்று சொல்லுவாள் பெருமையை யுரைப்பாள், பத்தனு மவ
னை யுளத்தைவிட்டொழிப்பாள் பார்த்திடிற்கணிகைய ரியல்பாள்.

முந்துபெண் ணியலிற் சொல்லிய குற்றமுழுதற நீக்கி நீ
யெனக்குத், தந்திட லாகில் தாரமேகொள்வே னலதெனிற் றை
யலைவேண்டேன்; சிந்தியாயென்று செப்பினன் சிறுவன் சேர்பி
தா தேடுவானுகி, அந்தரநாட்டு மவனிபாதலத்து மலைந் தனன்
தேடியேயலுத்தான். (௧௧)

இனியமை வேலை யாதென நாடி யிப்புவியனுமையக் காட்டி,
னனிமகிழ் முனிவ னுசத்திய னென்பா னன்மகள் விருத்தையா
நல்லாள், மனையதற் கேகியம் மாதினைக்கேட்டு மணமுடி மாதவா
வென்ன, வினையிது வென்று வெருதவ ருரைக்க வேதனும் வி
யாகுலந் தீர்ந்தான். (௧௨)

உயர்தவ னுடனு முள்ளமு மகிழ்ந்தே யொரு நொடிப்பொ
ழுதினி லூர்ந்தே, யயர்தலில் லாம லவளையே கண்டா னகமகி
கிழ்ந் தவர்மிக விழைத்த, பெயர்பெற நின்று பெறுமுப சாரம்
பெற்றபின் னிருவரும் பேசி, அயர்வுறு தங்க ளடிசிலு முண்
டே யானபின் னரிவையைக் கேட்டான். (௧௩)

சிந்தையின் படியே சிறுவனின் மகற்குச் சேர்ப்பதே சிறப்
பதாமெனக்கு, முந்தியோர் வேறு முளர்கொலோவென்று முனி
வரை வாழ்த்திநீரிங்கு, வந்ததேயில்லை வருத்த நீர்தீர வதிதல்
செய் திடுமிவ னென்றான், முந்திடேலென்று முனிவருங் கேட்
டுமுகமலர்ந் திருப்பதாய் மொழிந்தான். (௧௪)

காரிகை முனிவர் களித்தினி திருப்பக் கன்னியுங் கடும்புனல்
தோய, பாரிய நேசப் பாவைக ளுடனே பரிவுட னடவியி னெ
டந்து, சீரதாய் சென்றாள் செழும்புனல் தோய்ந்தாள் சீக்கிரம்
வந்திட வெண்ணித், தாமணிக் கண்ணி தங்களோ டெழுந்தா
டான் வரும் வழியினிற் கண்டாள். (கரு)

மதங்கொளு மியானை யுருவினைக் கண்டு மங்கையரோடினர்
மனம்போல், மிதங்கொளாத தூரமோடியே மெலிந்தார் மெல்
லியள் விருத்தையுந் தனியா, யொதுங்கினாள் பின்பே யோடினாள்
வழியிலுயர்ந்துள தூர்வையான் மூடிப், பொதிந்துள கிணற்றில்
வீழ்ந்தன ளறியாள் பொன்னெனு மங்கலைப் புதல்வி. (கசு)

அந்தமா வானை யப்புறம் போக வரிவையர் யாவரும் வந்தே
யந்தநற் பெண்ணை யெங்கணுந் தேடி யெதிர்ப்படா தாகையா
லோடி, யுந்தநற் பெண்ணும் யானைகண் டோடி யொதுங்கினள்
பின்புயாங் காணோம், சிந்தைநீர் வருந்த வேண்டியதில்லைச் செ
ல்வியைத் தேடுமென்றார். (கஎ)

அறைந்தனர் முகத்தி லாவலித் தந்தோ வருந்தவப் புதல்வி
யை நீரே, புரிந்திரோ வென்றார் புராரிதன் செயலோ பூவையைக்
கேட்டவன் செயலோ, தெரிந்திலே மென்றுரவள்விதிப் பய
னைத் தேர்ந்திடுவாரெனச் சென்று, பிரிந்துமோ ரடியைப் பிச
கிடா தடைந்தார் பெரும்புதற் கேணியைக் கண்டார். (கஅ)

இறந்தன ளீண்டே யிருக்கிறு ளென்றே யினியதாய் தந்தை
தன்னுயிரை, மறந்தவ ராளூர் மண முறைத் தவனு மாப்பழிய
டைந்தன மென்று, சிறந்திடு நிட்டைச் செயலினு லறிந்தே சிறு
மியைத் தருகுவன் றிலநெய், மறந்திடா துடலைப் பேணுமினெ
ன்றே மன்னினுன் பெருந் தவமறையோன். (க௯)

உங்கொரு கடத்தை யணுகியர் தகனை யுளத் தினிலிரீஇத்
தவமியற்ற, முந்துமக் களிறும் வந்திவன் றன்னை மோய்ப்பிடரே
ற்றியே செல்ல, வந்தவா றென்னென் றோதியா ணேக்க வள
ங்கெழு கலிங்க நாடதனி, னந்தரி புரமென் றொருநக ரதனின
ன்னினுன் வணிகர்தங் குலத்தான். (உ0)

அனையவன்றேவதத்தனும் பேரோ னவனருந்தவந் தினும்
பெற்ற, தநயனுந் தருமதத்தனு மவனுந் தழைபெருஞ்செல்
வமோடுறுநா, ளனையுடன் பிதாவு மிறந்திடத் துயரி னழுந்தி
மேல்வையி னவன்பால், விநயமா யிரசவாதிவந் தடைந்து மிகு
பொரு ளனைத்தையுங் கொணர்வாய். (௨௧)

இடம்பொருள் வைக்கவினியில்லை யென்றே யியற்றுவ னெ
னவுரைத் திடலும், மடம்பெறு மனத்தோன் மனையுள பொருளு
மற்றைய தருமமும் விற்றுத், திடம்பெற த்தாலு மவையெலாம்
வாங்கித் தெரியவோர் குகைதனில் வைப்பித், துடம்படப்புகை
யான் மயங்குழி வஞ்சிந் தொருகுகை முன்னென வைத்தான்.

அப்பனே யிங்கு நினைக்கரி யாநவாக்கினேங் குறைகளொ
ன்றில்லை, முப்பகன் மனத்துங் காளிமை நினைத்து முதுமகம் பு
ரிதரல் வேண்டும், அப்பகல் வரையு மனத்தெனை நினைத்தே ய
ருந்தவமுழுத்தினீ யென்றே, செப்படி வித்தை காட்டியோன்
சென்றான் செல்வனு மவ்வண மிருந்தே. (௨௩)

போனவன் றன்னைத் தேடியே காணான் புகுந்தறை திறந்து
பார்த்திட்டா, னவிக் குகையுங் கரியதாயிருக்க வவனிமேல் வி
ழுந்துயிர் மாண்டான், வானமர் தருமம் விற்றகாரணத்தால் வங்
னன் களிறென வாய்ந்து, தானதை மாற்றத் தன்றவந் தன்னிற்
றனியொரு நாட்டவந்தந்தான். (௨௪)

தந்தியா முருவம் போயவன் றானுந் தாங்கரும் விமானமே
ற்கொண்டு, வந்தியாவெவரும் வழுத்துற வமரர் வான்புக மெ
ய்தினான்வள்ளல், சிந்தியா முன்போ லந்தகற் குறித்துச் செய்
பெருந் தவத்தினா லவனும், வந்துடன் விருத்தையுயிர்தனை நல்
கிவழுத்தியே போயினான் மன்னே. (௨௫)

இங்கிவை நிற்க விவையெலாங் கேட்டே யெழின்மிகு மிரு
கண்டேயன், சங்கரற் றியானித்துறு தவமியற்றச் சம்புவுமினிதெ
ழுந்தருளிப், பொங்கு மாதவத்தோய் வேட்டவைபுகறி புரிகுது
ம வேட்டவா வென்று, னங்கணு வடியேன் பவஞ்சவாழ்க் கையி
னாட் டூழ்ந்துத லழிதோ வென்றான். (௨௬)

மிக்கமாதவந்கோபுசத்தியன் மகளை மிகுகடி மணம் புண
ர்ந்தெம்மைத், தக்கவாபூசை புரிந்திடி னினக்குத் தநயன் மார்

க்கண்டன் வந்துதித்துப், பொக்கமாறியவன் பாலெமைக் காசி புண்ணியத் தலத்தினிற் போற்றி, நக்கனம் மருளாற் சமனையும் வென்று நற்புகழ் பெருக்கு நின் வழிக்கே. (உ௧)

ஆதலாலின்றே யருங்கடிக் குரிய வாக்கென மேவண்டுமெவ் வாறே, காதலாலவற்குக் கடிமணம் புணர்த்திக் கலியாண சுந்த ரநாம, மாதவா வெமக்கு வழங்குக வென்று மறைந்துடன் போயினன் வள்ள, லேதுவா லிதற்கு மான்றுறை யென்ன வியம்புவர் கற்றறிந்தவரே. (உ௮)

திருமான்றுறைப்படலம் முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௦௦.

---

## திருவாலந்துறைப்படலம்.

இசைகொ ளித்தல மொழிந்தன மிதன்கு டதிசையி
னசைவி ளங்கிடும் பதிக்கிணை நவிலுவ ருளரோ
பசையி னன்மைக ளிபாவையும் பலித்திடும் பாரில்
வசைகள் யாவையு மொழித்திடு மதன்பெயர் வழங்கில் (௧)

சொன்ன நாமமா லந்துறை யென்னவே சொல்வர்
பின்ன தின்பெயர் மால்புரம் பிரமன் றன்புர
மன்ன வாலயத் திறைவர்டோ ளீசனு மண்ணல்
நன்று தற்பரட்டி பேர் பெரியநா யகியே. (உ)

பெரிய மாதவர் யாவரும் பெயர்வுறு தமர்வார்
அருவி யாநதி சுவேதையு மவ்விடம் வசிப்பாள
பிரிய மாக்கமு கரிசனந் தெங்குமே பெருகும்
உரிய வாணியர் மறையுளார் குடிவகை யுற்றார். (௩)

அருமை யாந்தல மனைத்திலும் பெரிதிதா மந்த
உரிமை யானதை யுரைக்கிறே னுட்புறம் பெல்லாந்
தரும மாந்தலந் தேட்டிடு தரணிப முன்னம்
பெருமை வேலையி னமுதத்தைப் பங்கிடப் பெறுநாள். (௪)

வஞ்ச மாஞ்செய லரக்கனு மமுதத்தை வவ்வி
நெஞ்ச முண்டன னென்றுதா னிரவியுங் கூற

கஞ்ச நாபியான் கண்டதைக் கந்தர மரிந்தான்
முஞ்ச னுற்றது மொழியுமவ் வரக்கன துருவம். (௫)

ஓரி ரண்டெனுங் கூறதா யுடறலை வேறாய்ப்
பாரி னுற்றது விண்ணொழிந் தித்தலப் பதியில்
மேரு வில்வலாய் காவென கம்மது விளம்பச்
சேரு மீசனுஞ் சிலவர மளித்தனன் சிகிக்கே. (௬)

ஆய்ய னுலத்த னங்கமு மவ்வுரு வாகி
செய்ய கேதுவு முடல்பெறச் செப்பிய ராகு
முய்யுங் கோளுட னுற்றன ரொருநவ மாக
செய்யி னுந்தவஞ் சேரருங் கதியினிற் சேர்ந்தான்.

அச்சிரந்தவம் புரிந்ததா லத்தல மதற்கு
மெச்சிப் பேசினர் சிரபுர மெனவதை மேலா
வச்சு விருட்சமும் வயங்கிடு மப்பதி வதிந்தால்
நச்சு நோய்களு நாடிடா தோடிடும் நவிலின். (௮)

பன்னு மாலதிற் பெருந்தவஞ் செய்தனன் பலநா
ளென்ன காரணத்தாலென்ன விறைவனே கேளுஞ்
சொன்ன காசிபன் சுதன்பெய ரிரணிய சொருபன்
றன்னைப் போக்கிடச் சிங்கரு யவனவ தரித்தான். (௯)

மங்கு னீனிறத் தசுரனை மடியினில் வைத்தே
யங்கை யாலவன் வயிற்றுள வுதிரநீ ரருந்த
சங்கை யின்றியுஞ் சன்னதங் கொண்டுதான் சால
தங்கு நற்புவி யாரையுந் தளர்வுசெய் துறைந்தான். (௧௦)

அந்த வேளையி லண்ணலுஞ் சரபமா யமைந்து
சிந்தை கெட்டுறுஞ் சிங்கன்மேற் சென்னியிற் சீறு
வுந்தி னுனக முதிரமு மொருகொடி குடித்தான்
சிந்தை நைந்தனன் சீதரன் சிங்கமா னவனே. (௧௧)

அன்று தொட்டவன் றாயருளா னுசித்தன் னுகம்
வென்றி வேண்டியே புண்ணிய நிவாநதி மேவி
நன்றி பெற்றிடப் படிந்தரன் பதத்தினை நாடி
யொன்று றம்படி பூசனை விதிமுறை யுஞற்றி. (௧௨)

பணிந்தெழுந்துநின் றஞ்சலி பன்முறை புரிந்து
துணிந்தெழுந்து தோத் திரம்பல கண்கணீர் சொ...
வணிந்த கொன்றையோன் விடையின்மேற் றிருவுருவாகித்
தணிந்த நல்லருணோக்கினன் றருவனென் றிசைந்தான். ()

பன்னகேசன்மேற் பள்ளிகொள் பசுந்துழா யவன்றான்
சென்னி நீருள செல்வமே சிவபெருமானே
இன்னலி யாவையு மிரித்திடு வாயென விரந்தான்
முன்னிருந்திடும் வலியெலாம் பெறுகென மொழிந்தான்

சொன்ன போதினிற் றுழாயவன் வணங்கியே சோதி
பின்னு நானரும் பிழைகளைச் செய்யினும் பெரிதா
வுன்னுமேற லுன்றன் கருணைசெய் வாயென வுரைப்பக்
கன்னல் வேளினைக் காய்ந்தவன் கடைக்கணித் தளித்தான்.

மற்று மத்தலத் தத்தசய மானதை வகுப்பாம
ஒற்றை யாழியா னுலவுமா புவியையா ளுறுமோவான்
சற்ற றிந்தநன் மரபினான் கலிங்க நாடுடையான்
பெற்ற மூர்தரு பிஞ்ஞகர்க் கானவன் கண்டாய். (கசு)

களமர் தங்குறை சொன்னதாற் காட்டிடை வேட்டை
விளைதல் செய்திட விழைந்தனன் வெல்கதிர் வேலான்
களமனைத்தினும் வேடுவர் மான்வலை கட்டிக்
களப மான்முத லுயிர்வகை பலவுமே காய்ந்தான். (கஎ)

கருது வேட்டையாற் கடும்பகற் கண்டுகாவலனு
மரிது நீரெனப் பேர்ந்தன னடவிகள் விட்டே
திரித லானதால் வன்மலை யருவியுந் தேடித்
தெரிதல் காணலா மென்றவ னோடினான் சிற்றார். (கஅ)

கன்றினான் பதி கடுகினான் கலைமறை வீதி
சென்றனன் னதிற் செழுமறை வேதியன் வீட்டில்
நன்றெனத்திரிந் துள்ளன பலவற்றை நண்ணித்
தின்ற னன்னதைத் தீர்ப்பதற் கார்வலார் திறலோய். (ககூ)

ஆக்கு நற்பல பண்டங்கள் யாவையு மயின்றே
தாக்கு நற்பசி தணித்தனன் றரணிபன் றானு

மேற்குந் தென்புலத் தவர்க்கென வீட்டிய வெல்லா
மூக்க முற்றுட னுண்டன னொருநொடிப் பொழுதில். (உ0)

நாட்டம் வைத்துநான் பிதிர்க்கென நண்ணிய வெல்லா
மூட்டஞ் செய்தனை யுலகுளா யுணர்விலா மையினாற்
காட்டி னுற்றிநீங் காகமாய்க் கனவுரு வெடுத்து
நாட்டிற் செய்திதிப் பிண்டநீ பொசியென நவின்றான். (உக)

என்று சொல்லிய வந்தணன் பின்னரு மெய்திச்
சென்று பற்பல கறிவகை யெவற்றையுந் தேடி
பின்றிச் செய்தனன் றிதிதனைப் பிண்டமு நல்க
முன்றி லுற்றவவ் வாயச முனிவனை நோக்கி. (உஉ)

இந்தச் சாபத்தை யொழித்திட வுபாயம்நீ யிசைத்தே
யுந்தச் செய்திடற் றிகழ்மறை வேதனே யுனக்கிங்
கெந்த னாட்டினிற் பாதிநா டளிக்குவ னென்றான்
புந்தி வல்லனுங் காகமுஞ் சுற்றினார் புவியை. (உ௩)

எங்குஞ் சுற்றிப்பின் னித்தலம் வந்தன ரிவர்கள்
ஆங்கு றைந்திடுஞ் சிகரிபா லுற்றன ரன்றி
புங்கவா வர னாதனை வலம்வந்து போற்ற
மங்கை பாகனும் மகிழ்ந்துநன் மன்னனு கென்றான். (உ௪)

கங்கு னீநிறக் காகமா முருவமுங் கடத்தி
தங்கு மேனியும் பொன்னிறத் தரணிப னானை
னெங்க ளுபகா வெந்தையே யென்னையா ளுடையாய்
துங்க வெள்விடை யாயெனப் பணிந்தனர் துதித்து. (உரு)

என்று போற்றினு னிறைவனு மிசைமறை யவனுக்
கன்று கூறிய படியவ னவர்க்கதை யளித்தான்
ஒன்று மும்படி யந்நகர்ப் பார்த்திப னுறைந்து
மன்ற லாரத்தான் றன்பதிப் பொருளினை வரித்து. (உ௬)

பண்டை நாளுள வாலய மானதாற் பணிகள்
கொண்டல் தாவிடு மதில்வகைக் கோபுரங் குயிற்றிக்
கெண்டை யின்விழிக் கவுரியின் னலயங் கிளரச்
சண்டி கேச்சுர னாலயப் பணியெலாஞ் சமைத்தான். (உ௭)

பின்னு மாகமம் பேசிய படியெலாம் பிறங்க
முன்னைத் தந்திடு நிலத்தினு மும்முடி யுதவி
இன்ன லன்றியே பூசைக்கு வேண்டிய வெல்லாம்
உன்னல் கொண்டவ னுதவினு னுவப்பொடு மொருங்கே. (௨௮)

அன்று தொட்டதில் விழாவெலா மரபுளி நடத்தித்
துன்ற லுற்றவுய் யானமுஞ் சோலையு மமைத்து
நன்று றும்படி புரிந்துதன் னாட்டிற்கு நடந்தான்
கொன்றை யான்பதி யடைந்தமை கூறினே முனக்கே. (௨௯)

சொல்லி வந்திடு தலத்தினிற் சுருதியே முதலா
வெல்லை யிற்றவ மிழைத்தவ ரீறிலா தவரால்
சொல்லினும் பழி யகற்றிடுஞ் சிறப்புமிக் குற்ற
நல்ல தாந்தல மிதன் புடைநவின் றிடக்கேளே. (௩௦)

திருவாலந்துறைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௩௦.

## திருவாதிதுறைப்படலம்.

ஐம்புலத் தமையும் பாவ மனைத்தையு மாற்றி வைக்கும்
பம்புநற் பரமன் வாழும் பதிதனைப் பகர வெண்ணி
னும்பரும் முனிவரி யாரு முரைக்கொணா முதன்மை யுற்ற
சம்புவின் றலத்தைச் சார்ந்த சத்தநற் றுறையி லொன்றே. (௧)

கண்டிடு மிதன்மே னாலு கடிகையா மதனுக் கப்பா
லெண்டக வனைத்து நல்கு மெழிலாதி துறைய தென்ப
ரிண்டைசே ராதி சத்தி யீசனு மிறைவ னுமங்
கெண்டையங் கண்ணு ணுமைகிளர்தரு பெரிய நாயகியே. (௨)

வேறு.

தூக்கல் செய்திடவே முடிவுறு தேவர்க்குந் தூயவித் தலத்
தினின் மேன்மை, யாக்க மெண் வகையு மமைதரு சித்தி யத்த
லமடைந்தவ ரடைந்தா, ரேக்கமாம் பிறவி யெடுத்திடார் பின்னு
மிடைவரும் பிணிகளுஞ் சாரார், நோக்குறு மளவின் மிகுமகப்
பலனுநோபிற்றுந் தவப்பயன் மிகுமே. (௩)

# திருவாதிதுறைப்படலம்.

## வேறு.

நம்பு மாமுனி வரனவ னத்திரி நாமன்
பம்பு நற்றவப் பகுதியின் மேம்படு பண்பான்
துன்ப மென்பதைக் கண்டறி யாதவ னேய்மை
யின்ப மீந்திடு மிவன்மனை யெழிலனு சூயை.

கற்பின் மிக்கவ ளருந்ததி தன்னையே கடிப்பாள்
பொற்பு மேனியின் பொன்னுல கதனினுமில்லை
சிற்ப வேலையிற் செழுங்கரந் தேர்ந்தவள் சிறப்பாள்.
கற்க வேண்டினோர்க் கருளுவாள் கருணையே மிக்காள். (ரு)

இல்லற மதனிலே யிவர்கள்வா ணாளையி லொருநாட்
சொல்லு நல்லிசை நாரத முனிவனுந் தூயோன்
பல்ல நாளுமித் தோகையாள் கற்பினைப்பழிச்சி
யெல்லை யில்புவி யெவருமே யறிந்திட விசைப்போன். (சா)

விந்தை யாகநல் லிருப்பெனுங் கடலையை வேண்டி
பந்த மற்றநற் றிருமகள் வாணிபா ரதிபாற்
கந்த நாண்மலர் கழலிணை கசிவுற வணங்கி
வெந்த கண்டலா யளித்திடு மெனவிளம் புற்றான். (எ)

எந்த நாளினு மெவருமே செய்திடா ரிதனை
யந்த நாளிலெம் மான்முடி யுங்கொலோ வென்று
தந்த வார்குழ லாரவர் மூவருங் கழறச்
சந்த மேவிய வத்திரி முனிமனை சார்ந்தான், (அ)

சீரண மேற்கொளு நாரதன் கிட்டலு முனியத்
தருணம் வம்மென வாசனஞ் சடுதியி லமைத்து
திருண யத்தோடு மிருத்தியே முகமனு நிகழ்த்திப்
பருணசா லைக்குநீர் வந்தவா றென்னெனப் பகர்ந்தான். (கூ)

பாங்கு கொண்டவிக் கடலையைப் பக்குவ மாக்கி
யீங்களித் திடுகயான் வந்தது மிதற்கென விசைத்தான்
ஆங்குயர்ந்திடு மம்முனி பன்னிமுந் தானை
வாங்கி மந்திரத் தாவிமீ தெழவறுத் தீந்தாள். (கo)

பத்து நாலுள வுலகத்திற் பக்குவம் பாரேன்
கத்து வாரிதி சூழ்புவி யதனிலுங் காணே
னித்தகைப் புரிவோரென வியம்பிமுன் சொன்ன
முத்த வாணகை யார்முன்போய்க் கொடுத்துண மொழிந்தான் ( )

வெந்த தானவிக் கடலையை விழைவுடன் கண்டு
யெந்தி டத்தினி லெவர்களா லளித்ததென் றிசைத்தா
ரிந்த னங்களை யெரித்திடு மெரிக்கெரி யிணையாள்
சுந்த ரத்திலுங் கற்பினுஞ் சொல்லொணா திணையே. (கஉ)

தண்ட காரணியத்துள வத்திரி தவத்தாற்
கொண்ட நன்மனைக் கோதையாள் கொடுத்தன ளீதைக்
கண்டி ரோவெனக் கற்பினின் மேன்மையைக் காட்டி
விண்ட மாதவ முனிவனும் விரைவுட னகன்றான். (கங)

வேறு.

அகன்றனன் முனியு மப்பா லவமதிப் பதிக மாகிப்
புகன்றிடு மங்கை கற்பைப் போக்குவ மென்றே யெண்ணி
நகம்பெரு முலைமூ வோரு நாயகர் தம்மை நோக்கிச்
சகந்தரு தலைவி ரன்னாள் கற்பினைத் தவிர்ப்பி ரென்றார். (கச)

பகவர்தம் மாதர் மூவர் பகர்ந்திடு மொழியைக் கேட்டு
பகவனார் மூவர் தாமும் படிமிசைப் புருடராகிப
பகவன்றன் சத்தி பெற்ற பதியிலாச் சமயம் பார்த்து
மிகவன்பி னுடை நீத்து வேண்டுவம் பிட்சை யென்றார் (கரு)

நித்தியம் மூவர் கேட்ட நினைவையுங் குறிப்பும் பார்த்துக்
கத்தனன் பூசைக் காகுங் கமண்டல நீரை யள்ளி
சுத்தநன் கற்புமேன்மை சூழ்ந்திடிற் சொல்லு முன்னே
அத்தர்நீர் பாலராவி ரென்றலு மாயி னாரால். (கசு)

ஆங்குதன் பதியை யெண்ணி யம்புனல் தெளித்தலோடும்
தீங்கலச் சிறுவ ரானார் தேவியு மாடை நீத்து
பாங்கிபோ லமுத மீந்து பாலரை யேணை யிட்டா
னோங்கினார் பலநா ளங்கே தோய மூவர் தாமும். (கஎ)

இப்படி யிருக்க வீங்கே யேவின மூவர் தாமுஞ்
செப்பிடுங் கவலை யுள்ளார் செயல் மறந்தவர்களாகி
யொப்பிடா வினை மீட்டு முயர்முனி தன்னைக் கேட்டார்
ழைப்படி கண்ணுள் செய்யு மாயையின் வதிந்தா ரென்றார். (௧௮)

ஆனதா லாங்குச் சென்றே யவனைநீ துதித்துக் கேட்டாற்
போனபேர் வருவாரென்று புகன்றனன் முனிவனங்கே
தானது செய்ய நாணந் தாங்கியேதைய லார்தாங்
கானமே பெரிதாவுற்றவாதாதியந் துறையைக் கண்டார். (௧௯)

அப்பொழு தங்கணின்றே யம்பிகை தவத்தைச் செய்தா
ளப்பொழு தாதிசக்தியீசனு ராங்குவந்தார்
ஒப்பிலாப் பூசை செய்தா ளுளமெலிந் துரைத்தா ளங்கு
நெப்புறுங் கண்ணு னங்கு நெடுந்துய ரகலச்சொல்வான். (௨௦)

திக்கிடை யுன்றன் சீர்த்தி தேவரா னவற்கு மில்லை
அக்கநன் மணியே குற்றமனைத்துமே வகல வன்பா
யக்கொடி மடவாள் பக்கமடைந்துநீ யவனைக்கண்டு
துக்கமாங் குறைகள் கூறித் தொழுதுநீ சாற்றுகென்றான். (௨௧)

அவ்வுரை தலைமேற்கொண்டே யரிவையரிருவரோடு
மவ்வனுசூயை பாற்போ யறிவித்தா ரவைகளெல்லா
மூவவுலகங்கள் போற்று முதலுமை மலராள் வாணி
கவ்வையை யொழித்தே யெங்கள் கணவரை யளிநீ யென்றார். ()

இப்படிச்சொல்லக் கேட்ட யெழிலனுசூயை தாழ்ந்தே
யொப்புள வர்க்கிய பாத்ய வுபசார மனைததுஞ் செய்து
கைப்படுஞ் சிறுவர் தம்மைக் காளையராக்கி முன்போற்
றப்பெலாந் தவிர்த்து விட்டே தையலீர் கொண்மி னென்றாள்.

தங்க ணாயகரைக் கூடுந் தன்மையா லுளம்பூரித்தே
யெங்குள கற்பின் மிக்கா ரெவர்களு நின்னை யேற்ப
பங்கமில்லாமல் வாழப் பல்லாண்டு பலவாய்க்கூறித்
தங்கடா ளங்க ளுற்றார் தத்தமக் குரியா ரோடும். (௨௪)

ஆலமுண் டவனைப் பூசை யம்பிகை புரிதலாலே
சீலமாந் தலத்தினுமஞ் செப்பாதி துறையாயிற்றன்

மூலமா மதனைக் கொண்டு முனிபல ருறைந் தாரங்கு
காலமும் பயனுங் கொள்வா ரீதன்றிக் கருத்திடாரே. (உரு)

என்னகர் விட்டு வந்திங் கீறிலா நாள்க ளாச்சு
தொன்னகர் தனிலே ராசன் றுரைத்தன மின்மையாலே
அன்னதா லூருக் கேகு வனுமதி யருளீரென்று
மன்னவன் சொன்னா னிங்கு மாமுனி யுரைக்கலானான். (உசு)

சொல்ல வேண்டிய தொருதுறை யிருக்குது சுருக்கி
னிலவி யம்புவே னிருபனே நீயதைக் கேட்பாய்
தொல்லை நாமுள தேவரு முறைதல மிஃதே
யல்லவா வதின் மகிமையைக் கேளென வழங்கும். (உஎ)

திருவாதிதுறைப்படல முற்றிற்று.
ஆ செய்யுள் கூருஎ.

## திருக்கரந்துறைப்படலம்.

மதிபுன லணியு மாதிரன் மகேசன் மருவுறு தலத்தையே கேணீ, துதியரத்துறைக்குக்காதமோ ரரையிற்சொல்லிடும் கீழ்த் திசை யதனிற், பதியுள தொன்று நாமமற்றதற்குப் பகர்ந்திடிற் கரந்துறையாகு, நதியதின் றென்பால் நாட்ட முன்றுடைய நாயக ரமருவரென்றும். (க)

கழையொடு சாலி யரம்பையுங் கமுனி கனத்ததெங் கதுவுமே சூழும், விழைவொடு பொழில்கள் விளங்குநன் குடிகள் விரிந்துள வூரினன் றும, முழிவிலாத் தெய்வ நகரமாங் கோட்டை யழகிய பேரதற் காகு, மழைதவழ் பொதிகை யதிலுறை முனியுமாயனும் பூசை செய்திட்டார். (உ)

ஆனநற் றலந்தா னமைந்ததை யறைவே னறிஞரில றிஞனே யறிவாய், போனதோர் யுகத்தில் புரந்திடும் பாண்டு மரபுளான் புனிதனாய் வந்தா, னனவனாகும் நரேந்திர னுமன் றூன்வெகு தரணிகா வல்லாய்ப், பானுசூழ் புவியைப்பாலனஞ் செய்தான் புகர் மனு விதிப்படி பாரில். (ங)

ஆங்கவ னரச னான நாளதனி லனங்கனை யடக்கல னாகிப் பூங்கணைத் துன்பம் பொருந்தி யோர்கனியைப் புகழ்மணம் புரிந்தினி திருந்தான், றங்கமண் ணதனிற் சுதனிலா மையினாற் றவத்தினோர் தம்மருளாலே, தீங்கிலாக் குணமுந் திறல்வலி யூக்கந் திரண்டுள சிறுவன்வந் துதித்தான். (௪)

உற்றசேய் தனக்கு வயதோரீ ரேழி லுற்றதா யுலகுவிட் டொழிந்தாள், அற்றைநாட் சகல சாத்திரந் தன்னி லழகனாய்ச் சிறுவனு மமைந்தான், மற்றுமோர் கரும மனமுடன் செய்தான் மாநிதி மறையவர்க் கீந்தான், பிற்றைநாட் டந்தை மீனகேதனாற் பெரும்பிணி யுற்றுடல்வெதுப்பி. (௫)

காந்தைய ராசைக் கடக்கொணா ததனாற் கடிமணம் புரிகுவனென்றே, யேந்துமென் மருகி யவண்மிக வெழிலா ளிசைவலா ளிலக்குமிக் கொப்பாள், வாய்ந்தநன் மடந்தை வயதுளாளவளை வையகத்தோர்களு மறிய, ஆய்ந்திடு மாலை யணிகுவே னென்ன வவன்மக னதற்குமே நேர்ந்தான். (௬)

ஆதலாலந்த சித்திராங் கதையை யன்புடன் விவாகமே செய்தான், காதலா ரிருவர் கலந்துறை நாளிற் கணவன்மே லன்பிலாளாகித், தாதவிழ் மலராடன் னுளத்தெண்ணந் தன்மகன் றன்னொடுஞ் சொல்லித், தீதிலாதுனக்கே யுரிமை யெனென்றுந் தீமொழிசெவிப்பட வுரைத்தாள். (௭)

சொன்னதைக் கேட்ட சுகுணசாரங்கன் சுரோத்திரமடைத்துநீ சொல்லு, மன்னதோர் மொழிக்கு மமைவனோ வதுவுமநீதியோடுறு பழியலவோ, முன்னைநா ளுளதிம் முறைமையோ பாவ மூவுலகத்திலு முளதோ, அன்னைநீ யுரைத்த கட்டளையாலே காசிபோய் வருவனென்றுரைத்தான். (௮)

காரிகை நாணிக் கருதுவாள் யுத்தி காவல னறிந்திடினம்மைப், பாரிதா னலமொன் றாக்கினை செய்வான் பதியைவிட் டோட்டியே விடுவான், கோரினாள் முன்னஞ் சிறுவன்மேல் வைத்துக் கூவிடில் குறைவராதென்று, சேரவே மனது திடம்பெற வெண்ணித் தெரிவித்தா ளரசனு மறிந்தே. (௯)

மாயமா துரைத்த வார்த்தையைக் கேட்டு மனனழும் மனம்பொருளுகித், தாயிடஞ் செய்த தப்பினைன்மகனை தனிக்கரந்தானையுந் தறித்துத், தீயனின் பாவந்தீர்க்குவேனென்றான் கொலைசெயுந்தீயரையழைத்துச், சேயனைக் கொடுமையாய்ச் செழுஞ்சுரமதனிற் சீக்கிரங்கால் கரஞ் சிதைமின். (௧௦)

என்றுதான் சொல்லியேந்திழை தனக்குயிணங்கிட வகைமிக வுரைத்தே, கொன்றுறப்போன குழவியின் வலக்கால் குறிப்படி வலக்கரங் கொய்தார், கன்றியே யொருங் கருமமென்றகன்றார் கடுங்கொலை யாளருங் கடந்தார், இன்றிவன் புரிந்த பழியென வந்திங் கெய்தின விரவினி லிருளே. (௧௧)

அண்டர்கள் முனிவரியாருமே துதிக்க மறிஞரிலறிஞனாஞ் சிறுவன், கண்டுமுற் காலஞ் செய்வினைப் பயனால காணுமூழ் வினையிது வென்றே, கொண்டவிவ்வுலகில் நிறைந்தினி திருக்கும் கோலமே நீயெனைக்காவாய், பண்டுநீகூட லாடிய பரமாபாருணக் கழகதோவென்றான் (௧௨)

அந்தமாய்ச் சொல்லியழுமவ னுரையை யண்டர்க ளறிந்ததேயன்றி, முந்தியங்குறையும் பூவராகனுமே முறைதனைக் கேட்டருள் செய்யாச், சிந்தையாய் நின்றான் சேர்கறை மிடற்றான் றிருவருள் மேம்படப்புரிந்தான், விந்தையுமதனை விளம்புவோமென்று வேடுவ முனிவனும் விரித்தான். (௧௩)

முந்திய யுகத்தி னிருதராயிருவர் வில்வலன் றுணைவன்வாதாபி, விந்தையாமிருவரிங்குளாரவரோ வீரமும்மாயமும் மிக்கார், தொந்தமாம்பாவந் தொலைத்திடும் வாரணாசியின் வழிகளிற் றொக்கார், சுந்தரமான யாத்திரையோர்கள் சோறுணும் மடமெனத் தொடுத்தான். (௧௪)

வந்தவர்தம்மை வகையுட னழைத்து வழங்குவான் கறிகளோடன்னம், பந்தியில் யாரும்முண்டபின்னந்தகக்றிவகையமிசமாமவனைத், தொந்தமாய்விஞ்சைத் துணிவினால் லழைக்க வுண்டதோர் வயற்றி னின்றுடனே, வந்துரங்கிழித்து வாவெனச்சொல்லுமுன் வருவன் வாதாபியென்பவனே. (௧௫)

இப்படியாக விருவரும் வழியி லெவரையுந் தீங்குசெய் திருந்தார், மைப்படு கும்பமுனிவனு மதுவேமார்க்கமென் றவ்வி டம் வந்தான். தப்பிலாமுனிக்குத் தக்கநல்விருந்து தந்துபின் றம் பியைக்கூவ, ஒப்பிலாமுனிவ னோர்ந்திதை யொழிக்கவுன்னி பே சீரண மென்றான். (௧௬)

மட்டிலான் சொன்ன மாற்றமுன் னவனும் மறலிதன் னுல கிடைப்புக்கான், விட்டிடாத்துணை வன் வெகுண்டயருமந்தா வேண் டிநன்முனிவனை வெகுவாய்ப் பட்ட துபாவம்போக்கிமுன்செய்து பாழ்வினையொழிந்தது வேண்டி, இட்டமாய் வேள்வி யியற்று வேனதற்குக் காவல்நீயிருவென விசைந்தான் (௧௭)

கொட்டமாயிருக்கு மசுரர்வாழ் நாளுநங் கொடும்பசித் தீயி னாலொழிந்தான், கட்டமாமிவனைக் கடந்ததமேல நினைத்து கண்ணு தலவனை யேகருதிச், சட்டமாய்வேள்விசமைத்தன னங்குச்சார்ச் சனர்வந்தவர்க்கெதிராய், இட்டமாம் வரமீந்தன மென்றானந்த வில்வலன் முனிவனையிருந்தான். (௧௮)

அப்பொழுதங்கே யகத்தியமாமலையமைந்தவன்பேரகத்தீச ன், செப்பிடும் முறைப்பேரருள்செய்பூரணி தான் சேயமூவத னையேகேட்டுத், தப்பிலாதவனாய்த் தனியனாய்த் துயரந்தாங்கிட வசமிலாதவனாய், இப்புவனத்திற் கிறைவனாய்ப் பின்னுஞ்சிறுவ னாயிருந்தமை யோர்ந்தான். (௧௯)

ஐயனே யிங்கு வழுகுரல் யாரோ வஞ்சலென்றவனை நீய ளிப்பாய், துய்யனே யென்று தூய வளுரைத்தாள் அர்க்கையை வென்றகாலோனும், கொய்யுநற்காலுங் கழுமுங்கூடிடவே குறு கினார்வளர்ந்ததக்குறையே, ஐயனு மெழுந்தே யரனடி பணிந் தே யண்ணலைப் பாடினா னனந்தம். (௨௦)

விண்ணவர்மலரின் மாரி விட்டிறைத்தார் வீணையை நார தன்றொடுத்தான், பண்முறை முனிவர் மங்களமறைந்தார் பல்வி யந்து வைத்தனர்பலகாற், கண்ணனுமயனுஞ் சுரரொடுவிண்ணா கண்டலன் முதலியோர் வந்தார், கண்ணுதலோனுங் கருணை செய் தளித்தான் காவலனிதனையே காணான். (௨௧)

MAHAMAHOPADHYAYA
... LIBRARY

புதுமையைக்கேட்ட புகழ் நரேந்திரனும் புகழ்மகன்றன்னையேபுல்லிச், சதிசெயும்மனையைக்கொலைசெயும்படியாய்ச் சாற்றினன்சகலமும்மறிந்தான், விதுவணிபரமன் விரும்பிவாழ்கோவில் விழைவுடன்றேடி வந்தடைந்து, அதிலுள கோவிலனைத்தையும் புதுக்கியழகுடன் றிருவிழாவமைத்தான். (உஉ)

நண்டதற்கருள்செய் நாதனல்லருளா லட்டினிற் றுன்பமுற்றோர்க, ளெண்டிசையுள்ளோரிங்கு வந்தமர்ந்தேகயெழினதிமூழ்கியே யென்னைக், கண்டுமை யோடுங் கருத்திலி விருத்திக் கைதொழு முனிவனைக் காணிற், பண்டுள குறைபோய்ப் பரகதி யடைவார் பாரெனப் பரமனும் பகர்ந்தான். (உங)

கண்டிலஞ்சிலதநக்தான் கொணர்ந்தேனும் கக்கதற்பணத்தினைலனுட, கொண்டதிலமுது கொடுத்திடிலொருவர் கொள்வதேயாயிரத்ததிகம், விண்டருமமர ருலகமேத்திடுவர் மேன்மைகொள் விமலனபாலடைவார், பண்டுபோலகாலுங் கைகளுங் கண்டபாலனைபட்டனருஞ் சேர்த்தே. (உச)

சத்தியன்னியே சற்குணன்றேபே சற்புத்ர சிகாமணிநீயே இந்தலமரசு செய்கென விதித்தே பிறையுமே நான் றவமுற்று துத்தமதலத்தின் பெருமைகளெல்லா முனைரமே புபதித்தனக்கு வித்தகமேவ பெருமவிளம்பினுமென்று விரித்தனர்புராணிகர்விளங்க. (உரு)

திருக்கரந்துறைப்படலமுற்றிற்று.

ஆக செய்யுள் கூஅஉ

---

## உபந்நியாசப்படலம்.

படித்திடுந் தலங்க ளெவையும் பாரிற் பகரினும் புனிதமென்றோங்கு, அடுத்ததை யன்பு வைத்தரன் பணியை யழகதாய்ச் செய்வரே யானால், கொடுத்திடும் பலன்கள் யாதுநீ ரதனைக் கோவையாய்க் கூறென வவனு, மெடுத்ததின் பெருமை யியம்புவேன்

வேறு.

மிக்கவெட்டொடு மெட்டெனுங் கலையினை விரிவாய்
தக்கு மிம்மொழித் தரணிபா லெவர்களு மறியச்
சிக்கு நற்பய னெவற்றையுஞ் சிந்திடா தெடுத்துப்
பக்குவத்துட னுரைத்தன னுள்ளத்திற் பதிய. (௨)

ஆன தாலதை யறிந்ததைக் கேட்டதை யளவாச்
சேனை சூழ்புவிக் கரசெனச் செப்புவே னுனக்கு
கான முந்துறு மாதியாந் துறைதனைக் கண்டு
தான மேசெய வாதியீச் சுரன்பதந் தாழே. (௩)

பெருத்தெ ழுந்திடும் பெரும்பொரு ளளித்திடும் பிசகாக்
கருத்தி னூற்றிடு வருத்தமுங் கடத்திடுங் கனலில்
உருத்திடு முள மருட்டினை யொருநொடி யோட்டும்
வருத்த வைம்புலன் வாடிவந் தவர்க்கவை வாங்கும். (௪)

பின்பு ரைத்திடு மாலயன் றுறை பெரும் பேற்றை
யன்பு றத்தரும் வலிமையு மேவிடு மகத்தோர்
தன்ப லத்தையுங் கொடுத்திடுந் தரணிசெய் வினையை
முன்ப கற்றிடில் மோக்கமு முடிவினிற் கொடுக்கும். (௫)

நல்ல மான்றுறை தலத்தையே நாடினின் றவர்க்குச்
சொல்லு நாரியுஞ் சுதருடன் வாழ்வுசுத் தமுமே
எல்லை யில்லுறுங் கள்வரு மவனிட மெய்தார்
மல்ல லம்புவி மன்னவ மனத்தினில் கொள்ளே. (௬)

தந்தை தாய்தருஞ் சாபமுந் தன்னைவிட் டோடு
நிந்தை யென்பது நெடுநிலத் திருந்திடா தொழியும்
முந்தை யோர்தம் பங்கின்மேற் பங்குகொண் முரணும்
புந்தி நேருறும் பிழைகளை விரைவினிற் போக்கும். (௭)

கஷ்ட நீக்கிடுங் கருதிய தளித்திடுங் காயக்
குஷ்ட நீக்கிடுங் கோகுலப் பதவியுங் கொடுக்குஞ்
சிஷ்ட ராமுனி வதிட்டன்றன் றுறையினைச் சேர்ந்தால்
இடி மாப்பலன் மாநிலத் தடைகுவ னினிதே. (௮)

காட்டு மித்தலங் கருதிய நூலறி வனைத்து
மீட்டு மிச்சையு மிறையவன் பதவியு மீயும்

மீட்டு நால்வகைச் சேனையு மேதினி முழுதும்
கூட்டி வைத்திடுங் குறுகிடு லவ்வரத் துறையே. (௯)

அன்றி யூக்கம தளித்திடு மாம்பல னெல்லா
மொன்று கூடிடு முளம்புறம் போகிடா துறையுங்
குன்றெ னும்புயமற்றதிற் குறைகெடுங் குணமாம்
வென்றி யில்லவ னிருப்பினு நினைப்பினும் விறலாம். (௧௦)

திருக் கரத்துறை யுறுபிணி யனைத்தையுந் தீர்க்கும்
பெருக்கும் வித்தையும் பெருகும் விஞ்ஞானமும் பிறங்கும்
செருக்குந் தீயவை யனைத்தையும் போக்குறுஞ் செல்வ
வருக்க மியாவையு மளித்திடுங் கடைத்துறை மன்னு. (௧௧)

விண்டவித்துறை யேழுமே முறைமையின் விழையக்
கொண்ட விட்டுறுங் குறிகளென் றுளந்தனிற்கோடி
விண்டு மார்க்கத்தைத் துறையென விளம்பினர் விழைவாய்க்
கண்டு கொண்டவர் வீடதைக் காணுவார் கருதில். (௧௨)

அன்னமா மடஞ் சத்திர மாலயஞ் சமைத்தோர்
சொன்ன கோபுர மேரிசூழ் பொய்கையே தடாகம்
பன்னும் வேதநற் பாடசாலைம்முதற் பலவு
முன்னி யாக்கினோ ரடைகுவர் முடிவினன் மோக்கம். (௧௩)

வேறு.

என்று மாதவ னியம்பலு மெழின்மிகு திரிபுவனன் றான்
துன்று மாலயந் திருமதிற் சூழுறைத் தேவர்தங்கோயி
லென்று கூவனுல் வீதிக ளுயர்தரு பூரலர்ச் சோலை
நன்று நாடக மண்டப நளிபுனற் றடமெலா மமைத்தே. (௧௪)

வேறு

நித்தியம் பூசை குறைவிலா திருக்க நிவேதனமமுதுநல்லெ
ண்ணை, சத்திய விளக்கோ டுள்ள வாகனமுஞ் சாத்திடு ரதமு
த லிவையும், எத்தல மேனு மிணையிலை யென்ன வேழ் பிரகார
முமெழிலாய்த்,தத்தமாயிவைக ணடைபெறு வதற்காச் சாச்வத
பூமியும் விட்டே. (௧௫)

வேறு.

காடுக ளழித்துப் போக்கிக் கனத்த பட்டணமாச் செய்தே
பீடுறும் பிழைகள் பார்க்கப் பெருமதிகாரி வைத்தே
நாடுமென்னகர மேக நல்விடை தருவீ ரென்றான்
வீடுநீ சேர வின்னே வேந்தனே யேகுகென்றான். (கசு)

சொந்தமா மூருக் கேகிச் சூழ்புவி யரசு செய்து
வந்தவவ் வரசன் றானும் வழிவழி குலத்தோர்க் கெல்லாம்
அந்தவேழ் துறைக் குந்தானே வாதிக்கம் பதிவு செய்தே
சிந்தனை செய்து வந்தான் செகத்துளோ ராருங்காண. (கஎ)

உபந்நியாசப்படலம் முற்றிற்று.

---

ஆரத்துறை நாதன்வாழி யடியார்க ளாரும் வாழி
நிரத்துறை யேழும்வாழி நேர்ந்துறை யுற்றார் வாழி
விரித்ததை யுரைத்தார் வாழி வேந்தன்மா மறைகள் வாழி
தரித்ததைப் பார்ப்போர் வாழி சகலமும் வாழியாமே. (க)

தேவர்கள் யாரும் வாழி திருநீறஞ்செழுத்தும் வாழி
மூவரும் வாழி பின்னு முத்தமிழ் நூலும் வாழி
யாவரும் வாழி யிந்தவரத்துறைப்புராணஞ் சொன்ன
பாவலர் கற்றோர் கேட்டோ ரெழுதினோர் படித்தோர் வாழி. ()

---

திருவரத்துறைப்புராணம் முற்றிற்று,
ஆக படலம் உ0.க்கு கூடிய செய்யுள் ருகூகூ.

# திருவரத்துறைபுராணம் பிழைதிருத்தம்,

| விபரம் | பக்கம் | பாட்டு | அடி | பிழையுள்ளது | பிழையில்லாதது |
|---|---|---|---|---|---|
| மூர்த்திவிசேடம் | 9 | 2 | 4 | சிவலிங்கையல்லாற் | சிவலிங்கையல்லாத் |
| முன்னோர்பாடல் | 7 | 2 | 3 | ராகபத்தவ | ராகயத்தவ |
| | ஷை | 3 | 4 | விரும்வீ | விரும்பி |
| நாட்டுப்படலம், | 9 | 4 | 4 | காயத்தின் | ராகராத்தின் |
| | 10 | 9 | 1 | சேடிமாரின் | சேடிமாதின் |
| | 15 | 6 | 1 | வதர | வராகனை |
| | 33 | 17 | 1 | பேசிரவிப்பிறுவ | பேசியரவியாஸ் |
| | 35 | 11 | 2 | பையமது | மையயமது |
| | 44 | 8 | 2 | சேறுன் | சென்றுன் |
| | 52 | 27 | 2 | சமனை | நமனை |
| | 57 | 10 | 4 | வறுத்திந்தாள் | அவிற்றீந்தாள் |
| | 59 | 19 | 4 | வாதாதி | கருதாதி |
| | ஷை | 21 | ஷை | குறைமன் | குறைகள் |